தி.ப
285

# கல்யாணப்

# பொருத்தங்கள்

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
இல. 7-57 ஆம் ஒழுங்கை
கொழும்பு 6

161
சங்க
SL/PR

பொ. சங்கரப்பிள்ளை
B. A. (Lond.), B. Com. (Hons.) (Lond.), M. Sc. (Econ.) (Lond.)

# கல்யாணப் பொருத்தங்கள்

— பொ. சங்கரப்பிள்ளை —
B. A. (Lond.), B. Com. (Hons.) (Lond.), M. Sc. (Econ.) (Lond.)

விநியோகத்தர் :
**விஜயலட்சுமி புத்தகசாலை,**
248, காலி வீதி : ; வெள்ளவத்தை,
கொழும்பு-6.
தொலைபேசி : 88930

முதற் பதிப்பு : ஏப்ரல், 1980.
(C)

விலை : ரூ. 8-00

அச்சுப் பதிவு :-
குமரன் அச்சகம்,
201, டாம் வீதி,
கொழும்பு-12.
தொலைபேசி : 21388

## ஆசிரியரின் வெளிவந்த பிற நூல்கள்

1. பெறுமதிக் கொள்கை (Theory of Value)
2. வேலை வாய்ப்பு, வட்டி, பணம் பற்றிய பொதுக் கொள்கை — ஜெ. எம். கீன்சு (மொழி பெயர்ப்பு)
   (Translation of the General Theory of Employment, Interest and Money — By J. M. Keynes)
3. பணம் — குறவுதர் (மொழிபெயர்ப்பு)
   (Translation of Money — By Crowther)
4. நாம் தமிழர்.

## வெளிவரவிருக்கும் நூல்கள்

1. வட இலங்கைப் பொருளாதார அபிவிருத்தி
2. அரசியற் சிந்தனைகள் (சர்வாதிகாரம், முதலாளித்துவம், பொதுவுடமை முதலியன பற்றிய கட்டுரைகள்)
3. சமூகவியற் சிந்தனைகள் (சாதிக்கட்டுப்பாடு, கல்யாணச் சந்தை முதலியன பற்றிய கட்டுரைகள்)
4. நான் யார்?
5. இனத்துரோகியின் சுயசரிதை.

# முன்னுரை

இக்காலத்திற் பலருக்குச் சோதிடத்தில் நம்பிக்கையில்லை. சோதிடத்தை ஏமாற்றுவித்தை யெனவும் மூடநம்பிக்கையெனவுங் கூறுகின்றனர். தம்மைத்தாமே பகுத்தறிவுகள் எனவும் விஞ்ஞானங்கள் எனவும் தம்பட்டம் அடிக்கின்றனர். சோதிடம் வேதாந்தங்களில் ஒன்றெனவும் அனுபவத்திலிருந்தும் ஞான யோகக் காட்சிகளிலிருந்தும் எம்முன்னோர் சோதிட விதிகளை வகுத்தனர் எனவும் வேறு பலர் கூறுகின்றனர். இக்கட்டுரை சோதிடத்தைப் பற்றியதன்று. சோதிடத்தின் உண்மை பொய் பற்றி வாதிக்க இங்கு இடமில்லை. சோதிடத்தை மறுக்கமுன் அதை நன்கு கற்க வேண்டும். அனுபவத்தோடு ஒப்பு நோக்கி ஆராய வேண்டும். இவ்வாறு செய்யாது மறுப்பது முட்டாள்தனமாகும். பகுத்தறிவுமாகாது. மறுதலையாக விளக்கமோ அனுபவச் சான்றோவில்லாது சோதிடர் கூறுவதையெல்லாம் நம்புவது பேதமையாகும். மூடநம்பிக்கையாகும்.

''எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும்
அப் பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு''

(திருக்குறள்)

இக்கட்டுரை கல்யாணப் பொருத்தங்களைப் பற்றியதாகும். சோதிடத்தில் நம்பிக்கையில்லாவிட்டாற் கல்யாணப் பொருத்தங்கள் பார்க்க வேண்டியதில்லை. சோதிடத்தில் நம்பிக்கையிருப்பினும், எமது கல்யாணப் பொருத்தங்களில் எவ்வளவு உண்மையுண்டு என்பது ஆராய்ச்சிக்குரியதாகும். சோதிட மாமேதைகள் பலரே இவற்றிற் பலவற்றை அர்த்தமற்ற சோடனைகள் என்கின்றனர். எமது சமுதாயத்தில் நாம் இப் பொருத்தங்களை நெடுங்காலம் பார்த்து வருவதனால் இவற்றைத் தொடர்ந்தும் பார்க்க வேண்டும் என்பதும் இவற்றைத் தற்காலத்துக்குதவாப் பழங்கதைகள் என மறுப்பதுந் தவறாகும். உண்மைக்குப் பழமையோ புதுமையோ வில்லை முடிபு கூற முன் ஆராய்ந்து பார்க்க வேண்டும். இக்கல்யாணப் பொருத்தங்களுக்குச் சோதிட அடிப்படையிலான விளக்கங்களென்ன? அனுபவச் சான்றுண்டா? இவற்றின் அடிப்படையிற் கல்யாணஞ் செய்யலாம் அல்லது செய்யப்படாது என்று சொல்லுமளவுக்கு இவை முக்கியமானவையா? இக்கட்டுரையை வாசித்தபின் வாசிப்போரே இக்கேள்விகளுக்கு விடையளிக்க வேண்டும்.



எந்நோக்கத்துடன் இக்கல்யாணப் பொருத்தங்களைப் பார்க்கிறோம். இல்லறம் நல்லறமென்பர்:-

''மங்கல மென்ப மனைமாட்சி மற்றத
னன்கல நன்மக்கட்பேறு'' (திருக்குறள்)

இல்லறத்தைச் சிறப்பாக நடத்துவதற்கு ஆணுக்கும் பெண்ணுக்குமிடையில் அன்பும் ஒற்றுமையும் இணக்கமும் வேண்டும். மேலும், எவ்வளவு ஒற்றுமையிருப்பினும் ஆயுள் ஆரோக்கியம், தனம், மாங்கல்யம், பாக்கியம், புத்திரரில்லாது இல்வாழ்க்கை சிறப்படையாது. குறித்த ஆணினதும் பெண்ணினதும் இல்வாழ்க்கை சிறப்பாக நடைபெறுமா என்பதைக் கல்யாணத்துக்கு முன்பே காண எத்தனிப்பது இயல்பான ஆவலாகும். இந்த இயல்பான ஆவலைப் பயன்படுத்திப் பலர் பொய்புனைந்து புராணங்கள் எழுதிப் பிழைக்கலாம். மக்களை ஏமாற்றலாம். பயமுறுத்தலாம்.

குறித்த ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் இருக்கக்கூடிய இணக்கத்தையும் ஒற்றுமையையும் காண்பதற்கு நான்கு வழிகளைச் சுட்டலாம் (அ) காதல் (ஆ) சாதகங்கள் பார்த்தல் (இ) கல்யாணப் பொருத்தங்கள் பார்த்தல் (ஈ) ஒத்த சமூக நிலை, கல்வி, பண்பாடு, சமயம்.

(அ) காதல்:- பண்டைத்தமிழர் சமுதாயத்தில் ஆண்களும் பெண்களும் தத்தம் துணைவரைத் தாமே தெரிவு செய்தனர். பண்டைத் தமிழர் காதல் வாழ்க்கையையும் வீர வாழ்க்கையையும் ஐந்திலங்களிலுஞ் சங்க நூல்கள் கூறுகின்றன. அக்காலத்தமிழர் கல்யாணப் பொருத்தங்கள் பார்க்கவுமில்லை; அவர்களுக்கு மறையோன் வழி காட்டவுமில்லை. இவை பிற்கால வழக்கங்களாகும். பேசிப் பழகிக் காதலுற்றுப் பெற்றோர் சம்மதத்துடன் ஊரார் அறியக் கல்யாணஞ் செய்தனர். சிலர் பெற்றோர் அறியாமலே காதலனுடன் சென்றனர்.

''பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்க''.

''மேலோர் மூவர்க்கும் புணர்ந்த கரணம்
கீழோர்க்கும் ஆகிய காலமும் உண்டே''

(தொல்காப்பியம்)

பத்துப் பொருத்தங்களைப் பார்க்கினும் பரஸ்பர காதல் சிறந்ததெனப் பிரஸ்ந மார்க்க கூறுகிறது. எனினும் பல காதற் கல்யாணங்

கள் விவாகரத்தில் முடிவடைவதையும் அன்பு பகையாவதையும் காண்கிறோம். எமது சமுதாயத்திற் பெற்றோர் பொருத்தம் பார்த்துப் பேசிச் செய்து வைக்குங் கல்யாணங்கள் பெரும்பாலும் நீடித்து நிலை பெற்றிருப்பதைக் காண்கிறோம். ஆதலால், நெடுந்தவணையில் இணக்கத்தையும் ஒற்றுமையையுங் காண்பதற்குக் கல்யாணப் பொருத்தங்கள் பார்க்க வேண்டுமெனச் சிலர் வாதிக்கின்றனர். மேனாடுகளிற் காதற் கல்யாணங்கள் முறிவடைவதற்கும் எமது சமுதாயத்திற் பொருத்தம் பார்த்துச் செய்து வைத்த கல்யாணங்கள் நிலைத்திருப்பதற்குங் காரணம் எமது பண்பாடேயன்றி இப்பொருத்தங்களல்ல. இஃது எவ்வாறாயினும், எமது வழக்கங் குருட்டுத்தனமானது. பல வேளைகளில் ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் சந்தித்துப் பேசி இணக்கந் தெரிவியாமலே கல்யாண ஒழுங்குகள் செய்கின்றனர். மேனாடுகளிலே போலக் காதல் நாடகமாடுவது எமது பண்பாட்டுக் கொவ்வாதிருக்கலாம். எனினும் ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் சந்தித்து இணக்கம் தெரிவித்த பின்னரே கல்யாண ஒழுங்குகள் செய்ய வேண்டும். இருவரின் மன இணக்கத்துக்கும் இடமளிக்க வேண்டும். இது போதுமா? மன இணக்கத்துடன் கல்யாணப் பொருத்தங்களையும் பார்ப்பது நன்றென வாதிக்கலாம்.

### (ஆ) சாதகங்கள் பார்த்தல்:

பலர் இன்று சாதகங்களைப் பார்ப்பதில்லை. இராசிக் குறிப்புகளிலிருந்து நட்சேந்திரங்களின் அடிப்படையிற் பஞ்சாங்கப் பொருத்தங்களைப் பார்த்து முடிவு செய்கின்றனர். ஏதோ மனத்திருப்திக்காகவோ சாக்குப் போக்காகவோ பார்க்கின்றனர் போலத் தோன்றுகிறது. வாழ்க்கையில் எல்லாக் காரியங்களையும் சாதகங்களிற் பார்க்கும் விதிமுறைகளை எமது சோதிட நூல்கள் நுணுக்கமாகக் கூறுகின்றன. 1ம் வீடு-உயிர் உடம்பு ஆரோக்கியம், குணம், வாழ்க்கையின் அத்திவாரம். 2ம் வீடு—குடும்பம், தனம், வாக்கு. 3ம் வீடு—சகோதரர், துணிவு, வீரம், ஆபரணம். 4ம் வீடு—மாதா, கல்வி சுகம், காணி, வீடு, வாகனம். 5ம் வீடு—புத்திரர், புத்தி, புண்ணியம். 6ம் வீடு—நோய் பகைவர். 7ம் வீடு—களத்திரம், திருமணம், பங்குடைமை 8ம் வீடு—ஆயுள், பெண்களுக்கு மாங்கல்ய ஸ்தானம், 9 வீடு—பிதா புண்ணியம், பாக்கியம். 10ம் வீடு—தொழில், பதவி, சம்பாத்தியம். 11ம் வீடு—மூத்த சகோதரர், இலாபம். 12ம் வீடு — சயனசுகம், கீர்த்தி, செலவு. ஒவ்வொரு காரியத்துக்குங் காரகக் கிரகமுமுண்டு. வீடு, அதிபர் காரகர் எனும் மூன்றின் அடிப்படையிலும் குறித்த காரியத்தைக் காண விதிமுறைகளுள. ஸ்திரீகளுக்கே விசேடமான சோதிட விதிகளுமுள. பல நல்ல கெட்ட யோகங்களுமுள. இவற்றை



யெல்லாம் புறக்கணித்துக் கல்யாணப் பொருத்தங்களிலிருந்து மட்டுமே ஆயுள், ஆரோக்கியம் குடும்பம், தனம், சுகம், களத்திரம், மாங்கல்யம் முதலியனவற்றை அறியலாமென்றாற் பொருந்துமா?

சாதகங்களைப் பாராது கல்யாணப் பொருத்தங்களை வற்புறுத்துவது அரிசியை விட்டு உமிக்குச் சண்டை போடுவதற்கு ஒப்பாகும். எனினும் எல்லாவற்றையுஞ் சாதங்கங்களிலிருந்து பார்க்கலாமாயினும், குறித்த ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலிருக்கக்கூடிய இணக்கத்தையும் ஒற்றுமையையும் தனிப்பட்ட சாதகங்களிலிருந்து அறிய முடியாதெனவும் இவற்றைக் காண்பதற்குக் கல்யாணப் பொருத்தங்களைப் பார்க்க வேண்டுமெனவும் வாதிக்கலாம்.

இப்பொருத்தங்கள் உண்மைகளாயினும், மன இணக்கத்தையும் ஒற்றுமையையும் மட்டுமே இவை காட்டலாம். இப்பொருத்தங்கள் இருந்தால் ஆயுள், ஆரோக்கியம், தனம் பதவி, புத்திரர் முதலியவை கிடைக்குமென எண்ணுவது பேதமையாகும். இவற்றுக்குச் சாதகங்களைப்பார்த்தல் முக்கியமானது, இப்பொருத்தங்களை மிகைநிரப்பியாகப் பார்க்கலாம். நல்ல சாதகங்களுடன் பொருத்தமும் இருப்பது நன்றாகும். பொருத்தமான பெண்ணைக் கல்யாணஞ் செய்வதனால், இல்லாத யோகங்கள் உண்டாகப் போவதில்லை. பொருத்தமில்லாப் பெண்ணைக் கல்யாணஞ் செய்தால் இருக்கும் யோகங்கள் அழியப்போவதில்லை. எமது கல்யாணப் பொருத்தங்களின் அடிப்படையில் மட்டுமே 'செய்யலாம் செய்யப்படாது'' என்ற முடிவுக்கு வரவியலாதெனக் கர்கி முனிவர் கூறுகிறார். எமது பஞ்சாங்கமே எச்சரிக்கை செய்கிறது. ''நட்சேத்திரங்களைத் கொண்டறியப்படும் பொருத்தங்களிலும் கிரக நிலையைக் கொண்டறியும் பொருத்தமே முக்கியமானது. ஆதலால் ஸ்திரீ புருஷர்களின் கிரக நிலைகளை நன்காராய்ந்தே பொருத்த நிச்சயஞ் செய்யவேண்டும்.''

### (இ) கல்யாணப் பொருத்தங்கள்:

இவற்றை ஒவ்வொன்றாகப் பின்பு ஆராய்வோம். ஆனாற் குறித்த பொருத்தமிருந்தால் உண்டாகும் நன்மை பற்றியும் இல்லாவிட்டால் உண்டாகும் தீமை பற்றியும் நூலுக்கு நூல் முரண்பாட்டைக் காண்கிறோம். இவற்றைப் புராணக் கதைகள் போலக் காலத்துக்குக்காலம் மிகைப்படுத்திக் கூறியிருக்கிறார்கள், எவ்வளவுக்கு ஒரு பொருத்தம் அடிப்படையற்ற கற்பனையோ அவ்வளவுக்குப் பயமுறுத்தல் அதிகமாக இருக்கிறது. ஆயுள் ஆரோக்கியம் தனம், புத்திரர் முதலியவை இப்பொருத்தங்களைப் பொறுத்தவையானாற் சோதிடமே வேண்டியதில்லை. மிகச் சுலபமாகக் கர்மத்தையே நாம் வென்று விடலாம். சந்

திரன் நின்ற இராசியும் நட்சேத்திரமுமே எமது பொருத்தங்கள் எல்லாவற்றுக்கும் அடிப்படையாகும். சந்திரன் மனோகாரகன் எனவும் இரு சந்திரர்களும் ஒத்திசைவாக அதிர்வுற்றாற் குடும்ப வாழ்க்கையில் இணக்கமும் ஒற்றுமையும் உண்டாகும் எனவும் எடுத்துக் கொண்டாலும், மன இணக்கத்தையும் ஒற்றுமையையும் மட்டுமே இப்பொருத்தங்கள் காட்டலாம். எமது சோதிடர் ஐந்து பொருத்தங்கள் இருந்தாற் கல்யாணஞ் செய்யலாம் என்கின்றனர். ஒவ்வொரு பொருத்தமும் வித்தியாசப்பட்ட விளைவிற்குக் காலாகின். இவ்வாறு கூறவியலாது. எல்லாப் பொருத்தங்களையும் வற்புறுத்தவேண்டும். ஐந்து பொருத்தங்கள் இருந்தாற் செய்யலாம் என்பதிலிருந்து, எல்லாப் பொருத்தங்களும் மன இணக்கத்தையும் ஒற்றுமையையும் காட்டுஞ் சுட்டிகள் என்பது தென்படை.

சந்திரன் நின்ற இராசி நட்சேத்திரத்திலிருந்து மட்டுமே மண வாழ்க்கையை நிருணயிக்க முடியாது. ஒவ்வொரு சாதகத்திலும் சூரியனுஞ் சந்திரனும் இலக்கினமும் முக்கியமானவை என்கிறோம். ஒவ்வோர் இலக்கினத்திற் பிறந்தவர்களினதுங் குணங்குறிகள் பற்றிச் சோதிட நூல்கள் பக்கம் பக்கமாகக் கூறுகின்றன. எமது சோதிடத்தில் இலக்கினமே முக்கியமானது. சந்திர விலக்கினத்தை மிகை நிரப்பியாக மட்டுமே பார்க்கிறோம். மன இணக்கத்தையும் ஒற்றுமையையுங் கவர்ச்சியையுங் காண்பதற்கு இலக்கினத்தின் அடிப்படையிலும் பொருத்தம் பார்க்க வேண்டுமல்லவா? கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் நட்பும் இணக்கமும் இருவருக்கிடையில் நட்பும் இணக்கமும் ஒத்தனவாகும். யார் யாருக்கிடையில் நட்புப் பெரும்பாலும் உண்டாகும் என்பதைச் சோதிட விதிகள் கூறுகின்றன:-

(i) உதய இலக்கினாதிபர் ஒருவராக அல்லது மித்துருக்களாக இருப்பின்.

(ii) நட்சேத்திரம், நட்சேத்திரபாதம்' ஜென்ம ராசி ஒன்றாகின்,

(iii) இராசியதிபர்கள் ஒருவராயின் அல்லது மித்துருக்களாயின்.

எனவே. பொருத்தம் பார்க்கும் போது, உதய இலக்கினத்தைப் புறக்கணிக்க முடியாது. மேனாட்டவர் சூரிய இராசியின் அடிப்படையிற் பொருத்தம் பார்க்கின்றனர். எமது முறை சரியானது அவர்களுடைய முறை தவறானது எனக் கூற முடியாது. இரண்டிலும் ஓரளவு உண்மை இருக்கலாம்.

(ஈ) ஒத்த சமூக நிலை, கல்வி, பண்பாடு, சமயம்;- மக்களின் கருத்துக்கள், நோக்கங்கள் முதலியனவற்றுக்கு அவர்களுடைய சமூகநிலை, கல்வி, பண்பாடு, சமயம் முதலியனவுங் காரணங்களாகும்.



காலஞ் செல்லச் செல்லக் குடும்ப வாழ்க்கையில் உடற் கவர்ச்சி குறைகின்றது. பிற்காலத்திற் பல பிணக்குகளுக்குக் கருத்து வேற்றுமைகளும் நோக்கங்களில் முரண்பாடுங் காரணங்களாகும்.

கல்யாணப் பொருத்தங்களைப் பலர் ஏளனஞ் செய்வதற்கு இவற்றைப் பார்ப்போரின் நடத்தை ஒரு காரணமாகும். இவற்றைப் பார்ப்பதற்குச் சோதிட அறிவோ, அதிக நேரமோ, சிரமமோ வேண்டியதில்லை. பஞ்சாங்கத்தைப் பார்த்து உத்தமம், மத்திமம், அதமம் என எழுதுகிறார்கள். ஐந்து உத்தமமாயின், செய்யலாம் என்பர். ஏதோவொரு குறித்த பொருத்தம் இல்லாவிட்டாற் சிலர் செய்யப்படாது எனப் பிடிவாதமாக நிற்பர். சரிக்கட்ட வேண்டுமானாற் சிலர் சரிக்கட்டித்தருவர். விளக்கங் கேட்டால் வீம்பு பேசுவர். சுலோகங்கள் பாடுவர். பெற்றோரைப் பயமுறுத்துவர். பொருத்தமானவற்றைப் பலர் பொருத்தமில்லாதவை என்கின்றனர் எனவும் பொருத்தமில்லாதனவற்றைப் பலர் பொருத்தமானவை என்கின்றனர் எனவுஞ் சோதிட மாமேதை கிருஷ்ணமூர்த்தி கூறுகின்றனர். சிக்கல்களைத் தீர ஆராய்ந்து சிந்தித்து முடிவு கூறுவதில்லை. ஓர் உதாரணத்தினால் இதை விளக்குவோம். சுக்கிரன் 7ம் வீட்டில் நிற்கிறான் என எடுத்துக் கொள்வோம். 7ம் வீட்டுச்சுக்கிரனுக்குச் சில சோதிட நூல்கள் நற்பலன்களும் சில சோதிட நூல்கள் கெட்ட பலன்களும் கூறுகின்றன. இது முதலாவது முரண்பாடாகும். காரகன்காரக வீட்டில் நிற்பது நல்லதன்று என்ற சோதிட விதியுமுண்டு. சுக்கிரன் களத்திரகாரகன். ஆதலாற் சுக்கிரன் 7ம் வீட்டில் இருப்பது நன்றன்று என மேலெழுந்த வாரியாகக் கூறலாம். ஆனாற் பெண்களுக்கு இது பொருந்துமா? ஏனென்றாற் பெண்களுக்குக் களத்திரகாரகன் வியாழன் எனச் சிலரும் செவ்வாயென வேறு சிலருங் கூறுகின்றனர். ஏழாம் வீடு சுக்கிரனுக்கு ஆட்சி அல்லது உச்ச வீடாகின் யோகமாகும் எனவும் இவ்விதி பொருந்தாது எனவுங் கூறுகின்றனர். இது மாளவிய யோகமாகும். சுக்கிரன் இலக்கினாதிபதியன் அல்லது யோக காரகனானால் 7ம் வீடு சிறப்படையாதா? சுக்கிரன் பத்தாதிபன் என எடுத்துக் கொள்வோம். பெண்களுக்குப் பத்தாதிபன் 7ம் வீட்டிலிருப்பின், பலன் பின்வருவதாகும். :‘கணவன் அதிட்டசாலியாவான். மிகவுயர்ந்த சமூக அந்தஸ்தும் பதவியும் அடைவான். இருவரும் இன்பமாக வாழ்வர்’’.

பஞ்சாங்கத்திலிருந்தே பொருத்தம் பார்க்கிறோம். ஈழத்திற் பெருவழக்கிலுள்ள பஞ்சாங்கங்கள் இரண்டாகும் - வாக்கியம், திருக்கணிதம். இவற்றிற் கூறப்பட்டனவற்றை அடிப்படையாகக் கொண்டே பொருத்தங்களை ஆராய்கிறேன். இரு பஞ்சாங்கங்களிடையிலும்

பல முரண்பாடுகளைக் காண்கிறோம். எல்லாப் பொருத்தங்களுக்கும் விதிவிலக்குகளுள. இவை யாவும் பஞ்சாங்கங்களிற் கொடுக்கப்படவில்லை. விதிவிலக்குகளை நோக்கும் போது பல பொருத்த விதிகள் அர்த்த மற்றவையாகின்றன. நூலுக்கு நூல் முரண்பாடுகளைக் காண்கிறோம். இதற்குட் பூச்சுமானங்கள், சோடனைகள் வைதீகக் கொள்கைகள் துவேஷங்கள் புகுத்தப்பட்டுவிட்டன. இப்பொருத்தங்கள் தர்க்க ரீதியாகச் சிந்திக்கப்பட்டு வகுக்கப்படவில்லை. காலத்துக்குக் காலங் கூட்டியுங் குறைத்தும் மிகைப்படுத்தியும் எழுதப்பட்டிருக்கின்றன. இவற்றிற் பலவற்றுக்குச் சோதிட விளக்கங் கூறவியலாது சோதிடத்திற்குள் ஒரு சிட்டுக்குருவிச் சோதிடம் போலிருக்கிறது. குடும்ப வாழ்க்கையை ஆராயும் பிரபல சோதிடர் கிரக நிலைகளின் அடிப்படையில் ஆராய்கிறார்களன்றி இப்பொருத்தங்களைக் குறிப்பிடுவதில்லை. இந்தியாவிலும் மலையாளத்திலே நான் கடுமையாகக் கல்யாணப் பொருத்தங்கள் பார்க்கின்றனர். இவ்வழக்கம் மலையாளத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்குப் பரவியிருக்கலாம்.

எனினும் இப்பொருத்தங்கள் எல்லாவற்றையும் கற்பனைகள் சோடனைகள் வைதிகப் புராணங்கள் எனப் புறக்கணிக்க முடியாது. சோதிடத்துடன் பல சோடனைகள் சேர்ந்து விட்டன. மணிகளுடன் பதர்கள் கலந்து விட்டன. பதர்களைக் களைந்து மணிகளை எடுக்க வேண்டும். இப்பொருத்தங்களைப் பார்ப்பதற்கு இலக்கினத்தையும் ஜன்ம நட்சேத்திரத்தையுஞ் சரியாகக் கணிக்க வேண்டும். இவற்றை எமது நாட்டுச் சோதிடர் பஞ்சாங்கங்களிலிருந்து குறிக்கின்றனர். கிரகநிலைகள் பஞ்சாங்கத்துக்குப் பஞ்சாங்கம் வித்தியாசப்படுகின்றன. எப்பஞ்சாங்கஞ் சரியானது? எவ்வாறு கிரக நிலைகள் கணிக்கப்படுகின்றன என்பதைப் பஞ்சாங்கத்தை வெளியிடுவோர் கூறுவதில்லை. மேனாட்டு வானியற் பஞ்சாங்கங்கள் கிரகங்களின் சயன நிலைகளைக் காட்டுகின்றன. அயனாம்சத்தைக் கழித்து நிராயண நிலைகளைக் காணலாம். ஆனால், அயனாம்சத்தைப் பற்றிய கருத்து வேற்றுமை சங்கடமாக இருக்கிறது. திருக்கணிதப்பஞ்சாங்கக் கிரக நிலைகளும், மேனாட்டு வானியற் பஞ்சாங்கங்களிலிருந்து அயனாம்சத்தைக் கழித்துப் பெற்ற கிரக நிலைகளும் பெரும்பாலும் ஏறக்குறைய ஒத்தனவாகும்.

இச்சிறு கட்டுரையிற் கல்யாணப் பொருத்தங்களுக்கு அடிப்படையான சோதிட விளக்கங்கள் காண எத்தனிக்கிறேன். விளக்கமில்லாவிட்டாலும், அனுபவச் சான்றிருப்பின் ஏற்றுக்கொள்ள வேண்டும். இத்துறையில் விளக்கங்கள் கூறுவதும் அனுபவச் சான்றுகள் காட்டுவதும் சோதிடரின் கடமையாகும். இவ்வாறு செய்யாது பிற்கால வைதிகப் பண்டிதரின் நூல்களிலிருந்து சுலோகங்கள்



பாடுவது குருடு குருடுக்கு வழிகாட்டுவது போலாகும். இப்பொருத்தங்கள் உண்மையற்றவை என்பதைக் காட்டப் பல உதாரணங்களைக் குறிப்பிடலாம். ஆனால், உண்மையை மறுப்பதற்கு இவ்வுதாரணங்கள் போதா. இவை விதிவிலக்குகளாக இருக்கலாம். சாதகங்களில் யோகங்கள் இருக்கலாம். மறுப்பதோ ஏற்றுக்கொள்வதோ எனது நோக்கமன்று. எல்லாவற்றையும் விருப்பு வெறுப்பின்றி ஆராய வேண்டும். முழுமையாகப் பார்க்கவேண்டும். ஒன்றிலிருந்து மட்டுமே முடிவு கூறமுடியாது.

இங்கு விதிவிலக்குகளை விரிவாகக் கூறுகிறேன். முரண்பாடுகளை எடுத்துக்காட்டுகிறேன். எவரின் பிழைப்பையாவது கெடுப்பது எனது நோக்கமன்று. பொருத்தம் பற்றிச் சோதிடர் முடிவு கூறுவதற்கு முன் இவர்கள் சோதிடத்தை நன்கு கற்கவேண்டும். ஆராய்ச்சிகள் செய்யவேண்டும். தமது முடிவுக்கு விளக்கங் கூறவேண்டும். கல்யாணப் பொருத்தங்கள் பற்றிய சில நூல்களின் பெயர்களை இறுதியிற் கொடுக்கிறேன். ஐந்தாம் அதிகாரத்தில் மேனாட்டவர் பார்க்கும் பொருத்தங்களிற் சிலவற்றைச் சுருக்கமாகக் கூறுகிறேன். இக்காலத்தில் எமது சோதிடரிற் சிலர் மேனாட்டுச் சோதிட விதிகள் சிலவற்றையுஞ் சேர்க்கின்றனர். விளக்கங் காண எத்தனிப்பதன்றி முடிவு கூறுவது எனது நோக்கமன்று. எனினும், ஈற்றில் எனது அபிப்பிராயங்களைக் கூறுகிறேன். இவை முடிந்த முடிவன்று. மேலும் ஆராய்ச்சிக்குரிய வைத்துக்கோடல்களாகும். சுருக்கமாக எனது அபிப்பிராயங்களாவன :

(அ) கல்யாணப் பொருத்தங்களைப் பார்க்கினுஞ் சாதகங்களைப் பார்த்தல் முக்கியமானதாகும்.

(ஆ) கல்யாணப் பொருத்தங்கள் உண்மைகளாயினும் மன இணக்கம் ஒன்றை மட்டுமே இவை காட்டலாம்.

(இ) இவற்றிற் பல விளக்கமோ அனுபவச் சான்றோவற்ற சோடனைகள்.

(ஈ) சிலவற்றை மிகை நிரப்பியாகப் பார்ப்பது நன்று. ஆனால் இப்பொருத்தங்கள் இருந்தால் ஆயுள் ஆரோக்கியம் செல்வம் புத்திரர் கிடைக்குமென எண்ணுவது பேதமை.

(உ) பொருத்தங்களுக்கு நாம் கொடுக்கும் முக்கியத்துவம் தவறானது. மூடநம்பிக்கை. பார்க்கின் பகுத்தறிவுடன் பாருங்கள். அற்பன்களுக்கு இழு பறிப்பட வேண்டாம். முக்கியமானவற்றைப் பாருங்கள். சந்தேகம் இருப்பின் சாதகங்களைப் பாருங்கள். ஆணினதும் பெண்ணினதும் மன விருப்பங்களுக்கு இடமளியுங்கள்.

கேரள சோதிடர் 27 பொருத்தங்களைக் குறிப்பிடுகின்றனர். மேலுமிருக்கலாம். எமது பஞ்சாங்கத்திற் 14 பொருத்தங்கள் கொடுக்கப்படுகின்றன (1) கிரக தோஷம் (2) நட்சேத்திரம் (3) கணம் (4) மகேந்திரம் (5) ஸ்திரீதீர்க்கம் (6) யோனி (7) இராசி (8) இராசியதிபர் (9) வசியம் (10) இரச்சு (11) வேதை (12) விருட்சம் (13) ஆயுள் (14) புத்திரர். கிரக தோஷமும் புத்திரருஞ் சாதகங்களிற் சோதிட விதிகளின்படி பார்க்கப்படுகின்றன. விருட்சமும் ஆயுளும் மிகச் சிலரே இக்காலத்திற் பார்க்கின்றனர். எனவே, பொருத்தங்கள் பத்தென்பர்.

எமது பஞ்சாங்கங்களில் இன்று கொடுக்கப்படாத பொருத்தங்களாவன;. (15) நாடி (இது திருக்கணிதத்திற் கொடுக்கப்படுகிறது) (16) இலிங்கம் (17) வருணம் (18) கோத்திரம் (19) சாதி (20) ஆயம் (21) பஞ்சபட்சி (22) யோகினி (23) பஞ்சபூதம் (24) சந்திரகூடம் (25) தேசப் பிரதானம் (26) வருணப்பிரதானம் (27) நாம நட்சேத்திரம். 1960க்கு முற்பட்ட சில பஞ்சாங்கங்களில் இவற்றையுங் காணலாம். இன்று நாம் ஈழத்திற் பத்துப் பொருத்தங்களையுங் கிரக தோஷத்தையும் புத்திரரையும் பார்க்கிறோம். சிலர் நாடியையும் பார்க்கின்றனர். ஏனையவற்றை மறந்து விட்டோம். சுமை குறைத்துவிட்டது. வடஇந்தியர் நாடியை மிகமுக்கியமான பொருத்தமாகக் கருதுகின்றனர், நாம் முக்கியமானவையாகக் கருதும் இரச்சும் வேதையும் அவர்கள் பார்ப்பதில்லை. இவை பழைய நூல்களிற் குறிப்பிடப்படவில்லை.

பொ. சங்கரப்பிள்ளை

முதலாம் அதிகாரம்

# நட்சேத்திரங்களின் அடிப்படையிலான பொருத்தங்கள்

## 1. நட்சேத்திரப் பொருத்தம்

"பெண் நட்சேத்திரம் முதல் புருஷ நட்சேத்திரம் வரையும் இரண்டையுஞ் சேர்த்து எண்ணிக்கண்ட தொகை. 2, 4, 6, 8, 9, 11, 13, 15, 17, 18, 20, 22, 24, 26 என்பனவற்றுள் ஒன்றுயினும் 27வது நட்சேத்திரம் ஏகராசியாயினும் உத்தமம். 12ம் நட்சேத்திரத்தின் 2, 3, 4ங் கால்களும், 14ம் நட்சேத்திரத்தின் 1, 2, 3ங் கால்களும், 16ம் நட்சேத்திரத்தின் 1, 2, 4ங் கால்களும், 21, 23, 25ம் நட்சேத்திரங்களும் மத்திமம். ஏனைய நட்சேத்திரங்களாயின் பொருந்தா. பெண் நட்சேத்திர பாதத்திலிருந்து 88ம் பாதம் 22வது அல்லது 23வது நட்சேத்திரத்தில் அமையின் அது வைநாசிகம் என்று நீக்கப்படும்." (வாக்கிய பஞ்சாங்கம்).

இரண்டாம் மூன்றும் பரியாயங்களிற் பொருந்தா நட்சேத்திரங்கள் பற்றிக் கருத்து வேற்றுமைகளைக் காண்கிறோம். "முதல் ஒன்பதில் 2, 4, 6, 8, 9ம் நாட்களும், இரண்டாம் ஒன்பதில் 8ம் நாளொழித்து மற்றை நாட்களும், மூன்றும் ஒன்பதில் 4ம், 9ம் நாளொழித்து மற்றை நாட்களும் ஏற்றுக்கொள்ளலாம்" - விதானமாலை. வாக்கிய அட்டவணையிலுள்ள பின்வருவனவற்றைப் பொருந்தாதவையாகத் திருக்கணிதங் குறிப்பிடுகிறது. 17, 21, 22, 23, 25, 27ம் நட்சேத்திரங்களும். அட்டமராசி நட்சேத்திரங்களும் இரண்டாம் பரியாயத்திற் சில கால்களைத் தவிர்த்து 12, 14, 16ம் நட்சேத்திரங்கள் மத்திமமானல் 21, 23, 25ம் நட்சேத்திரங்கள் பொருந்தாமைக்குக் காரணமென்ன? ஒரு காலத்திற் சிலர் ஆண் நட்சேத்திரத்திலிருந்து பெண் நட்சேத்திரம் வரையும் எண்ணினர். ஆனல் இன்று இவ்வழக்கமில்லை. பெண் நட்சேத்திரத்திலிருந்து எண்ணினுற் பொருத்தமான நட்சேத்திரங்கள் ஆண் நட்சேத்திரத்திலிருந்து எண்ணினுற் பெரும்பாலும் பொருந்தா. சோதித்துப் பாருங்கள்.

பெண் நட்சேத்திரத்திலிருந்து எண்ணிக் கண்ட தொகைகள் மூன்று பரியாயங்கள் அல்லது கண்டங்களாகப் பிரிக்கப்படுகின்றன. முதலாவது பரியாயம் 1-9. இரண்டாவது 10-18. மூன்ருவது 19-27. இரண்டாம் மூன்றும் பரியாயங்களாயின் எண்ணிக் கண்ட தொகையை ஒன்பதிஞற் பிரிக்க வரும் எச்சத்தை நட்சேத்திர எண்ணுக எடுத்துக் கொள்ளலாம். எல்லாப் பரியாயங்களிலும் 2, 4, 6, 8, 9ம் நட்சேத்திரங்கள் பொருத்தமானவை. 2 - சம்பத்து; 4 - சுகம்; 6 - சாதகம்; 8 - நட்பு; 9 - அதி நட்பு. 3ம், 5ம், 7ம் நட்சேத்திரங்கள் பொருத்தமில்லாதவை. 3 - அபாயம்; 5 - விரும்பத் தகாதது; 7 - வாதம். முதலாவது பரியாயத்தில் 3, 5, 7ம் நட்சேத்திரங்கள் முற்ருகத் தவிர்க்கப்படுகின்றன. மேஞட்டவர் 5வது நட்சேத்திரத்தைச் சிறந்த பொருத்தமாகக் கருதுகின்றனர். 7வது நட்சேத்திரத்துக்குத்தானும் மகாரிஷி காசியப்பர் பின்வரும் விதிவிலக்குகள் கூறுகிருர் :

(அ) புனர்பூசப் பெண் அத்தம் ஆணை மணந்தாற் - சந்தோஷம், சுகம், புத்திரபாக்கியம்,

(ஆ) பரணிப் பெண் பூசம் ஆணை மணந்தாற் - பாக்கியவதியாவாள்.

(இ) உத்திராடப் பெண் ரேவதி ஆணை மணந்தால் எல்லா இன்பங்களையும் அடைவாள்.

(ஈ) பூராடப் பெண் உத்திரட்டாதி ஆணை மணந்தாற் கணவனின் அன்பைப் பெற்று இன்பமாக வாழ்வாள்.

(உ) ரோகிணிப் பெண் மகம் ஆணை மணந்தால் அநேக ஆண் பிள்ளைகள் பிறப்பர்.

(ஊ) பூரட்டாதிப் பெண் ரோகிணி ஆணை மணந்தால் அநேக பிள்ளைகள் பிறப்பர்.

(எ) உத்திரப் பெண் கேட்டை ஆணை மணந்தால் எல்லாப் பாக்கியங்களையும் பெறுவாள்.

திருவாதிரைப் பெண் உத்திரம் ஆணையும் பூரப் பெண் அனுஷம் ஆணையும் மணக்கலாமெனக் காலவிதானம் கூறுகிறது.

பஞ்சாங்கத்தின்படி 10வது, 19வது அனுஜன்ம திரிஜன்ம நட்சேத்திரங்கள் பொருந்தாதவையாகும். கிருஷ்ணமூர்த்தி இவற்றை மத்திமம் என்கின்றனர். இவற்றிற்கு இரச்சுப் பொருத்தமில்லை. மகேந்திரப் பொருத்தமும் இராசியாதிபர் பொருத்தமும் இருக்கும். சிலர் பொருத்தமான நட்சேத்திரங்களிடையிலும் உத்தமம் மத்திமங் காண்கின்றனர்: உத்தமம் - 4, 13, 22; 6, 15, 24; 9, 18, 27. மத்திமம் - 2, 11, 20; 8, 17, 26. சிறப்புக் காண வேண்டுமாஞல் 4, 13 (வைநாசிகம் தவிர்ந்த) 22 முதலியனவையே மிகச் சிறந்தவை எனலாம் இவற்றுக்கு நட்சேத்திரப் பொருத்தமும் மகேந்திரப் பொருத்தமும் இருக்கும். (ஆயுள், ஆரோக்கியம், புத்திரர், புத்திரர் சுபிட்சம்). மேலும் 13ம் நட்சேத்திரம் பெரும்பாலுஞ் சம சப்தமத்தில் இருக்கலாம்.

27வது நட்சேத்திரம் : விதானமாலையும் திருக்கணிதமும் 27ம் நட்சேத்திரம் பொருந்தாதென்கின்றன. இரண்டு நட்சேத்திரங்களும் ஒரு இராசிக்குள் இருப்பின் 27ம் நட்சேத்திரம் பொருந்துமென வாக்கியங் கூறுகிறது. எது சரி? எப் பரியாயத்திலும் 9வது நட்சேத்திரம் அதி நட்பு. மூன்ருவது பரியாயமாயின் ஏன் பொருந்தாது? மேலும் இராசியதிபர் ஒருவராயின் நட்சேத்திரப் பொருத்தம் பார்க்கவேண்டியதில்லை.

ஏக நட்சேத்திரம் : ஏக நட்சேத்திரம், ஏகவிராசி, ஏகவிலக்கனமாக இருந்தால், நட்பும் ஒற்றுமையும் இருக்குமென்பது சோதிட விதியாகும். ஏக நட்சேத்திரமாயின் பொருத்தம் பார்க்கவியலாது. எனினும், சில ஏக நட்சேத்திரங்கள் உத்தமம், சில மத்திமம், சில அதமம் என வகுக்கின்றனர். அடிப்படை விளக்கமில்லை. முரண்பட்ட கருத்துக்களையுங் காண்கிறோம்.

**உத்தமம்:—** "ரோகிணி, திருவாதிரை, மகம், அத்தம், விசாகம், திருவோணம், உத்திராட்டாதி, ரேவதி" — (வாக்கிய பஞ்சாங்கம்), விசாகம் தவிர்ந்த ஏனைய நட்சேத்திரங்கள் ஒரே இராசிக்குள் இருக்கின்றன. திருக்கணிதம் விசாகத்தைத் தவிர்த்துப் பூசத்தைச் சேர்க்கிறது, பூசம் ஒரே இராசிக்குட்பட்டது.

**மத்திமம்:—** அச்சுவினி, கார்த்திகை, மிருகசீரிடம், புனர்பூசம், உத்திரம், சித்திரை அனுஷம், பூராடம், உத்திராடம் - (வாக்கியம்), இவற்றில் அச்சுவினி, பூரம் அனுஷம், பூராடம் உத்திராடம் ஒரே இராசிக்குட்பட்டவை. திருக்கணிதம் பூரத்தையும் பூராடத்தையும் அதமத்திற் சேர்க்கிறது.

**அதமம்:—** பரணி, பூசம், ஆயிலியம், சுவாதி, கேட்டை, மூலம், அவிட்டம், சதயம், பூரட்டாதி (வாக்கியம்) இத் தொகுதியிற் திருக்கணிதம் பூசத்தைத் தவிர்க்கிறது. பூரம், பூராடத்தைச் சேர்க்கிறது.

கிருஷ்ணமூர்த்தி பூசத்தை மத்திமத்திற் சேர்க்கிறார். காலவிதானம் ஆயிலியத்தை உத்தமத்திற் சேர்க்கிறது. காலாமிர்தம் சுவாதி, அவிட்டம், பூரட்டாதி ஏக நட்சேத்திரமாயின் உத்தமம் என்கிறது. பரணி, கேட்டை, மூலம், சதயம் எனும் நாலும் ஏக நட்சேத்திரமாயின் பொருந்தாவென்பது யாவருக்கும் உடன்பாடாகும்.

ஏக நட்சேத்திரப் பொருத்தத்துக்கு மேலும் இரண்டு விசேட விதிகளுள. ஒன்று சந்திரர்களின் இராசியைப் பற்றியது. மற்றது நட்சேத்திர பாதத்தைப் பற்றியது.

(அ) இராசிகளைப் பற்றி மூன்று முரண்பட்ட கருத்துக்களைக் காண்கிறோம்.

(i) இராசிகள் வித்தியாசப்படின் பெண் முதலாம் ராசியும் புருஷன் இரண்டாம் இராசியுமாக இருக்க வேண்டும் — கிருஷ்ணமூர்த்தி. இஃது அச்சுப்பிழையாக இருக்கலாம்?

(ii) ஏக நட்சேத்திரம் இரண்டு இராசிகளுக்குப் பங்குபட்டதாயின், முதல் இராசி ஆணுக்காயின் நன்று. பெண்ணுக்காயின் நீக்கப்படும் — பஞ்சாங்கம். இவ்விதி கார்த்திகை, மிருகசீரிடம், புனர்பூசம், உத்திரம் சித்திரை முதலிய ஐந்து நட்சேத்திரங்களையும் பற்றியதாகும். இஃது ஆணின் பாதம் முன்னிற்க வேண்டும் என்பதுடனும் 12ம் இராசி பொருத்தமானது என்பதுடனும் இணக்க முடையது, ஆனால் 12ம் இராசி பொருத்தமற்றது என்பது மேனாட்டவரினதும் எமது சோதிடர் பலரினதும் கருத்தாகும். மேலும், ஆணின் சந்திரன் முன்னிற்பின், இரண்டும் ஒரே இராசிக்குள் அல்லது ஆணின் சந்திரன் 12ம் இராசியில் இருக்க வேண்டும். விதி அனுவசியமாகும்.

(iii) இரண்டும் ஒரே இராசிக்குள் இருக்க வேண்டும்.

(ஆ) ஆணின் பாதம் பெண்ணின் பாதத்திற்கு முன்னிற்க வேண்டும் என்பதற்குப் பெண் ஆணிற்குக் கீழ்ப் பட்டவள் என்ற வைதிகம் அடிப்படையாக இருக்கலாம். இக்காலத்தில் நாம் சந்திரர்களின் நிலையைப் பாகைகளிற் கணிக்கிறோம். அவ்வாறாயின் பாதம் ஒன்றாயினும் பாகையில் ஆணின் சந்திரன் முன்னின்றால் இந்நிபந்தனையைத் திருப்தி செய்யலாமல்லவா?



நட்சேத்திரப் பொருத்தத்துக்கு விதிவிலக்கு:—

ஆணினதோ பெண்ணினதோ நட்சேத்திரம் மிருக சீரிடம், மகம், உத்திரம், அத்தம், சுவாதி, அனுஷம், உத்திராடம், உத்திரட்டாதி எனும் எட்டில் ஒன்றாயின் நட்சேத்திரப் பொருத்தம் பார்க்க வேண்டியதில்லை என்கின்றனர். இவர்களும் 7வது நட்சேத்திரத்தைத் தவிர்ப்பது நன்றாகும். இங்கும் ஒரு முரண்பாட்டைக் காண்கிறோம். சுவாதி ஏகநட்சேத்திரமானால், அதமம். சுவாதி நட்சேத்திரமாயின் நட்சேத்திரப் பொருத்தம் பார்க்கவேண்டியதில்லையாயின், சுவாதி ஏக நட்சேத்திரமாயினுங் கல்யாணஞ் செய்யலாமல்லவா?

பஞ்சாங்கங்களிற் கொடுக்கப்படும் தாராபலனும் நட்சேத்திரப் பொருத்தமும் ஒன்றாக இருக்கின்றன. "ஜென்ம நட்சேத்திரம் முதலாகச் சந்திரன் நிற்கும் நட்சேத்திரம் வரையும் எண்ணிக் கண்ட தொகை 2, 4, 6, 8, 9, 11, 13, 15, 17, 18, 20, 22, 24, 26, 27 ஆயின் சுபகாரியங்களுக்கு உத்தமம்: 12ம் நாளின் 2, 3, 4ங் கால்களும் 14ம் நாளின், 1, 2, 3ங் கால்களும் 16ம் நாளின் 1, 2, 4ங் கால்களும் 21, 23, 25ம் நாள்களுமாயின் மத்திமம் இதிற் சொல்லப்படாதனவும் வைநாசிக நட்சேத்திரமும் 12ம் இராசிக்கமைந்த 27ம் நாளும் சுப கருமங்களுக்கு விலக்கப்படும்". இச்சந்திர கோசர பலனைப் பிற்காலத்தில் யாரோ நட்சேத்திரப் பொருத்தமாகச் சோடித்திருக்கலாமா என்பது ஆராய்ச்சிக்குரியதாகும். கோசர பலன் எவ்வளவுக்கு உண்மையானது? இதைத் தினசரிகளிற் படிக்கிறோம். கோசரத்திற்குச் சோதிடர் வித்தியாசப்பட்ட விளக்கங் கொடுப்பதையுங் காண்கிறோம். இஃது எவ்வாறாயினும், முகூர்த்தத்துக்கு வகுக்கப்பட்ட கோசர பலனைக் கல்யாணப் பொருத்தம் பார்ப்பதற்குப் பயன்படுத்துவது சரியாகுமா?

நட்சேத்திரப் பொருத்தம் இருந்தாற் கணவனும் மனைவியும் நீடித்த ஆயுளும் ஆரோக்கியமும் பெறுவர் என்கின்றனர். சோதிடத்தில் நம்பிக்கையிருப்பினும் ஆயுளையும் ஆரோக்கியத்தையும் சாதகங்களில் அல்லவா பார்க்க வேண்டும்? ஒருவனுக்கு அற்ப அல்லது மத்திம ஆயுளாயின், இப்பொருத்தமுடைய பெண்ணை மணஞ் செய்வதினால் அவனுடைய ஆயுள் நீடிக்குமா எனவும் ஒருவனுக்கு நீடித்த ஆயுளாயின் இப் பொருத்தமில்லாப் பெண்ணை மணஞ் செய்வதினால் அவனுடைய ஆயுள் குறையுமா எனவும் பிரபல சோதிடரே கேட்கின்றனர். நட்சேத்திரப் பொருத்தத்துக்கு அடிப்படையான சோதிட விதி விளக்கமென்ன? இது நட்சேத்திரங்களிடையிலுள்ள உறவை அல்லது பகையைப் பொறுத்ததன்று. மேனாட்டுச் சோதிடத்தைப் போன்று பார்வையின் அடிப்படையிலுமன்று. இரண்டையுஞ் சேர்த்து எண்ணிக் கண்ட தொகையின் அடிப்படையில் வகுக்கப்பட்டிருக்கிறது.

இஃது ஒருவகை எண் சோதிடமா? விளக்கமில்லா விட்டாலும் அனுபவச் சான்றுண்டா? கிளிப்பிள்ளை போலச் சுலோகங்களைத் திரும்பத் திரும்பச் சொல்லாது சோதிடர் ஆராய்ச்சி செய்து சான்றுகள் காட்டி உண்மையை நிரூபிக்க வேண்டும்.

குருட்டுப் பழமொழிகள் :- ஆண் எந்நட்சேத்திரமாயினுங் குற்றமில்லை. சில நட்சேத்திரங்களிற்பிறந்த பெண்கள் கேடு விளைவிப்பர் என்கின்றனர். எல்லாப் பழிகளையுங் குடும்பத்துக்கு வந்தவள் மேற்சுமத்துகிறோம். கிழட்டு அப்பனுக்குத் தடிமன் என்றாலும் வந்தவள் அபாக்கியவதி என்கிறோம். ''ஆண் மூலம் அரசாளும், பெண் மூலம் பிச்சையெடுக்கும்'' இப்படிப்பட்ட அனுபவத்துக்கு ஒவ்வாத பழமொழிகள் பலவுள. பல நூல்கள் மாதம், வாரம், திதி, நட்சேத்திரம், யோகம், கரணம் முதலியவற்றுக்கும் பலன் கூறுகின்றன.

சில நட்சேத்திரங்களிற் பிறந்த பெண்களுக்கு விஷ கன்னிகள் அவயோகிகள் பட்டஞ் சூட்டுகிறோம். இவற்றைத்தானுஞ் சரியாகத் தெரியாது அனுவசியமாகப் பழி சுமத்துகிறோம். சனிக்கிழமை—ஆயிலியம்—துவிதியைத்திதி, ஞாயிறு—சுவாதி—திருதி, செவ்வாய்—சதயம்—சப்தமி விஷகன்னிகா தோஷம் என்கின்றனர். ஞாயிறு—துவாதசி—சதயம், செவ்வாய்—சப்தமி—விசாகம், சனி—துவிதியை—ஆயிலியம் விஷயோகத்தைத் தரக்கூடியவையாம். ஞாயிறும் பரணியும், திங்களுஞ் சித்திரையும், செவ்வாயும் உத்திராடமும், புதனும் அவிட்டமும், வியாழனுங் கேட்டையும், வெள்ளியும் பூராடமும், சனியும் ரேவதியும் விஷநாட்களாம். நூலுக்கு நூல் விஷ கன்னிகளும் அவயோகிகளும் வித்தியாசப்படுகின்றனர். மேலும் குறித்த நட்சேத்திரம், நாள், திதி மூன்றும் ஒருங்குசேரின் மட்டுமே விஷ கன்னிகையாகும். சாதாரணமாக நாளையுந் திதியையுங் கவனியாது நட்சேத்திரத்தின் அடிப்படையில் மட்டுமே விஷகன்னிகைப் பட்டஞ் சூட்டுவோரும் உளர்.

கால விதானத்தின்படி, மூலம், ஆயிலியம், கேட்டை, விசாகம் முதலிய நான்கு நட்சேத்திரங்களினதுங் குறித்த பாதங்களிற் பிறந்த பெண்கள் தோஷமுடையவராகக் கருதப்படுகின்றனர்.

மூலம் - 1ம்பாதம்-கணவனின் தகப்பனுடையஆயுளுக்கு ஆபத்து.

ஆயிலியம் - 1ம் பாதம் - கணவனின் தாய்க்குக் கேடு.

கேட்டை - 1ம் பாதம்— கணவனுடைய மூத்த சகோதரனுக்கு அபாயம்.

விசாகம்-4ம் பாதம்-கணவனுடைய இளையசகோதரனுக்குக் கேடு.



ஒரு பெண்ணின் நட்சேத்திரம் இவற்றில் ஒன்றெனக் கேட்டவுடன் பாதத்தைத்தானும் பார்க்காது ''இக்கல்யாணம் வேண்டாம் வேண்டாம்'' எனப் பலர் பயந்து பதறுகின்றனர். இப்பாதங்களிற்றானும் பிறந்த பெண்களின் வாழ்க்கையிற் குறித்த சம்பவங்கள் தவறாது நடந்திருக்கின்றனவா? ஏனைய பெண்களின் வாழ்க்கையில் இவை நடைபெறுவதில்லையா? ஜாதகபரிஜாதம் பலதீபிகை முதலிய நூல்கள் ஏனைய நட்சேத்திரங்களின் சில பாதங்களையுந் தோஷமுடையனவாகக் குறிப்பிடுகின்றன—அச்சுவினி, பூசம், உத்திரட்டாதி, ரேவதி, பூராடம், உத்திராடம், சித்திரை, பரணி, அத்தம் இவற்றை இன்று நாம் கவனிப்பதில்லை. கால விதானங் குறிப்பிடும் நான்கு நட்சேத்திரங்களையும் ஏன் குறை கூறவேண்டும்? மேலும் சோதிட நூல்கள் தோஷமுடையவையாகக் குறிப்பிடுவது சில நட்சேத்திரங்களின் சந்திகளாக இருக்கலாம். சுலபத்திற்காகச் சந்திகளைப் பாதங்களாக்கி விட்டனர். சந்தியின் வீச்சு $\frac{1}{2}°$ க்கு உட்பட்டதாகும். பாதத்தின் வீச்சு 3°.20' ஆகும்.

## 2. கணப்பொருத்தம்

பஞ்சாங்கங்களில் நட்சேத்திரங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்குங் கணத்தை Iவது அட்டவணையிற் காணலாம். நட்சேத்திரங்கள் மூன்று கணங்களாக வகுக்கப்படுகின்றன —(1) அச்சுவினி, மிருகசீரிடம் புனர்பூசம், பூசம், அத்தம், சுவாதி, அனுஷம் திருவோணம், ரேவதி (9) தேவகணம். (2) பரணி, ரோகிணி, திருவாதிரை, பூரம், உத்திரம், பூராடம், உத்திராடம், பூரட்டாதி, உத்திரட்டாதி-(9) மனுஷகணம் (3) கார்த்திகை, ஆயிலியம், மகம், சித்திரை, விசாகம், கேட்டை, மூலம், அவிட்டம், சதயம்—(9) இராட்சதகணம்.

கணம் என்பதற்குச் சிலர் குணமென விளக்கங் கொடுக்கின்றனர். (1) ரஜோ—இராட்சதகுணம் (2) தமோ—மனுஷகுணம் (3) சத்துவம்—தேவகுணம். ரஜோ குணமுடைவர் வெடு வெடுப்புடையவராகவும், கடுங் கோபக்காரராகவும், எண்ணாது துணிபவராகவும் வன்செயலாளராகவும் இருப்பர். தமோ குணமுடையவர் சோம்பிகளாகவும், ஆர்வமில்லாதவர்களாகவும், கவனக்குறைவானவர்களாகவும் இருப்பர். சத்துவ குணமுடையவர் உயர்பண்பாளராகவும், உண்மை பேசுபவர்களாகவும், கடவுள் பயபக்தி நன்னடத்தை தன்னடக்கம் உடையவர்களாகவும் இருப்பர். (இனிமேற் சான்றிதழ்கள் வேண்டியதில்லை. கண்த்தைப் பார்த்துத் தெரிவு செய்யலாம்)

ஒருவனுடைய குணத்தை அவனுடைய ஜென்ம நட்சேத்திரத்திலிருந்து மட்டுமே அறியமுடியுமா? சந்திர இராசி, இலக்கினம், 5ம் வீடு

கிரக நிலைகள் பார்வைகள் முதலியனவற்றிலிருந்து அவனுடைய குணங்குறிகளை அறிவதற்கு நுணுக்கமான சோதிட விதிகளுள. ஒவ்வோரிலக்கினத்திலும் பிறந்தவருக்கு அவர்களுடைய குணங்குறிகளைப் பற்றிச் சோதிடர் பக்கம் பக்கமாக எழுதுகின்றனர். இச்சோதிடமா நட்சேத்திர கணமா சரியானது? மேலும் சோதிடத்தில் நட்சேத்திர சோதிடம் என ஒரு பகுதியுண்டு. சந்திரன் மனோகாரகன். ரஜோ கிரகம். ஒரு கிரகத்தின் பலன் அது நிற்கும் இராசி நாதனையும் நட்சேத்திர அதிபனையும் பொறுத்தது. சந்திரன் தமோகிரகங்களாகிய செவ்வாய், சனி, ராகு, கேது அதிபராகிய நட்சேத்திரங்களில் நிற்பின் அதன் பலன் கெடும் என ஒரு வேளை வாதிக்கலாம். இந்த அடிப்படையிற் பார்க்கினும் கண வகுப்பாக்கத்துக்கு ஆதாரமில்லை.

வாசிப்போரே எழுமாறு ஆராய்ச்சி செய்து இதை அனுபவ ரீதியாகச் சோதித்துப் பார்க்கலாம். நன்கறிந்த 25 - 30 மக்களை உதாரணமாக எடுக்கலாம்! இவர்களுடைய குணம், நடைகளிலிருந்து இவர்கள் தேவரா, மனிதரா, இராட்சதரா என்பதைக் குறியுங்கள். பின்பு, இவர்களுடைய நட்சேத்திரங்களை அறிந்து பஞ்சாங்கத்திற் கணத்தைப் பாருங்கள். ஒப்பிட்டுச் சரி பிழை பாருங்கள். உண்மை புலனாகும். உங்கள் நட்சேத்திரத்தின் கணத்தை அறிந்து உங்கள் குணங்களுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். கணத்தின் அடிப்படையிற் குணத்தைப் பார்த்தாற், கள்ளர் கபடர் கொலைக்காரர் கறுப்புச் சந்தைக்காரர் தேவ கணத்திலும் ஞானிகளும் தர்மகுணவான்களும் இராட்சத கணத்திலும் இருப்பதைக் காண்பீர்கள்.

சில சோதிட நூல்களில் ஒவ்வொரு நட்சேத்திரத்துக்குங் குணங்குறிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவற்றுக்குங் கணத்துக்கும் முரண்பாட்டைக் காண்கிறோம். நட்சேத்திரங்களுக்குக் கணங் கொடுத்தவர்கள் இவற்றைத்தானுங் கவனிக்கவில்லைப் போலத் தோன்றுகிறது. இராட்சத கணத்திற் சேர்க்கப்பட்ட நான்கு நட்சேத்திரங்களின் குணங்குறிகள் பின்வருவனவாகும் :—

(1) மகம் — நன்னடத்தை உடையவள்; சாத்திரக் கேள்வி; உலகங் கொண்டாடும் மெய்யாள்; பெரியோர், கணவன் தேவரிடத்துப் பக்தி விசுவாசம் உடையவள்; இராஜயோக பாக்கியத்தை அனுபவிப்பாள்; புண்ணிய காரியஞ் செய்வாள்.

(2) விசாகம் — அழகு பொருந்திய ஒளிவீசுஞ் சரீரம்; உயர் விரதம்; தர்ம சிந்தனை; தீர்த்த யாத்திரை விருப்பம்; அழிவில்லாச் செல்வம்.



(3) அவிட்டம் — நல்ல வஸ்திராபரணங்கள், தர்மம், சத்தியவாக்கு, கௌரவம், பெருமை, புண்ணிய புராணங் கேட்கும் விருப்பம்.

(4) சதயம் — பொறுமை, தர்ம குணம், அழகு, சனங்களிடத்தில் விசுவாசம், மரியாதை, கருணை, பர்த்தாவிற்குப் பிரியம்.

(பெண்கள் ஜனன சாதக பலபோதினி)

இவை இராட்சத குணங்களா?

தேவ கணத்திற் சேர்க்கப்பட்ட நான்கு நட்சேத்திரங்களின் குணங் குறிகளைப் பார்ப்போம் :-

(1) புனர்பூசம் (2ம் கால்) - கர்மி, ஆசாரமில்லாதவன், இடம்பன், வர்மன், வியாதியுடையவன், திறமை தர்மம் தயாள குணம் இல்லாதவன்.

(2) பூசம் (4ங் கால்) — நலமில்லாதவன், கலகப்பிரியன், கோபி, வாஞ்சையுடையவன், புத்தியில்லாதவன், தோஷமுடையவன்.

(3) சுவாதி (3ங் கால்) — நல் நடையிலான், தோஷவான், கலகப்பிரியன், வெற்றியில்லாதவன், குரூரன், பொய் வார்த்தை பேசுவோன், புத்தியில்லாதவன், மோசஞ் செய்வோன்.

(4) ரேவதி (3ங் கால்) — புத்தியில்லாதவன், தனமில்லாதவன், பாபி, அநேக தொல்லையுள்ளான், தீயன், நற்குணமில்லாதவன்,

(சோதிடப் பிரகாசிகை)

இவை தேவ குணங்களா ?

எனவே கணத்துக்குங் குணத்துக்கும் தொடர்பில்லை. இவ்வகுப்பாக்கத்துக்குச் சோதிட விளக்கமில்லை. அனுபவ ஆதாரமில்லை. ஒவ்வொரு கணத்திலும் ஒன்பது நட்சேத்திரங்களுள. சமச்சீரான சோடனை. பொய்யைப் புனைந்தாலும் பொருந்தவல்லவா புனைய வேண்டும்.

**கணப் பொருத்தம் :-**

“பெண் நட்சேத்திரமும் புருஷ நட்சேத்திரமும் ஒரே கணமாயின் உத்தமம். மனுஷ கணமும் தேவ கணமுமாயின் மத்திமம். தேவ கணமும் இராட்சத கணமுமாயினும், மனுஷ கணமும் இராட்சத கணமுமாயினும் பொருந்தாது” - (வாக்கியம்).

"ஒரே கணமாயினும் பெண் மனுஷ கணமும் புருஷன் தேவ கணமுமாயினும் உத்தமம். பெண் தேவ கணமும் புருஷன் மனுஷ கணமுமாயினும் அல்லது இராட்சத கணமுமாயினும் மத்திமம். பெண் இராட்சத கணமும் புருஷன் தேவ கணமுமானுலும் பெண் மனுஷ கணமும் புருஷன் இராட்சத கணமுமானுலும் அதமம். பெண் இராட்சத கணமும் புருஷன் மனுஷ கணமுமானுல் அதமா தமம்" – (திருக்கணிதம்).

இரு பஞ்சாங்கங்களிடையிலும் முரண்பாட்டைக் காண்கிறேம். திருக்கணிதம் ஆண்களுக்கு ஒரு சலுகை அளிக்கிறது.

இப்பொருத்தம் இருந்தாற் கணவனும் மனேவியும் இணக்கம், ஒற்றுமை, நன்னம்பிக்கையுடன் வாழ்வர் எனவும் குடும்பவாழ்க்கை இன்பகரமாக நடைபெறும் எனவுங் கூறுகின்றனர். சில கேரள சோதிடர் இப்பொருத்தம் இருந்தால் இருவரும் ஆரோக்கியமாக வாழ்வர் என்கின்றனர். இப்பொருத்தத்துக்குப் பல விதிவிலக்குக ளுள. அதாவது பின்வருஞ் சந்தர்ப்பங்களிற் கணப் பொருத்தம் பார்க்க வேண்டியதில்லே என்கின்றனர்.

(அ) ஆண் நட்சேத்திரத்திலிருந்து பெண் நட்சேத்திரம் வரை எண்ணிக் கண்ட தொகை 14இற்கு மேற்படின் (கிருஷ்ண மூர்த்தி). அதாவது பெண் நட்சேத்திரத்திலிருந்து 15வது நட்சேத்திரம் வரையும் என்க.

(ஆ) பெண் நட்சேத்திரத்திலிருந்து ஆண் நட்சேத்திரம் 24இற்கு மேற்படின் (திருக்கணிதம்).

(இ) ஏகராசி அல்லது (சிங்கம் - கும்பம், மகரம் - கடகம் தவிர்ந்த) சம சப்தமமாயின்.

(ஈ) இருவரின் இராசியதிபர்களும் ஒருவர் அல்லது மித்துருக் களாயின்.

(உ) இராசியதிபர் சாதகங்களில் நட்பு ஆட்சி உச்சம் பெற் றிருப்பின்.

(ஊ) இராசி, மகேந்திரப் பொருத்தங்கள் இருப்பின்.

(எ) நவாம்சத்திற் சந்திர இராசியதிபர்கள் மித்துருக்களாயின்.

(ஏ) சூக்கும கணப் பொருத்தம் இருந்தால் – அதாவது இலக் கினம் அல்லது சந்திரனின் ரேகாம்சத்தை 9ஆற் பெருக்கி வரும் நட்சேத்திர அதிபர்கள் மித்துருக்களாயின்.



14–24வது நட்சேத்திரங்களுக்கு மட்டுமே கணப் பொருத்தம் பார்க்க வேண்டும். இவற்றிற் பல (இ), (ஈ), (உ), (ஊ), (எ), (ஏ) முதலிய விதி விலக்குகளில் அடங்கலாம் கணப் பொருத்தம் ஒரு சோடனே என்பதையும் பார்க்க வேண்டியதில்லே என்பதையும் இவ் விதி விலக்குகள் மறைமுகமாகச் சுட்டிக் காட்டுகின்றன. எப்படி யிருக்குது செப்படிவித்தை?

### 3. மகேந்திரப் பொருத்தம்

"பெண்ணினுடைய நட்சேத்திரம் முதலாக 4, 7, 10, 13, 16, 19, 22, 25ம் நாட்கள் புருஷ நாளாகவரின் பொருந்தும்" – பஞ்சாங்கம். இப்பொருத்தம் இருந்தாற் புத்திரபாக்கியமுண்டு எனவும் புத்திரர் சுபிட்சமாக வாழ்வர் எனவுங் கூறுகின்றனர். புத்திர பாக்கியம் இப் பொருத்தத்தைப் பொறுத்தது என்பது சோதிடத்துக்கு ஒவ்வாது, புத்திர பாக்கியத்தை அறிவதற்குச் சோதிட விதிகளுள. சிலர் இப் பொருத்தம் இருந்தாற் குடும்பசுகம் எனவும் கணவன் மனேவி பிள்ளேகளேப் பாதுகாப்பான் எனவுங் கூறுகின்றனர். வேறு சிலர் நட்சேத்திரப் பொருத்தத்துக்குரிய ஆயுளேயும் ஆரோக்கியத்தையும் இப் பொருத்தத்துக்குஞ் சூட்டுகின்றனர் – ஆயுள் ஆரோக்கியம், புத் திரபாக்கியம், புத்திரர் சுபிட்சம். இஃது உண்மையாயின், மகேந்திரப் பொருத்தம் நட்சேத்திரப் பொருத்தத்தைப் பாக்கினுஞ் சிறந்த தாகவும் பதிலியாகவும் இருக்க வேண்டும். சிறந்ததென எவராவது எடுத்துக் கொள்வதில்லே. பதிலியாக எடுத்தால், விபரீத முடிவுக்குக் காலாகும். மகேந்திரப் பொருத்தமுடையவை நட்சேத்திரப் பொருத்த மில்லாதவை, 7, 16, 25, ஏழாவது நட்சேத்திரங்கள் (வாதமெனப் படும்). 10, 19 அனுஜன்ம திரிஜன்ம நட்சேத்திரங்கள் (இரச்சுப் பொருத்தமில்லே). 4, 13, 22ம் நட்சேத்திரங்களுக்கே இரு பொருத் தங்களுமுண்டு. 22ம் நட்சேத்திரம் வைநாசிகமாக இருக்கலாம். மகேந் திரப் பொருத்தம் நட்சேத்திரப் பொருத்தத்துக்குப் பதிலியானுல் தவிர்க்க வேண்டிய நட்சேத்திரங்கள் ஐந்தே – 3, 5 12 (1ம் கால்), 14 (4ங் கால்), வைகாசிகம். நட்சேத்திரப் பொருத்தம் உண்மையானுல், அஃதில்லாவிட்டாற் கணவனே மனேவியோ நோய் வாய்ப்படுவர். ஒருவரின் ஆயுளுக்கு ஆபத்து. அவ்வாருயின் குடும்பத்தில் எவ்வாறு அநேக பிள்ளேகள் பிறப்பர்? குறுகிய காலத்திற்குள் அநேக பிள்ளே கள் பிறப்பர் எனச் சிலர் விபரீத விளக்கங் கொடுக்கலாம். அவ்வாரு யினும், பிள்ளேகள் எவ்வாறு சுபீட்சமாக வாழ்வர்? தந்தையோ தாயோ இளமையில் இறக்குங் குடும்பங்களிற் பிள்ளேகள் படும் பாட்டை நாம் அறிவோம். இம் முரண்பாட்டுக்கு விளக்கமென்ன? இரு பொருத்தங்களுஞ் சோடனேகள். நட்சேத்திரப் பொருத்தத்

தினாற் போட்ட முடிச்சை மகேந்திரப் பொருத்தத்தினால் தளர்த்துகிறார்கள் போலத் தோன்றுகிறது. பொருத்தம் பார்ப்பவர் செய்யலாம், செய்யப்படாது எனக் கூறலாம்.

### 4. ஸ்திரீ தீர்க்கப் பொருத்தம்

"பெண் நட்சேத்திரத்திலிருந்து புருஷன் நட்சேத்திரம் வரையும் எண்ணிக் கண்ட தொகை 13இற்கு மேற்படின் உத்தமம். 9இற்கு மேல் 13 வரை இருப்பின் மத்திமம். 9 வரை இருந்தாற் பொருந்தாது'' – (வாக்கியம்).

"பெண்ணாள் முதல் புருஷ நாள் 13இற்கு மேல் உத்தமம். 7இற்கு மேல் மத்திமம். மற்றவை பொருந்தா'' - (திருக்கணிதம்.)

18இற்கு மேல் உத்தமம் எனவும் 9இற்கும் 18இற்கும் இடையிலாயின் மத்திமம் எனவுஞ் சிலர் கூறுகின்றனர். வேறு சிலர் 8இற்கு மேல் உத்தமம் என்கின்றனர்.

இப்பொருத்தம் இருந்தாற் செல்வம் சேரும் எனவும் வங்கிப் பணம் பெருகும் எனவும் மகாலட்சுமி கடாட்சங் கிடைக்கும் எனவுங் கூறுகின்றனர். இப்பொருத்தம் உடலுறவுச் சுகத்தை அளிக்குமெனச் சிலர் கூறுகின்றனர். இப்பொருத்தம் இருந்தால் நீடித்த ஆயுளென வேறு சிலர் கூறுகின்றனர். இதை நீங்கள் நம்புகிறீர்களா? தனத்துக்கும் இப்பொருத்தத்துக்கும் தொடர்பென்ன? ஆணின் சந்திரன் பெண்ணின் சந்திரனுக்கு வலது பக்கங் கிட்ட இருந்தாற் பணஞ் சேராது, இடது பக்கங் கிட்ட இருந்தாற் சேரும், என்பதற்குச் சோதிட விதியுண்டா? கொள்கையளவில் விளக்க முடியாவிடினும் அனுபவச் சான்றுண்டா? எமது சமுதாயத்தில் நடைபெறும் மிகப் பெரும்பாலான கல்யாணங்களுக்கு இப்பொருத்தமிருக்கும். நாம் யாவருஞ் செல்வராகிவிட்டோமா? இப்பொருத்தம் உண்மையானால் செல்வத்தைச் சேர்ப்பதற்குச் சுலபமான வழியைக் கண்டுவிட்டோம். படிக்க வேண்டியதில்லை. பாடுபட வேண்டியதில்லை. சுரண்டவுங் களவெடுக்கவும் வேண்டியதில்லை. இப்பொருத்தமுடைய பெண்ணை மணந்தாற் போதும், எமது பொருளாதாரப் பிரச்சினைகள் எல்லாம் தீர்ந்துவிடும். மந்திரத்தால் மாங்காயை உண்டுபண்ணிவிடுவோம்.

### 5. யோனிப் பொருத்தம்

"இருவருக்கும் ஒரு யோனியாயினும் பகையில்லா யோனிகளில் ஆண் யோனி ஆணுக்கும் பெண் யோனி பெண்ணுக்குமாயினும் இருவருக்கும் பெண் யோனியாயினும் உத்தமம். இருவருக்கும் ஆண்



யோனிகளாயின் மத்திமம். ஒன்றுக்கொன்று பகை யோனியாயினும் ஆணுக்குப் பெண் யோனியும் பெண்ணுக்கு ஆண் யோனியுமாயினும் பொருந்தா'' - (வாக்கிய பஞ்சாங்கம்).

ஒரே யோனியாயின் ஆண் பெண் பார்க்க வேண்டியதில்லையாயினும், சிலர் இதற்கும் ஆண் பெண் பார்க்கின்றனர். இக்காலத்திற் பலர் பகையோனியன்றாயின் ஆண் பெண் யோனி பெண் ஆண் யோனியாயினும், மத்திமம் என எழுதுகின்றனர்.

இதைப்பற்றிப் பல கருத்து வேற்றுமைகளைக் காண்கிறோம். இருவரும் பெண் யோனிகளாயின் மேனாட்டுச் சோதிடக் கருத்தைப் பின்பற்றிச் சிலர் மத்திமம் என்கின்றனர். சிலர் இதை அதமம் என்கின்றனர். இஃது உண்மையாயின், பெண் யோனி நட்சேத்திரத்திற் பிறந்த ஆண்களுக்கு விமோசனமில்லை. அவர்கள் ஆண் யோனிப் பெண்ணையோ பெண் யோனிப் பெண்ணையோ கல்யாணஞ் செய்ய வியலாது. இருவரும் ஆண்யோனியாயின் சிலர் அதமமும் அழிவுமென்கின்றனர். அவ்வாறாயின், ஆண் யோனி நட்சேத்திரத்திற் பிறந்த பெண்களுக்கு விமோசனமில்லை. அவர்கள் ஆண்யோனி ஆணையோ பெண் யோனி ஆணையோ கல்யாணஞ் செய்ய இயலாது. மேலும் இக்கருத்துக்கள் காலத்துக்குக் காலம் மாற்றமடைந்திருப்பதையும் இளக்கப்பட்டிருப்பதையுங் காணலாம்.

இப்பொருத்தம் இருந்தாற் கணவனும் மனைவியும் பால் உறவில் இன்பங் காண்பர் எனச் சிலர் கூறுகின்றனர். பரஸ்பர காதல் உண்டாகும் என வேறு சிலர் கூறுகின்றனர். செல்வம் சேருமெனப் பிரஸ்நமார்க்க கூறுகிறது. இப்பொருத்தம் இல்லாவிட்டாற் பிள்ளைகள் கருவிற் சிதையும் எனவும் மேக நோய்கள் உண்டாகும் எனவும் செல்வம் வீணே கரையும் எனவுஞ் சிலர் பயமுறுத்துகின்றனர். இப்பொருத்தம் சூத்திரர் சங்கரர் பஞ்சமர்களுக்கு முக்கிய பொருத்தம் என்கின்றனர். சூத்திரர் யார்? சங்கரர் பஞ்சமர் யார்? ஏனையோருக்கு உடல் உறவில் விருப்பமில்லையா?

நட்சேத்திரங்களின் யோனிகளை முதலாவது அட்டவணையிற் காணலாம். ஜெந்துக்களின் பெயர்கள் ஆண் பெண்ணெனக் குறிப்பிடப்படுகின்றன. ஜெந்துக்களைக் குறியீடாகவன்றிக் குறித்த ஜெந்துவிற் பிறந்தவர் அந்த ஜெந்துவின் குணங்குறிகளுடையவராக இருப்பர் என எடுத்துக் கொள்ளப்படாது. ஆண் பெண் பாகுபாடு சாதகரின் ஆண் பெண் தன்மையை அல்லது மனப்பான்மையைக் காட்டும் என்கின்றனர். நட்சேத்திரத்தின் அடிப்படையில் மட்டுமே சாதகரின் ஆண் பெண் தன்மையைக் காணமுடி

யுமா? இலக்கினம், கிரக நிலைகள், கிரக பலங்கள் முதலியனவற்றைச் சாதகரின் ஆண் பெண் தன்மை பொறுத்தது என்கிறோம். எது சரி? சோதிடமா அல்லது நட்சேத்திர யோனியா? ஆண் பெண் யோனி நட்சேத்திரத்திலும் பெண் ஆண் யோனி நட்சேத்திரத்திலும் பிறந்தாற் பால் உறுப்புக்களில் ஏதாவது சீர்கேடிருக்கும் என்பதற்கு அனுபவச் சான்றுண்டா?

ஆண் பெண் தன்மைகளைக் காண்பதற்கு மேனாட்டுச் சோதிடர் இரு விதிகளைக் குறிப்பிடுகின்றனர்.

(அ) பெரும்பாலான கிரகங்கள் ஒற்றை (ஆண்) இராசிகளில் இருப்பின் ஆண் தன்மை அதிகமாகவும் இரட்டை (பெண்) இராசிகளில் இருப்பின் பெண் தன்மை அதிகமாகவும் இருக்கும்.

(ஆ) ஆண்கிரகங்கள் அதிக பலமுடையனவாக இருந்தால் ஆண் தன்மையும் பெண் கிரகங்கள் அதிக பலமுடையனவாக இருந்தாற் பெண் தன்மையும் அதிகமாக இருக்கும். இது ஆராய்ச்சிக்குரியதாகும்.

கணத்தைப் போன்று இதையும் எழுமாறு ஆராய்ச்சி செய்து சோதித்துப் பார்க்கலாம். உண்மை புலனாகும். கணத்தைப்போன்று இதுவும் சோடனைபோலத் தோன்றுகிறது. இன்று இதைப் பலர் உணர்ந்தபடியினாற் பகையோனியன்றாயின் மத்திமம் என்கின்றனர்.

இப்பொருத்தம் வளர்ந்த வரலாற்றை நோக்கினாலும் உண்மை புலனாகும். இதில் மூன்று பொருத்தங்கள் ஒன்று சேர்க்கப்பட்டிருக்கின்றன.

**(1) ஆண் பெண் நட்சேத்திரங்கள்**

(அ) ஆண் நட்சேத்திரங்கள்—அச்சுவினி, பரணி, பூசம், ஆயிலியம், மகம், உத்திரம், சுவாதி, விசாகம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம், திருவோணம், பூரட்டாதி—14.

(ஆ) பெண் நட்சேத்திரங்கள்—கார்த்திகை, ரோகிணி, மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம், பூரம், அத்தம், சித்திரை, அனுஷம், அவிட்டம், சதயம், உத்தரட்டாதி, ரேவதி-13 இவ்வகுப்பாக்கத்துக்கு அடிப்படையான விளக்கமில்லை. இது ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும் விதமே இது சோடனை என்பதைக் காட்டுகிறது.

ஆண் ஆண் நட்சேத்திரமும் பெண் பெண் நட்சேத்திரமுமாயின் உத்தமம். இருவரும் பெண் நட்சேத்திரமாயின் மத்திமம். ஆண் பெண் நட்சேத்திரமும் பெண் ஆண் நட்சேத்திரமுமாயின் அதமம்.



**(2) ஜெந்துப் பொருத்தம்—**

மாதவாச்சாரியார் காளிதாசர் ஆகியோர் ஒவ்வொரு சோதி நட்சேத்திரத்திற்கும் ஒரு ஜெந்தின் பெயரைக் குறியீடாகக் கொடுத்தனர். பகை ஜெந்துக்களிடையிற் கல்யாணம் பொருந்தாதெனவும் வாழ்க்கையில் வெறுப்பும் பகையும் உண்டாகுமெனவுங் கூறினர். பிற்காலத்தவர் இவை இரண்டையும் சேர்த்து யோனிப் பொருத்தத்தைச் சோடித்தனர்.

**(3) இலிங்கப் பொருத்தம்:—**

நட்சேத்திரங்கள், ஆண் பெண் அலி எனப் பிரிக்கப்படுகின்றன. ஆண் நட்சேத்திரங்கள் - அச்சுவினி, கார்த்திகை, ரோகிணி, புநர்பூசம், பூசம், அத்தம், அனுஷம், திருவோணம், பூரட்டாதி, உத்திரட்டாதி - 10. பெண் நட்சேத்திரங்கள் - பரணி, திருவாதிரை, ஆயிலியம், மகம், பூரம், உத்திரம், சித்திரை, சுவாதி, விசாகம், கேட்டை, பூராடம், உத்திராடம், அவிட்டம், ரேவதி - 14. அலி நட்சேத்திரங்கள் - மிருகசீரிடம், மூலம், சதயம்-3. பொருத்த விதிகளாவன:- ஆண் புருஷ யோனி பெண் ஸ்திரீ யோனி - உத்தமம். ஆண் புருஷ யோனி பெண் அலி யோனி - உத்தமம் அல்லது மத்திமம். ஆண் அலி யோனி பெண் ஸ்திரீ யோனி - மத்திமம். ஆண் ஸ்திரீ யோனி பெண் புருஷ யோனி - அதமம். இருவரும் ஒரு யோனியாக விருப்பது விரும்பத்தக்கதன்று. [இலிங்கப் பொருத்தம் இருந்தால் இருவரும் சன்மார்க்கராக இருப்பர் என்கின்றனர். இப் பொருந்தத்தினாற் சன்மார்க்கரை உண்டாக்கி விடலாமா? ஆண் பெண் நட்சேத்திர அட்டவணைக்கும் ஸ்திரீ புருஷ இலிங்க அட்டவணைக்கும் இடையிலுள்ள முரண்பாடு களைக் கவனிக்கலாம். ஒன்றில் ஆண் யோனி மற்றதிற் பெண் யோனி. ஒன்றிற் பெண் யோனி மற்றதில் ஆண் யோனி. விரும்பியபடி ஆண் பெண்ணாகிறது. பெண் ஆணாகிறது. இதுவுமொரு சூக்குமமா? மந்திர சாலமா? வந்தவாறு வகுத்திருக்கிறார்கள்போலத் தோன்றுகிறது. இம் முரண்பாடுகளினால் இலிங்கப் பொருத்தத்தை வைதிகங்கள் மெல்லக் கை விட்டன.

சிலர் யோனிப் பொருத்தத்துக்கு விதிவிலக்கில்லை என்கின்றனர். (கடகம் - மகரம், சிங்கம் - கும்பம் தவிர்ந்த) சம சப்தமங்களாயினும் இராசியதிபர் ஒருவராக அல்லது பரஸ்பர மித்துருக்களாக இருந்தாலும் இப்பொருத்தம் பார்க்க வேண்டியதில்லையென வேறு சிலர் கூறுகின்றனர். மகேந்திர வசியப் பொருத்தங்கள் இதற்குப் பதிலியாகும் எனச் சிலர் கூறுகின்றனர்.

ஆண் பெண் பாகுபாடு சோடனையாயினும் ஜெந்துப் பொருத்தத்தில் உண்மையிருக்கலாமா? சில நட்சேத்திரங்களிற் பிறந்தவர் வேறு சில நட்சேத்திரங்களிற் பிறந்தவரை இயல்பாகவே வெறுப்பதை எம் முன்னோர் அனுபவ வாயிலாகக் கண்டு அதைச் சுட்டிக் காட்ட அந் நட்சேத்திரங்களுக்குப் பகை ஜெந்துக்களின் பெயர்களைக் கொடுத்திருக்கலாமா? இஃது ஆராய்ச்சிக்குரியதாகும். எமது சமுதாயத்திற் பகை யோனியிற் கல்யாணம் அரிதானபடியினாற், பிறநாட்டவர் சாதகங்களை ஆராய்ந்து பார்க்க வேண்டும். நட்சேத்திரங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும். ஜெந்துக்களிலும் சில வித்தியாசங்களைக் காண்கிறோம். எமது இரு பஞ்சாங்க அட்டவணைகளிலும் ஒரேயொரு வித்தியாசம் மட்டுமேயுண்டு. உத்திராடம் - கீரி (வாக்கியம்) மலட்டுப்பசு (திருக்கணிதம்). கிருஷ்ணமூர்த்தியின் அட்டவணையில் உத்திரம் - ஒட்டகம், உத்திராடம் - பசு. விதானமாலையிற் - பூசம் - கடா, பூரம் - பெருச்சாளி, சோதி - கடா, கேட்டை - கலைமான், உத்திராடம்-மலட்டுப்பசு, அவிட்டம் - பெண், பூரட்டாதி - புருஷன்.

பகையோனிகளைப் பற்றியும் கருத்துவேற்றுமைகளைக் காண்கிறோம்.

**வாக்கிய பஞ்சாங்கம்:—** குதிரை - எருமை; யானை - சிங்கம்; மாடு - புலி; பூனை - எலி: ஆடு - குரங்கு; பாம்பு - கீரி; மான் - நாய்.

**திருக்கணித பஞ்சாங்கம்:—** யானை - சிங்கம்; குதிரை - எருமை; மான் - நாய், புலி; எலி - பூனை; பூனை - நாய்,புலி; குரங்கு - நாய், ஆடு; பசு - புலி; பாம்பு - கீரி; திருக்கணித ஜெந்து அட்டவணையிற் கீரியில்லை. ஆனாற் பகை யட்டவணையிற் கொடுக்கப்படுகிறது.

**கிருஷ்ணமூர்த்தி:—** ஆடு - யானை; குதிரை - எருமை; மாடு - புலி; பூனை - எலி; பாம்பு - எலி; நாய் - மான்.

**சோதிடப் பிரகாசிகை :-** குதிரை - எருமை, மாடு; புலி, நாய் - மாடு, எருமை, மான்; குரங்கு - ஆடு; எலி - பூனை, பாம்பு; பாம்பு - கீரி; பூனை - நாய், எலி; மான் - நாய்.

**சோதிடப் பிரகாசிகை:—** குதிரை - எருமை, மாடு; புலி, நாய் - மாடு, எருமை, மான்; குரங்கு - ஆடு; எலி - பூனை, பாம்பு; பாம்பு - கீரி, பூனை - நாய், எலி; மான் - நாய்.

எமது பஞ்சாங்கங்களில் ஒரு ஜெந்துக்கு வேறொரு ஜெந்து மட்டுமே பகையாகக் கொடுக்கப்படுகிறது. பல நூல்களிற் பகை ஜெந்துக்கள் தொகுதிகளாகக் கொடுக்கப்படுகின்றன. ''மான், பசு, ஆடு, குதிரை, நாய், மனுஷர், பூனை, யானை நட்பு யோனிகளாம். எலி, நாய், பாம்பு, பூனை, புலி சத்துருக்களாம். பாம்பு, எலி, நாய், பூனை இயற்கையான விரோதிகளாம். சகல யோனிகட்குங் குரங்கு நட்பாம்'' — விதான மாலை. ''நாய், பசு,மனிதன்,ஆடு,வானரம் இவைகளுக்குப் புலி சத்துரு. பசு,ஆடு,வானரம்,மான் இவைகளுக்கு நாய் சத்துரு. பூனையும் எலியும் ஒன்றுக்கொன்று சத்துருக்கள். அவ்வாறே, மான் - யானை, பூனை - சர்ப்பம், யானை - குதிரை, எலி - சர்ப்பம் இவையும்.''



பகை யோனிகளைத்தானும் திடமாக அறிய முடியவில்லை. பயப்படாதீர்கள். இஃது ஒரு சோடனை. சோடனையில் முரண்பாடுகள் இருந்தாலென்ன? பகை யோனி நட்சேத்திரங்களை ஆராய்ந்து பாருங்கள். பெரும்பாலும் இராசியதிபர் ஒருவராகவோ மித்துருக்களாகவோ இருப்பர். சமசப்தமமாகவும் இருக்கலாம். இப்பொருத்தம் பார்க்க வேண்டியதில்லாது இருக்கும்.

இரண்டு சோடி நட்சேத்திரங்களுக்கு மட்டுமே கணப் பொருத்தமும் யோனிப் பொருத்தமும் இருக்கின்றன. கணப் பொருத்தம் இருந்தால் யோனிப் பொருத்தம் இல்லை. யோனிப் பொருத்தம் இருந்தாற் கணப் பொருத்தம் இருக்காது. அதாவது உடலுறவில் திருப்தி கண்டால், மன ஒற்றுமை இருக்காது. மன ஒற்றுமை இருந்தால் உடலுறவில் திருப்தி இருக்காது. இது விபரீத முடிபாகும். ஐந்து பொருத்தங்கள் இருந்தாற் செய்யலாம் என்னும் விதி மூலம் இப்பிரச்சினையைச் சமாளிக்கிறோம். வைதிகப் புராணக் கற்பனைகள் உச்சபடி ஏறுகின்றன.

## இரண்டாம் அதிகாரம்

# நட்சேத்திரங்களின் அடிப்படையிலான பொருத்தங்கள்

(தொடர்ச்சி)

### 6. இரச்சுப் பொருத்தம்

சிரோரச்சு :- மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம்.

கண்டரச்சு :- ரோகிணி, திருவாதிரை, அத்தம், சுவாதி, திருவோணம், சதயம்.

நாபிரச்சு :- கார்த்திகை, புனர்பூசம், உத்திரம், விசாகம் உத்திராடம், பூரட்டாதி.

ஊருரச்சு :- பரணி, பூசம், பூரம், அனுஷம், பூராடம், உத்திரட்டாதி.

பாதரச்சு :- அச்சுவினி, ஆயிலியம், மகம், கேட்டை, மூலம் ரேவதி.

"ஸ்திரீ புருஷர்களுடைய நட்சேத்திரங்கள் ஓரிரச்சிலிருந்தாற் பொருந்தாது. அவை சிரோரச்சிலிருந்தாற் புருஷன் மரணம். கண்டரச்சிலிருந்தாற் பெண் மரணம். நாபிரச்சிலிருந்தாற் புத்திர நாசம். ஊருரச்சிலிருந்தால் தன நாசம். பாதரச்சிலிருந்தால் தூர தேச வாசம்" (வாக்கிய பஞ்சாங்கம்).

பாதரச்சாயின் பிரயாணத்தினால் தீங்குண்டாகும் எனத் திருக்கணிதங் கூறுகிறது. இதைத் தாலிப் பொருத்தம் எனவும் இரச்சுத் தட்டினாற் கல்யாணஞ் செய்யப்படாது எனவும் பயமுறுத்துகின்றனர். இவர்கள் பஞ்சாங்கங்களில் தெளிவாகக் கூறப்படும் பலாபலன்களைக்காணுங் கவனிப்பதில்லை. இப்பொருத்தத்துக்கு விளக்கமென்ன? விளக்கமில்லாவிட்டாலும் அனுபவச் சான்றுண்டா? யாவரும் இறப்பது திண்ணம். ஆனாற் சிரோகண்ட இரச்சுக்களாயின் இளமையிற் கணவனோ மனைவியோ இறப்பார்களா? இப்பொருத்தம் பார்த்துக் கல்யாணஞ் செய்தால், இளமையில் இறக்கமாட்டார்களா? ஒருவருக்கு ஆயுட்பலமிருந்தால் இப்பொருத்தமில்லாப்



பெண்ணைக் கல்யாணஞ் செய்தால் அவருடைய ஆயுட்பலம் எவ்வாறு குறையும்? பல சந்தர்ப்பங்களிற் கணவனோ மனைவியோ இளமையில் இறக்கின்றனர். இச்சந்தர்ப்பங்களில் இரச்சுப்பொருத்தம் இல்லையா? இச்சோடனைக்குச் சிலர் விபரீத விளக்கங் கொடுக்கின்றனர். சிரோரச்சானாற் கணவன் மனைவிக்கு முன்பும் கண்டவிரச்சானால் மனைவி கணவனுக்கு முன்னும் இறப்பர் என்கின்றனர். இயல்பாகவே ஒருவர் மற்றவருக்கு முன்னுக்கு இறக்கவேண்டுமல்லவா? ஆத்மா அழிவற்றது, என்றுமுளது, இறப்புப் பிறப்பற்றது என்றெல்லாங் கூறுகிறோம். சுலோகங்கள் பாடுகிறோம். ஆனாற் பெரும்பாலும் மரணத்துக்கு மக்கள் அஞ்சுகின்றனர். இந்த இயல்பான பயத்தைப் பயன்படுத்தி வைதிகங்கள் ஒரு பொருத்தத்தைச் சோடித்துவிட்டன. இதை நம்பாவிட்டாலும் பயம் இருக்கும். மக்கள் பல வகைகளில் அடிமைகளாகின்றனர். அரசியல் அடிமைகள், சமூக அடிமைகள், முதலாளித்துவ அடிமைகள், வைதிக மூடநம்பிக்கை அடிமைகள். சமுதாயம் எழுச்சி பெற்று இத்தளைகளை உடைத்தெறிந்தாற்றான் நாம் விடுதலையடையலாம்.

இப்பொருத்தம் பழைய நூல்களிற் காணப்படவில்லை. வட இந்தியாவிற் பார்க்கப்படுவதில்லை. இப்பொருத்தம் உண்மையாயின் ஐந்து பொருத்தங்கள் இருந்தாற் செய்யலாம் என்பது தவறாகும். இப்பொருத்தங் கட்டாயமாக வேண்டியதாகும். இப்பொருத்தம் இல்லாவிட்டால் ஐந்து வகைப்பட்ட விளைவுகளைப் பஞ்சாங்கங்கள் குறிப்பிடுகின்றன- ஆனால் இவை பற்றியுங் கருத்து வேற்றுமைகளைக் காண்கிறோம். குடும்ப வாழ்க்கையின்பம், செல்வம், பொருளாதார வசதிகள். ஆயுள், ஆரோக்கியம், பிள்ளைகள், அற நோக்கம் முதலியவையும் இப்பொருத்தத்தினால் உண்டாகும் நன்மைகளாகக் குறிப்பிடப்படுகின்றன.

1, 10, 19ம் நட்சேத்திரங்களுக்கு இரச்சுப் பொருத்தமில்லை. மகேந்திரப் பொருத்தமுண்டு. இளமையிற் கணவனோ மனைவியோ, இறந்தாற் பிள்ளைகள் பிறப்பதும் அவர்கள் சுபிட்சமாக வாழ்வதும் அசாத்தியமாகும். இந்நட்சேத்திரங்களுக்கு நட்சேத்திராதிபர் ஒருவராக இருப்பர். இராசியதிபர் ஒருவராயின் சிறந்த பொருத்தம் என்கின்றனர். நட்சேத்திராதிபர் ஒருவராயின் மரணமா? விளக்கமென்ன? 1, 10, 19ம் நட்சேத்திரங்களுக்கு இரச்சுப் பொருத்தம் இல்லையென்பதை ஏற்றுக்கொண்டாலும் சிரோரச்சுத் தவிர்ந்த ஏனையவற்றில் இரு தொகுதி நட்சேத்திரங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவற்றுக்கிடையில் தொடர்பென்ன? ஏதாவது கலப்பு

நடந்துவிட்டதா என்பதைப் பார்ப்போம். சிரோரராச்சுத் தவிர்ந்த ஏனைய இரச்சு நட்சேத்திரங்கள் அரோகம், அவரோகம் எனப் பிரிக்கப்படுகின்றன.

**அரோகம் :-**

கண்டரச்சு - ரோகிணி, அத்தம், திருவோணம், (1, 10, 19)
நாபிரச்சு - கார்த்திகை, உத்திரம், உத்திராடம் (1, 10, 19)
ஊருரச்சு - பரணி, பூரம், பூராடம் (1, 10, 19)
பாதரச்சு - அச்சுவினி, மகம், மூலம் (1, 10, 19)

**அவரோகம் :-**

கண்டரச்சு - திருவாதிரை, சுவாதி, சதயம் (1, 10, 19)
நாபிரச்சு - புநர்பூசம், விசாகம், பூரட்டாதி, (1, 10, 19)
ஊருரச்சு - பூசம், அனுஷம், உத்திரட்டாதி (1, 10, 19)
பாதரச்சு - ஆயிலியம், கேட்டை, ரேவதி (1, 10, 19)

வித்தியாசப்பட்ட இரச்சுப் பொருத்த விதிகளும் இருந்தன :—

(அ) இருவர் நட்சேத்திரங்களும் அரோகத்தில் வெவ்வேறு இரச்சுக்களில் இருப்பது உத்தமம்.

(ஆ) இரச்சுக்கள் வித்தியாசப்படினும் ஒருவர் நட்சத்திரம் அரோகத்திலும் மற்றவர் நட்சத்திரம் அவரோகத்திலும் இருப்பது மத்திமம்.

(இ) ஒரேரச்சாயினும் ஒன்று அரோகத்திலும் மற்றது அவ்ரோகத்திலும் இருப்பது மத்திமம்.

(ஈ) இரச்சுக்கள் வித்தியாசப்படினும் இரு நட்சேத்திரங்களும் அவரோகத்தில் இருப்பது திருப்தியானதன்று.

(உ) ஒரே இரச்சாகி இரு நட்சேத்திரங்களும் அரோகத்திலோ அவரோகத்திலோ இருப்பின் பொருந்தாது.

இவ்விதிகளும் முரண்பட்டவையாகும். இவற்றின்படி அவரோக நட்சத்திரங்களிற் பிறந்தவருக்கு இரச்சு எக்காலத்திலும் உத்தமமாகாது. எனினும் 1, 10, 19ம் நட்சேத்திரங்களுக்கே இரச்சுப் பொருத்கமில்லை என்பதை இவ்விதிகள் காட்டுகின்றன. இதைப் பார்க்க வேண்டியதில்லை எனவுஞ் சுட்டுகின்றனர். ஏனென்றால் இவற்றுக்கு இராசியதிபர் மித்துருக்களாக இருப்பர்.



இதற்குப் பல விதி விலக்குகள் குறிப்பிடப்படுகின்றன:-

(அ) ஏகராசியாயின் இரச்சுப் பொருத்தம் பார்க்க வேண்டிய தில்லை.

(ஆ) இராசிகள் (கடகம்-மகரம், சிங்கம்-கும்பம்) தவிர்ந்த சம சப்தமமாயின்

(இ) இராசியதிபர்கள் ஒருவர் அல்லது மித்திருக்களாயின்

(ஈ) நட்சேத்திரம், மகேந்திரப் பொருத்தங்கள் இருந்தால்

(உ) அச்சுவினி, மகம், மூலம், ஆயிலியம், கேட்டை, ரேவதி முதலிய பாதரச்சு நட்சேத்திரங்கள் ஏக ரேகை இரச்சு நட்சேத்திரங்கள் எனப்படும் இவற்றில் ஒன்று அரோகத்திலும் மற்றது அவரோகத்திலும் இருப்பின் உத்தமம்.

விதியை விதி விலக்குகளோடு ஒப்பு நோக்கிச் சோதித்துப் பாருங்கள். 1, 10, 19ம் நடசேத்திரங்களுக்கு எப்பொழுதும் இராசியதிபர்ப்பொருத்தம் இருக்கும். இதை அடுத்த அதிகாரத்திற் கொடுக்கப்படும். சரியான கிரக மித்துரு சத்துரு அட்டவணையிற் காணலாம். ஒரே இரச்சிலுள்ள ஏனைய நட்சேத்திரங்களாயின், ஒன்று அவரோகத்திலும் மற்றது அரோகத்திலும் இருக்கும் இரச்சுப் பொருத்தம் மத்திமம். இவற்றுக்கும் பெரும்பாலும் இராசியதிபர்ப் பொருத்தம் இருக்கும். எனவே, இரச்சுப் பொருத்தம் பார்க்க வேண்டியதில்லை. பெரும்பாலும் நாம் அஞ்சி நடுநடுங்கும் இரச்சுப் பொருத்தம் வெறும் பூச்சுமானமாகிறது.

இதைப் பொருத்தம் என்பதிலும் பார்க்கத் தடை என்பதே தகும். இத்தடைக்கு அடிப்படையென்ன? வேதை நாடி போன்று இரச்சும் பிற்காலச் சோதிட பண்டிதரின் கற்பனைச் சோடனை போலவும் விநோதக் கணித விளையாட்டுப் போலவும் தோன்றுகிறது. இராசி மண்டலத்தில் அக்கினி இராசிகளும் ஜல இராசிகளும் சந்திக்கும், புள்ளிகள் மூன்றாகும் (0°, 120°, 240°). இப்புள்ளிகள் இடரார்ந்தவையாகவும் தோஷமுடையவையாகவும் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. இப்புள்ளிகளுக்கு முன்னுக்கும் பின்னுக்கும் சமதூரத்திலுள்ள நட்சேத்திரங்கள் ஒரே இரச்சிற் சேர்க்கப்படுகின்றன இப்புள்ளிகளுக்குக் கிட்டிய நட்சேத்திரங்களான அச்சுவினி, ரேவதி, மகம், ஆயிலியம், மூலம், கேட்டை, பாதரச்சாகும். அடுத்துள்ள பரணி, உத்திரட்டாதி, பூரம், பூசம், பூராடம், அனுஷம், ஊருரச்சாகும் அடுத்துள்ள கார்த்திகை, பூரட்டாதி, உத்திரம், புனர்பூசம், உத்திராடம், விசாகம் நாபிரச்சாகும். அடுத்துள்ள ரோகிணி, சதயம், அத்தம், திருவாதிரை

திருவோணம், சுவாதி, கண்டரச்சாகும். எஞ்சிய மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம் எனும் மூன்று நட்சேத்திரங்களும் சிரோரச்சாகும். கூறப் படும் விளைவுகள் யாவும் கற்பனைச் சோடனைகள்.

சமதூரத்திலுள்ள நட்சேத்திரங்கள் பொருத்தமற்றவை என் பதற்கு அடிப்படையான சோதிட விளக்கமோ விதியோ இல்லை. அனுபவச் சான்றுமில்லை. மேலும், இஃது உண்மையாயினும், சம தூரத்தை நட்சேத்திரக் கணக்கில் அளவிட முடியாது. நட்சேத்திரம் 13° - 20', பாகைக் கணக்கில் அல்லது கூடிய பட்சம் பாதக் கணக்கில் அளவிட வேண்டும்.

## 7. வேதை

| | |
|---|---|
| அச்சுவினி - கேட்டை | பூசம் - பூராடம் |
| பரணி - அனுஷம் | ஆயிலியம் - மூலம் |
| கார்த்திகை - விசாகம் | மகம் - ரேவதி |
| ரோகினி - சுவாதி | பூரம் - உத்திரட்டாதி |
| திருவாதிரை - திருவோணம் | உத்திரம் - பூரட்டாதி |
| புநர்பூசம் - உத்திராடம் | அத்தம் - சதயம் |
| மிருகசீரிடம் - சித்திரை - அவிட்டம் | |

"ஸ்திரீபுருஷர் நட்சேத்திரங்கள் மேற்குறித்தவாறு ஒன்றுக் கொன்று வேதையாக இருப்பிற்பொருந்தாது. மாறிவரிற் பொருந்தும். (பஞ்சாங்கம்) இதனை வேதையில்லாப் பொருத்தம் என்பதே தகும். இப்பொருத்தம் இருந்தால் துன்பநாசம் எனவும் இல்லாவிட்டாற் கணவன் மனைவி ஒருவரை ஒருவர் வெறுப்பர் எனவும் வாழ்க்கையில் துன்பங்களும் தொல்லைகளும் உண்டாகும் எனவும் கூறுகின்றனர். சிலர் இப்பொருத்தம் இல்லாவிட்டாற் சடுதி மரணம் தீரா நோய்கள் உண்டாகும் எனப் பயமுறுத்துகின்றனர். எமது சமுதாயத்தில் ஏறக் குறைய எல்லாக் கல்யாணங்களுக்கும் இப்பொருத்தம் இருக்கும். எமது துன்பங்கள் நாசமாகிவிட்டனவா? சடுதி மரணங்களோ தீரா நோய்களோ உண்டாவதில்லையா? வட இந்தியாவில் வேதை பார்க்கப் படுவதில்லை. இரச்சுப் போன்று வேதையும் பிற்காலச் சோடனை யாகும். பழைய நூல்களிற் குறிப்பிடப்படவில்லை.

குமாரசாமியம் சூடாமணி முதலிய தமிழ்ச் சோதிட நூல்களில் வித்தியாசப்பட்ட வேதைப் பட்டியல் கொடுக்கப்படுகிறது.



| | |
|---|---|
| அச்சுவினி - மகம் - மூலம் | பூசம் - உத்திராடம் |
| பரணி - கேட்டை | ஆயிலியம் - பூராடம் |
| கார்த்திகை - அனுஷம் | பூரம் - ரேவதி |
| ரோகினி - விசாகம் | உத்திரம் - உத்திரட்டாதி |
| மிருகசீரிடம் - சுவாதி | அத்தம் - பூரட்டாதி |
| திருவாதிரை - அவிட்டம் | சித்திரை - சதயம் |
| புநர்பூசம் - திருவோணம் | |

எந்த அட்டவணை சரியானது?

இரச்சு, வேதை, நாடி முதலிய மூன்று சோடனைகளும் விநோதக் கணித விளையாட்டுகளாகும். இரச்சு வேதை நாடி எனும் மூன்றும் ஒரே அடிப்படையிலான வரிசை மாற்றங்களும் சேர்மானங்களுமாகும் (Permutations and Combinations). பஞ்சாங்க அட்டவணைக்கும் குமார சாமிய அட்டவணைக்கும் உள்ள வித்தியாசம் வரிசை மாற்றச் சேர் மான வித்தியாசமாகும்.

இஃது எவ்வாறாயினும், வேதையைப் பற்றி நீங்கள் பயப்பட வேண்டியதில்லை; ஏனென்றால் இராசிகள் சமசப்தமமாயின் இராசியதி பர்கள் ஒருவர் அல்லது மித்துருக்களாயின, வேதை பார்க்க வேண்டிய தில்லை. இவ்விதிவிலக்கின்படி, 27 நட்சேத்திரங்களில் 20க்கு வேதை பார்க்க வேண்டியதில்லை. விதியும் விதிவிலக்கும் அர்த்தமற்ற விபரீதங் களாகின்றன.

## 8. நாடி

நட்சேத்திரங்கள் மூன்று நாடிகளாக வகுக்கப்படுகின்றன:-

இடப்பார்சுவநாடி:- (வாதம்) - அச்சுவினி, திருவாதிரை, புனர் பூசம், உத்திரம், அத்தம், கேட்டை, மூலம், சதயம் பூரட்டாதி — (9)

மத்தியநாடி:- (பித்தம்) பரணி, மிருகசீரிடம், பூசம், பூரம், சித்திரை, அனுஷம், பூராடம், அவிட்டம் உத்திரட்டாதி (9).

வலப்பார்சுவநாடி:- (சிலேடை) கார்த்திகை ரோகினி, ஆயிலியம், மகம், சுவாதி, விசாகம், உத்திராடம், திருவோணம், ரேவதி - (9)

மத்திய நாடி நட்சேத்திரங்கள் எல்லாம் நவாம்சத்தேற் சிங்கத்தி லிருந்து தொடங்குகின்றன. இடவலப் பார்சுவநாடி நட்சேத்திரங்கள் மேடம் தனுவிலிருந்து தொடங்குகின்றன.

"ஆண் பெண் நட்சேத்திரங்கள் ஒரே நாடியில்லாது இருக்கவேண்டும்"-(திருக்கணிதம்). இரண்டும் மத்திய நாடியாயின் ஆணுக்குத் தீங்கெனவும் இரண்டும் இட அல்லது வலப்பார்சுவ நாடியாயின் பெண்ணுக்குத் தீங்கெனவுங் கூறுகின்றனர். வட இந்தியர் நாடிப் பொருத்தத்துக்கு அதி முக்கியத்துவங் கொடுக்கின்றனர். மொத்தம் 36 புள்ளிகளில் இதன் புள்ளிகள் எட்டாகும். உத்தமத்துக்கு 28க்கு மேற் புள்ளிகள் வேண்டும். இப்பொருத்தம் இல்லாது உத்தமப்பொருத்தங்கிடைக்காது. இப்பொருத்தத்துக்கு விதி விலக்குங் கூறுகின்றனர். பின்வரும் நட்சேத்திரங்களுக்கு நாடிப் பொருத்தம் பார்க்க வேண்டியதில்லை. திருவாதிரை, அத்தம், சுவாதி, விசாகம், அனுஷம், அவிட்டம், பூரட்டாதி, ரேவதி. இராசிகள், சம சப்தமமாயினும், நாடிப் பொருத்தம் பார்க்கவேண்டியதில்லை.

இப் பொருத்தத்துக்கு விளக்கமென்ன? நாடிகள் வாத, பித்த, சிலேடைச் சரீரங்களைக் காட்டுகின்றன எனவும் ஆணும் பெண்ணும் ஒரே வகையான சரீரம் உடையவராகின் உடலுறவில் இன்பங் காணாது துன்புறுவர் எனவுங் கூறுகின்றனர். உடலமைப்புக்கும் நட்சேத்திரத்திற்கும் தொடர்பென்ன? இஃது உண்மையாயின், வைத்திய ஆராய்ச்சிகள் மூலம் நிரூபிக்கலாமல்லவா? நவாம்சத்தில் எல்லா நட்சேத்திரங்களும் மேடத்திலிருந்தோ, சிங்கத்திலிருந்தோ, தனுவிலிருந்தோ தொடங்குகின்றன. இது கணித உண்மையாகும். சிங்கத்திலிருந்து தொடங்கும் நட்சேத்திரங்கள் மத்திய நாடியில் வகுக்கப்பட்டிருக்கின்றன. மேடத்திலிருந்தும், தனுவிலிருந்தும் தொடங்கும் நட்சேத்திரங்கள் ஏனைய இரு நாடிகளிலும் வகுக்கப்பட்டிருக்கின்றன. இஃது ஒரு கணித விளையாட்டாகும்.

மேலும் இவ்வகுப்பாக்கத்தின் விசித்திர முறையைக் கவனித்தால் இஃது ஒரு சோடனை என்பது புலனாகும். (அச்சுவினி தொடக்கம் நட்சேத்திரங்கள் 1, 2 என எண்ணப்படுகின்றன).

| இடப்பார்-சுவ நாடி | மத்திய-நாடி | வலப்பார் சுவ நாடி |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| 6 | 5 | 4 |
| 7 | 8 | 9 |
| 12 | 11 | 10 |
| 13 | 14 | 15 |
| 18 | 17 | 16 |
| 19 | 20 | 21 |
| 24 | 23 | 22 |
| 25 | 26 | 27 |



## 9. விருட்சப் பொருத்தம்

நட்சேத்திரங்களுக்குக் கொடுக்கப்பட்ட விருட்சங்களை அட்டவணையிற் காணலாம்.

"இருவர் நாட்களும் பால் மரமாகில் அதிக பிள்ளைகளும் பாக்கியமும் உண்டாகும். பெண் நாள் பால் மரமும் புருஷநாள், வைர மரமுமாகிற் பிள்ளைப் பேறுண்டாம், பெண் நாள் வைரமும் புருஷ நாள் பால் மரமுமாகில் அற்ப பிள்ளைப் பேறு. இருவர் நாளும் வைர மாகிற் புத்திர சேதமும் பொருட் சேதமுமாம்" — வாக்கியம். திருக்கணிதம் இப்பொருத்தத்தைச் சற்று வித்தியாசமாகக் கூறுகிறது. "பெண் வயிரமரமும் புருஷன் பால் மரமுமாகில் மலடராவர். இருவரும் வயிரமரமாகிற் புத்திர சேதமும் அர்த்த சேதமுமாம்". இது முரண்பட்ட கருத்தாகும். இருவரும் வயிரமாகிற் பிள்ளைகள் பிறப்பர். ஆனாற் சேதப்படுவர். பெண் வயிர மரம் ஆண் பால் மரமாகிற் பிள்ளைகள் பிறக்கவே மாட்டார். புத்திரபாக்கியம் பற்றிப் பல சோதிட விதிகளுள. நட்சேத்திரமும் மரமும் புத்திர பாக்கியத்தை நிருணயிக்கின் சோதிடமே வேண்டியதில்லை. இது சோதிடத்துக்கு ஒவ்வாத சோடனை. இப்பொருத்தத்துக்குக் கொள்கையளவிலோ அனுபவத்திலோ சான்றில்லை. இருவரும் பால் மரங்களாகிய குடும்பங்களிற் பிள்ளைகளில்லாதிருப்பதையும் இருவரும் வயிர மரங்களாகிய குடும்பங்களில் அநேக பிள்ளைகள் இருப்பதையுங் காண்கிறோம். இக்காலத்தில் நாடுகள் சனத் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த அரும்பாடு பட்டு அதிக செலவு செய்கின்றன. இஃது உண்மையாயின், சுலபமாகக் கட்டுப்படுத்திவிடலாம். இரண்டும் பால் மரமாக இருக்கப்படாது எனச் சட்டம் இயற்ற வேண்டும். வயிர மரங்களுக்குக் கியாதி அதிகரிக்கும்.

## 10. ஆயுட் பொருத்தம்

"பெண் நட்சேத்திரம் முதல் புருஷன் நட்சேத்திரம் வரையும் எண்ணின தொகையையும் புருஷன் நட்சேத்திரம் முதல் பெண் நட்சேத்திரம் வரையும் எண்ணின் தொகையையும் தனித்தனி 7ஆற் பெருக்கி 27ஆற் பிரித்து வந்த மிச்சங்களில் இரு தொகைகளுஞ் சமமாயினும் பெண்ணின் தொகை 7 வரையிற் குறையினும் உத்தமம். புருஷனுடைய நாளின் தொகை 7 வரையிற் குறையின் மத்திமம். ஒரு தொகையிலும் பார்க்க மற்றது 7இற்கு மேற் குறையின் பொருந்தாது" (வாக்கியம்). "பெண்ணினுடைய தொகை குறையின் ஆயுட்பொருத்தம் பொருந்தும். புருஷனுடைய தொகை குறையின் பொருந்தாது" — திருக்கணிதம். இரு பஞ்சாங்கங்களிடையிலும் முரண்பாட்டைக் காண்கிறோம். இப்பொருத்தம் இல்லாவிட்டால் ஆணுக்கு அபாய மென்கின்றனர். இதன் மேசாதிட விளக்க மென்ன? அனுபவச் சான்றுண்டா?

இஃது உண்மையாயின், எமது ஆயுளை நாமே நிருணயித்து விடலாம். மந்திர சாலக் கணித சூத்திரமா? கெட்டிகாரச் சோடனை போலத் தோன்றுகிறது.

## 11. கோத்திரம்

அபிஜித் என ஒன்றை உருவாக்கி நட்சேத்திரங்களை 28 ஆக எடுக்கின்றனர். முறைப்படி நான்கு நான்கு நட்சேத்திரங்களாக எடுத்து 7 கோத்திரங்களாக வகுத்தனர்.

(1) சப்தரிஷி — அச்சுவினி, பரணி, கார்த்திகை, ரோகிணி. (2) மரிச்சிரிஷி — மிருகசீரிடம், திருவாதிரை, புநர்பூசம், பூசம் (3) வசிட்டர் — ஆயிலியம், மகம், பூரம், உத்திரம். (4) அங்கிரிஷ் — அத்தம், சித்திரை, சுவாதி, விசாகம். (5) ஐயித்திரி — அனுஷம், கேட்டை, மூலம், பூராடம். (6) புலத்தியர் — உத்திராடம், திருவோணம், அபிஜித் அவிட்டம். (7) புலகர் — சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி. ஒரு கோத்திரத்துக்குள் மணஞ் செய்தால் நாசம் என்கின்றனர். இஃது ஏனைய பல பொருத்தங்களுடன் முரண்படுகிறது. நாம் திராவிட சூத்திரர். எவ்வாறு ஆரிய இருஷிகளின் கோத்திரங்களாக இருக்க முடியும்? இந்த இருஷிகள் திராவிடரா?

## 12. வருணம்

இதற்கு இராசியடிப்படையாயினும், சோடனையானபடியினால் இவ்வதிகாரத்திற் பார்ப்போம்: வழக்கமான, பிராமணர் சத்திரியர், வைசியர் சூத்திரர் எனும் நான்கு சாதிகளை இராசிகளுக்குஞ் சூட்டுகின்றனர். பிராமணர்-கடகம், விருட்சிகம், மீனம். சத்திரியர்:- சிங்கம், துலாம், தனு, வைசியர்: மேடம், மிதுனம் கும்பம், சூத்திரர்-இடபம், கன்னி, மகரம். ஸ்திரீ இராசியும் புருஷன் இராசியும் ஒரே வருணமாயின் உத்தமம், ஸ்திரீ இராசி தாழ்ந்த வருணமும் புருஷன் இராசி உயர்ந்த வருணமுமாயின் மத்திமம். மாறிவரிற் பொருந்தாது. 1,5,9ம் இராசிகள் பொருத்தமானவை என்பதை மறைமுகமாகக் கூறுகின்றனரோ தெரியவில்லை. வைதிகங்கள் எமது சமூகத்திற் பல்லாயிரஞ் சாதிகளையும் பிரிவினைகளையும் உண்டாக்கியது மட்டுமன்றி, நட்சத்திரங்கள் இராசிகளுக்கும் இவற்றைப் பொருத்தி விட்டன.

## 13. சாதிப் பொருத்தம்

நட்சேத்திரங்களுக்குப் பிராமணர், சத்திரியர், வைசியர் சூத்திரர், பஞ்சமர். சங்கரர் என ஆறு சாதிகள் கொடுக்கின்றனர். எவ்வன அடிப்படையிலோ தெரியவில்லை ஒழுங்கான முறைப்படி சோடிக்கின்றனர். இருவரும் ஒருசாதி நட்சேத்திரங்களாயின் உத்தமம். புருஷன் உயர்ந்த



சாதியும் பெண் தாழ்ந்த சாதியுமாகில் மத்திமம். பெண் உயர்ந்த சாதியும் புருஷன் தாழ்ந்த சாதியுமாகிற் பொருந்தாது. வருணத்துக்குஞ் சாதிக்கும் முரண்பாட்டைக் காண்கிறோம். இராசியின்படி பிராமணர் நட்சேத்திரத்தின்படி சூத்திரராவதையும் இராசியின்படி சூத்திரர் நட்சேத்திரத்தின்படி பிராமணர் ஆவதையுங் காண்கிறோம். யாவரும் சூத்திர பிராமணர் ஆகின்றனர். நட்சேத்திர சாதிகள் போன்றதே எமது சாதிக் கட்டுப்பாடுகளுமாகும். வைதிகங்களின் புராணக் கற்பனைகள்.

நட்சேத்திரங்களின் அடிப்படையிலான ஏனைய பொருத்தங்களை இங்கு கூற நான் விரும்பவில்லை. இவற்றை அறிய விரும்புவோர் பழைய பஞ்சாங்கங்களிற் பார்க்கலாம். இன்று நாம் இவற்றை மறந்து விட்டோம். மூட நம்பிக்கைச் சுமை குறைந்துவிட்டது. மேலும், இச்சுமையைக் குறையுங்கள். இவற்றை நான் இங்கு கூறினால், மறுபடியும் இத்தொற்று நோய் எம்மைப் பிடித்து விடலாம். இவற்றில் இரண்டை - அதாவது வருணப் பிரதானத்தையும் தேசப் பிரதானத்தையும் பொருத்தங்களாகக் கருத முடியாது. தேசம் வருணத்தின் அடிப்படையிற் பொருத்தங்களின் முக்கியத்துவத்தை இவை கூறுகின்றன.

### வருணப் பிரதானம்.

பிராமணருக்கு அதிபதிப் பொருத்தமும், சத்திரியருக்குக் கணப் பொருத்தமும், வைசியுருக்கு ஸ்திரீ தீர்க்கப் பொருத்தமும், சூத்திரர், பஞ்சமர், சங்கரர்களுக்கு யோனிப் பொருத்தமும் பிரதானமாகப் பொருந்தியிருத்தல் வேண்டும்,

### தேசப் பிரதானப் பொருத்தம்:

கிரகம், இராசி, கணம் யோனி, இரச்சு ஆகிய இவற்றின் பொருத்தம் தேசங்கள் அனைத்திற்கும், அதிபதி தக்கின தேசத்திற்கும், இலிங்கம் சோழ விதர்ப்ப தேசங்களுக்கும், வசியம் கொங்கண தேசத்திற்கும், பஞ்சபூதம் பஞ்சால தேசத்திற்கும், மகேந்திரம் மகத கௌட தேசத்துக்கும், நாடி மாளவ கலிங்க தேசங்களுக்கும், வேதை சௌராஷ்டிர தேசத்திற்கும் பிரதானமாகப் பொருந்தியிருத்தல் வேண்டும்.

மேலும், மாதம், வாரம், திதி, கரணம், யோகம் நட்சேத்திரம் முதலியனவற்றுக்குக் கூறப்படும் புராண சோதிடத்தைப் பல நூல்களிற் காணுகிறோம். சில பஞ்சாங்கங்களிலும் இவை சுருக்கமாகக் கூறப்படுகின்றன, இவற்றுக்கு விளக்கமில்லை. அனுபவச்சான்றில்லை. புராணப்

புளுகுகள் மூடநம்பிக்கைகள். இங்கு கூறப்பட்ட முரண்பாடுகளும் விதி விலக்குகளும் இந்நட்சேத்திரப் பொருத்தங்கள் சோடனைகள் என்பதைக் காட்டுகின்றன. விவாகப் பொருத்தங்களின் பலன்களை மறுபடியுஞ் சுருக்கமாகக் கூறுகிறேன். (பழைய பஞ்சாங்கத்தின் படி)

| | |
|---|---|
| நட்சேத்திரம் | — ஆயுள் விருத்தி |
| கணம் | — சரீர சுகம் |
| மகேந்திரம் | — புத்திர, பௌத்திர விருத்தி |
| ஸ்திரீதீர்க்கம் | — அனுபவசுகம் |
| யோனி | — அன்பு |
| இராசி | — குல விருத்தி |
| அதிபர் | — சினேகிதம் |
| வசியம் | — சந்தோஷம் |
| இரச்சு | — மாங்கல்ய விருத்தி |
| வேதை | — உறவு |
| விருட்சம் | — புத்திர விருத்தி |
| ஆயுள் | — வயது நிறைவு |
| பஞ்சபட்சி | — நட்பு |
| பஞ்சபூதம் | — சௌரியம் |
| கோத்திரம் | — தருமம் |
| வருணம் | — நல்லொழுக்கம் |
| சாதி | — நற்குணம் |
| இலிங்கம் | — சன்மார்க்கம் |
| நாடி | — சுகம் |
| வருணப்பிரதானம் | — சுய ஒளி |
| தேசப்பிரதானம் | — கீர்த்தி |
| கிரகம் | — தர்மார்த்த காம மோட்சம் |

உலகிற் பல நாடகங்கள் நடைபெறுகின்றன. அவற்றில் இப்பொருத்தங்களும் ஒன்றாகும். கல்யாணஞ் செய்ய, மறையோன் வழி காட்டுகிறான். சோதிடன் நட்சேத்திரப் பொருத்தங்கள் பார்க்கிறான். பூசாரிகளும், காவிகளும், உள்ளங்கிகளும், அவதாரங்களும் மோட்சத்துக்கு வழி காட்டுகின்றனர். அரசியல்வாதி மோட்சத்தை இங்கேயே கொண்டு வருவேன் பார் என்கிறான். அரசியல் வாதிகளும் வானொலியும் தினசரிகளும் தர்மம், சனநாயகம், சோஷலிஸம் முழங்குகின்றன. இனத்துரோகிகள் வேதாந்தம் பேசிக் காசுழைக்க வழிகள் காட்டுகின்றனர். இவ்வையாவும் இரவில் நடைபெறும் இராமன் இராவணன் நாடகங்களாகும். இவற்றை நம்புவோர் பேதைகள். எனினும் இவற்றை நம்புவோரை நான் குறை கூறவில்லை இக்கட்டுரை எழுதுவது எனக்கே பெருஞ்சங்கடமாக இருந்தது. பகுத்தறிவு ஒரு பக்கம் தூண்டு



கிறது. மறு பக்கம் ஊறிப்போன மூடநம்பிக்கைகளைக் களைய முடியவில்லை. முடிச்சுப் போட்ட வைதிகங்கள் சரியாகப் போட்டு விட்டார்கள். விளைவுகளைப் பாருங்கள். மரணம், நோய், துன்பம் (பயம்) செல்வம், ஆயுள் (அவா), புத்திரர் (அன்பு). யார்தான் பயப்படமாட்டார்கள்? பயத்தினாற் பின்பற்ற மாட்டார்கள்?

அடுத்த அதிகாரத்தில் இராசிகள் அடிப்படையிலான மூன்று பொருத்தங்களைப் பார்ப்போம். இவற்றுக்குச் சோதிட விளக்கம் உண்டு. இவற்றைப் பற்றியும் எனது அபிப்பிராயம் முடிந்த முடிவன்று, மேலும் ஆராய்ச்சி செய்து இவற்றின் உண்மையை அறிய வேண்டும்.

மூன்றும் அதிகாரம்

# இராசிகளின் அடிப்படையிலான பொருத்தங்கள்.

## 14. இராசியதிபர்ப் பொருத்தம்

''இருவர் இராசியதிபர்களும் ஒருவராயினும் ஒருவருக் கொருவர் மித்துருக்களாயினும் உத்தமம். சத்துருக்களாயின் பொருந்தாது'' — (வாக்கியம்).

''ஸ்திரீயினிராசியதிபதியும், புருஷனிராசியதிபதியும் ஒரே கிரகமானாலும், இருவரும் ஒருவருக்கொருவர் உத்தமமானாலும், உத்தமும் மத்திமமுமானாலும் நல்ல பொருத்தம் என்றும், மத்திமமானாலும், உத்தமும் நீதுமானாலும் குறைந்த பொருத்தமென்றும், நீதானாலும் மத்திமமும் நீதுமானாலும் பொருத்தமில்லை யென்றும் அறிந்துகொள்க. இவ்வாறு இருவரது சந்திர நவாம்சாதிபதிகளைக் கொண்டும் பார்த்து நிச்சயிக்க'' (திருக்கணிதம்).

இப்பொருத்தத்தின் நன்மைகளைப் பற்றியும் பல வகைப்பட்ட கருத்துக்களைக் காண்கிறோம். புத்திர பாக்கியம், புத்திரர் சுபிட்சம், செல்வம், மன ஒன்றுமை, இணக்கம், அன்பு, சிநேகிதம். இதுவே மன ஒற்றுமை, இணக்கம், அன்பைக் காட்டுஞ் சிறந்த சுட்டி என்பது' எனது அபிப்பிராயமாகும். சிலரைக் கண்டவுடன் இயல்பாகவே அன்பும் நட்புங் கொள்ளுகிறோம். சிலரை இயல்பாக வெறுக்கிறோம். பலகாலம் பழகினும் அன்போ நட்போ உண்டாவதில்லை. இலக்கினாதிபர்கள் அல்லது இராசியதிபர்கள் ஒருவராக அல்லது மித்துருக்களாக இருப்பது நட்புக்கும், சத்துருக்களாக இருப்பது பகைக்குங் காரணமாக இருக்கலாம். இதை அனுபவத்திற் சோதித்துப் பாருங்கள்.

இப்பொருத்தத்துக்குச் சோதிட அடிப்படையான விளக்கமுங் கூறலாம். ஒவ்வொரு கிரகமும் அதன் பலத்துக்கும் ஆதிபத்தியத்துக்கும், காரகத்துவத்துக்கும் நிலைக்கும் ஏற்ற பலன்களைக் குறுந்தவணையிற் கொடுக்கும் என்பதும் நெடுந்தவணையில் அதன் பலன்கள் அது நிற்கும் இராசி நாதனைப் பொறுத்தது என்பதும் சாதாரண



சாதிட விதியாகும். மணவாழ்க்கை நீடித்த நெடுந்தவணைப்பயிராகும். சந்திரன் மனோகாரகன். எனவே, ஆணினதும் பெண்ணினதும் மன இணக்கமும் ஒற்றுமையும் அவர்களுடைய சந்திர இராசியதிபர்களின் மித்துரு சத்துருத் தன்மைகளைப் பொறுத்தனவாகும். மக்களின் குணங் குறிகள் இலக்கினத்தையும் கிரக நிலைகளையும் பொறுத்தனவாகும். இலக்கினாதிபர்கள் மித்துருக்களாயின், குணங் குறிகளிலும் இணக்கம் உண்டாகும். பூரண இணக்கத்தைக் காண வேண்டுமானால், மேலும் நுணுக்கமாகப் பார்க்க வேண்டும். அதாவது இலக்கினாதிபர்கள் ஒன்றுக் கொன்று கேந்திர கோணங்களிலும் இராசியதிபர்கள் ஒன்றுக் கொன்று கேந்திர கோணங்களிலும் நிற்க வேண்டும். எனினும், பொதுவாக இவையிரண்டும் பகையில்லாதிருப்பது பொருத்தத்தைக் காட்டும்.

இராசியதிபர்ப் பொருத்தமே சிறந்த பொருத்தம் என்பதை எமது சோதிட நூல்கள் மறைமுகமாகச் சுட்டுகின்றன. இப்பொருத்தம் இருந்தால் நட்சேத்திரம், கணம், யோனி, இராசி, இரச்சு, வேதை முதலிய ஆறு பொருத்தங்கள் பார்க்க வேண்டியதில்லை. அதாவது இப்பொருத்தம் ஏழு பொருத்தங்களுக்குச் சமனாகும். ஐந்து பொருத்தங்கள் இருந்தாற் செய்யலாம் என்ற விதியின்படி, இப்பொருத்தம் ஒன்றிருந்தாலே செய்யலாம். எமது பஞ்சாங்கங்கள் இதை முக்கிய பொருத்தமாகச் சுட்டாவிடினும், சில குறிப்புக்களிலிருந்து இதன் முக்கியத்துவத்தை உணரலாம். நவாம்சத்திலும் சந்திர இராசியதிபர்ப் பொருத்தம் பார்க்க வேண்டும் எனவும் இப்பொருத்தம் இருந்தாற் கணம், யோனி, இராசிப் பொருத்தங்கள் பார்க்க வேண்டியதில்லை எனவும் திருக்கணிதங் கூறுகிறது. பிராமணருக்கு அதிபதி பிரதானமாகப் பொருந்த வேண்டுமென்கிறது வாக்கியம். இது யாவருக்கும் முக்கியமான பொருத்தம் என்பது பொருளாகும்.

இலக்கினம், சூரியன், சந்திரன் என்பவை சாதகத்தின் முக்கால்களாகும். சந்திரன் மனத்தையும், சூரியன் ஆத்மாவையும், இலக்கினம் உடம்பையுங் குறிக்கின்றன. தூய காதல் அல்லது அன்பில் இருவரின் மனமும் ஆன்மாவும், உடம்பும் ஒன்றோடொன்று ஒன்றித்து இணங்கி இன்பங் காணுகின்றன. ஒன்றுடன் ஒன்று ஒத்திசைவாக அதிர்வுறுகின்றன. எனவே இலக்கினாதிபர்களுக்கும், சந்திர இராசியதிபர்களுக்கும், சூரிய இராசி அதிபர்களுக்கும் பொருத்தம் பார்க்க வேண்டும் எனலாம். மேனாட்டவர் சூரிய இராசிகளுக்குப் பொருத்தம் பார்க்கின்றனர். மேனாட்டுச் சோதிடத்தை இங்கு புகுத்துவது எனது நோக்கமன்று. நாம் இராசியதிபர்களுக்கும் இலக்கினாதிபர்களுக்கும் சந்திர நவாம்சாதிபர்களுக்கும் பொருத்தம் பார்க்கலாம்.

சிலர் ஏழாதிபர்களுக்கும் பொருத்தம் பார்க்க வேண்டும் என்கின்றனர். இஃது அனாவசியமாகும். ஏனென்றால் இலக்கினாதிபர் பொருத்தம் இருந்தால் எப்பொழுதும் ஏழாதிபர் பொருத்தமும் இருக்கும்.

| | இலக்கினாதிபர் | — | ஏழாதிபர் |
|---|---|---|---|
| 1. | வியாழன், செவ்வாய், சூரியன், சந்திரன் | | புதன், சுக்கிரன், சனி |
| 2. | புதன், சுக்கிரன், சனி | — | வியாழன், செவ்வாய், சூரியன், சந்திரன் |

சிலர் இதைத் தவறாக வியாக்கியானஞ் செய்கிறார்கள். அதாவது, குறித்த சாதகத்தில் இலக்கினாதிபனும் ஏழாதிபனும் நண்பராக இருக்க வேண்டு மென்கின்றனர். இது இயலாத காரியமாகும்.

(1) சனி - சூரிய சந்திரர் (2) வியாழன் - புதன்
(3) செவ்வாய் - சுக்கிரன்,

முதலிரண்டிலும் இலக்கினாதிபரும், ஏழாதிபரும் பகைவர். மூன்றாவதிற் சமன்.

இம் முக்கியமான பொருத்தத்தைப் பார்ப்பதற்குக் கிரகங்களின் மித்துருக்கள் சத்துருக்களைத் திடமாக அறிய வேண்டும். இதிலுங் கருத்து வேற்றுமைகளைக் காண்கிறோம்.

வாக்கிய பஞ்சாங்க அட்டவணை:-

| கிரகம் | — | மித்துருக்கள் |
|---|---|---|
| சூரியன் | — | வியாழன் |
| சந்திரன் | — | புதன், வியாழன் |
| செவ்வாய் | — | புதன், சுக்கிரன் |
| புதன் | — | சந்திரன், வியாழன், சுக்கிரன், சனி, செவ்வாய் |
| வியாழன் | — | சூரியன், சந்திரன், புதன், சுக்கிரன், சனி |
| சுக்கிரன் | — | செவ்வாய், புதன், வியாழன், சனி, |
| சனி | — | புதன், வியாழன், சுக்கிரன் |

மித்துருக்களல்லாதவர் சத்துருக்கள்.



மித்துருக்கள் அல்லாதவர் சத்துருக்கள்.

இது யவனாச்சாரியரின் அட்டவணையாகும். இக்கொள்கையை முதன் முதலிற் குறிப்பிட்டவர் வராகமிகிராச்சாரியர் ஆவர். இவர் தமது குரு சத்தியாச்சாரியரின் கொள்கையைக் குறிப்பிட்ட பின்பு, இதையுங் கூறுகிறார். இவருக்கு நெடுங்காலம் பின்பு வந்த கேசவார்க்கரே முதன் முதலில் இக்கொள்கையை வற்புறுத்தினர். இதுவே வராகமிகிராச்சாரியரின் கொள்கையெனவும் வாதித்தனர். இக்கொள்கை தஜா சோதிடக் கொள்கையாகும்.

திருக்கணித பஞ்சாங்க அட்டவணை:-

| | | |
|---|---|---|
| சூரியன் | — | உத்தமம் — சந்திரன், செவ்வாய். வியாழன், மத்திமம் — புதன். நீது — சனி, சுக்கிரன் |
| சந்திரன் | — | உத்தமம் — சூரியன், புதன். மத்திமம் — வியாழன், செவ்வாய், சுக்கிரன், சனி. |
| செவ்வாய் | — | உத்தமம் — சூரியன், சந்திரன். வியாழன். மத்திமம் — சுக்கிரன், சனி. நீது — புதன். |
| புதன் | — | உத்தமம் — சூரியன், சுக்கிரன். மத்திமம் — செவ்வாய், வியாழன், சனி. நீது — சந்திரன். |
| வியாழன் | — | உத்தமம் — சூரியன், சந்திரன். செவ்வாய். மத்திமம் — சனி. நீது — புதன், சுக்கிரன். |
| சுக்கிரன் | — | உத்தமம் — புதன், சனி. மத்திமம் — செவ்வாய், வியாழன். நீது — சூரியன், சந்திரன். |
| சனி | — | உத்தமம் — புதன், சுக்கிரன். மத்திமம் — வியாழன். நீது - சூரியன், சந்திரன், செவ்வாய். |

இது பராசரரின் பின்வரும் விதியின் அடிப்படையிலாகும். "ஒரு கிரகத்தின் மூல திரிகோண இராசியிலிருந்து இரண்டு, நான்கு, ஐந்து, எட்டு, ஒன்பது, பன்னிரண்டு, எனும் இராசிகளின் அதிபர்களும் உச்சவிராசி அதிபரும் மித்துருக்களாவர்."

எந்த அட்டவணை சரியானது? பராசரரே, சோதிடத்துக்குப் பிரமாணம். சோதிட விளக்கங் கூறும் போதும் கிரக பலங்கள் கணிக்கும் போதும் பராசரரின் கொள்கையையே பின்பற்றுகிறோம். வட இந்தியாவிலும் பெரும்பாலும் தென்னிந்தியாவிலும் பஞ்சாங்கங்கள் இராசியதிபர்ப் பொருத்தம் பார்ப்பதற்கு இவ்வட்டவணையையே கொடுக்கின்றன. சோதிடமாமேதைகள் இராமன் கிருஷ்ணமூர்த்தி முதலியோரும் இவ்வட்டவணையையே கொடுக்கின்றனர். மலையாளத்திற் சில பஞ்சாங்கங்களும் யாழ்ப்பாண வாக்கியபஞ்சாங்கமும் கல்யாணப் பொருத்தம் பார்ப்பதற்கு மட்டுமே யவனாச்சாரியரின் அட்டவணையைப் பின்பற்ற வேண்டுமென்கின்றன. சாதகங்கள் பார்ப்பதற்கும் கிரக பலங்கள் கணிப்பதற்கும் ஓரட்டவணையும் கல்யாணப் பொருத்தம் பார்ப்பதற்கு வேறோரட்டவணையுமா? விளக்கமென்ன? பராசரரைப் பார்க்கினும் யவனாச்சாரியர் சிறந்த சோதிடரா? எனவே. பராசரரின்; (திருக்கணித) கிரகமித்துரு சத்துரு அட்டவணையே சரியானதாகும். இப்பொருத்த விதிகளை மறுபடியுஞ் சுருக்கமாகக் கூறுகிறேன்.

(1) இராசியதிபர் ஒருவராயினும், ஒருவருக்கொருவர் மித்துருக்களாயினும், சமமும் மித்துருவுமாயினும் உத்தம பொருத்தம்.

(2) இராசியதிபர் ஒருவருக்கொருவர் சமமாயினும், மித்துருவும் சத்துருவுமாயினும் மத்திம பொருத்தம்.

(3) இராசியதிபர் ஒருவருக்கொருவர் சத்துருக்களாயினும் சத்துருவுஞ் சமனுமாகினும் பொருந்தாது.

இராசியதிபர்ப் பொருத்தத்தை மிகவும் முக்கியமானதாகக் குறிப்பிட்டோம். இப்பொருத்தம் இல்லாவிட்டாற் கல்யாணஞ் செய்யப்படாதா என்ற கேள்விக்கு இடமுண்டு. ஒரு பொருத்தத்திலிருந்து மட்டுமே முடிவு கூறுவது தவறாகும். ஏனைய பொருத்தங்களைப்பார்த்துக் கல்யாணஞ் செய்யலாம். (1) இலக்கினாதிபர் பொருத்தம் (2) சந்திர நவாம்சாதிபர் பொருத்தம் (3) சூரிய இராசியதிபர் பொருத்தம் (4) இராசிப் பொருத்தம் (5) வசியப் பொருத்தம். மேலும் விசேடமாகச் சாதகங்களைப் பார்க்க வேண்டும். யோகங்கள் இருந்தாற் தோஷங்கள் என்ன செய்யும்? சமீபகாலத்திற் பால சோதிடம் எனுஞ் சஞ்சிகையிற் "காதலித்தாலென்ன" எனுந் தொடர்க் கட்டுரைகள் வெளிவந்தன. ஆண்களும் பெண்களும் யார் யார் யோக சாலிகள் என இவை கூறுகின்றன. இதிற் புதிதாக ஒன்றுமில்லை. சாதகங்களேயன்றிப் பொருத்தங்கள் முக்கியமானவையல்ல என்பதை இவை வற்புறுத்துகின்றன.



## 15. இராசிப் பொருத்தம்.

"பெண் இராசியும் புருஷன் இராசியும் ஒன்றாயினும் பெண் இராசிக்குப் புருஷன் இராசி ஆறிற்கு மேற்படினும் உத்தமம். பெண் இராசிக்குப் புருஷன் இராசி 2 ஆயின் மிருத்து; 3 ஆயின் துக்கம்; 4 ஆயின் தரித்திரம்; 5 ஆயின் வைதவ்வியம்; 6 ஆயின் புத்திர நாசம். இடபம் முதலிய இரட்டை இராசிகளிற் பிறந்த பெண்ணுக்கு இரண்டாம் இராசி புருஷ இராசியாக வரினும் மேடம் முதலிய ஒற்றை இராசிகளிற் பிறந்த பெண்ணுக்கு 6ம் இராசி புருஷன் இராசியாக வரினும் மத்திமம். பெண்ணும் புருஷனும் ஓரிராசியாகும்போது பெண் நட்சேத்திரத்திற்குப் புருஷன் நட்சேத்திரம் பிந்தியதாயின் பொருந்தாது" - வாக்கிய பஞ்சாங்கம்.

"பெண்ணும் புருஷனும் ஒரு இராசியாகினும் பெண் இராசிக்குப் புருஷன் இராசி 6 இற்கு மேற்படினும் உத்தமம். பெண் இராசிக்குப் புருஷன் இராசி 3ம், 4ம் இராசியாகில் மத்திமம், 2, 5, 6ம் இராசியாகில் அதமம், 8ம் இராசியாகிற் கூடாது. அதிபதி ஒன்றாகிற் கூடும்" - திருக்கணித பஞ்சாங்கம்.

இரு பஞ்சாங்கங்களிடையிலும் முரண்பாடுகளைக் காண்கின்றோம்.

பொருத்தமான இராசிகளின் பலாபலன்களையுஞ் சில நூல்கள் கூறுகின்றன.

7ம் இராசி :- இது சமசப்தமம் எனப்படும். ஆண் பெண் இராசிகள் சமசப்தமமாயின் நீடித்த ஆயுள், ஆரோக்கியம், செல்வம், சுகம், இன்பம் முதலிய பாக்கியங்களுண்டாகுமென்கின்றனர். இது சிறந்த பொருத்தமாகக் கருதப்படுகிறது. கடகம் - மகரம், சிங்கம் - கும்பம் தவிர்ந்த சமசப்தமமாயின், கணம், இரச்சு, வேதை, இராசியதிபதிப் பொருத்தங்கள் பார்க்க வேண்டியதில்லையென்கின்றனர். மகரம், கும்பங்களுக்கு அதிபர் சனியும், கடகஞ் சிங்கங்களுக்கு அதிபர்கள் சூரியனும் சந்திரனும் பெரும் பகைவர்களானபடியினால், இவ்விரண்டு சமசப்தமங்களும் தவிர்க்கப்படுகின்றன.

8ம் இராசி — பிள்ளைப்பாக்கியம், பிள்ளைகள் சுபிட்சம்.
9ம் இராசி — இன்பம், சுகம்.
10ம் இராசி — பெருஞ் செல்வம்.
11ம் இராசி — இன்பம், சுகம்.
12ம் இராசி — இருவருக்கும் நீடித்த ஆயுள்.

இராசிப் பொருத்தம் இருந்தாற் பிள்ளைப் பாக்கியம் உண்டு எனவும் சற்புத்திரர் கிடைப்பர் எனவுங் கூறுகின்றனர். இது மேலே விரிவாகக் கூறப்பட்ட விளைவுகளுடன் முரண்படுவதைக் காண்கிறோம். வழக்கம்போல இங்கும் விளைவுகளை மிகைப்படுத்திச் சோடித்திருக்கிறார்கள். புத்திரபாக்கியத்துக்கும் இப்பொருத்தத்துக்குந் தொடர்பில்லை. மன இணக்கத்தையும் ஒற்றுமையையுங் காட்டுஞ் சுட்டிகளில் ஒன்றாக இதையும் ஏற்றுக்கொள்ளலாமா என்பதைப் பார்ப்போம். சந்திரன் மனோகாரகன். ஸ்திரீ புருஷர்களுடைய சந்திரர்களிடையிலுள்ள பார்வை நல்லதாயின் குடும்ப வாழ்க்கையில் இணக்கமும் ஒற்றுமையும் உண்டாகும். இரண்டுக்கும் இடையிலுள்ள பாகையின் அடிப்படையில் மேனாட்டுச் சோதிடர் பார்வை நல்லது அல்லது கெட்டதென்பர். பொதுவாகக் கோணப்பார்வை நல்லது (30°, 60°, 120°). சதுரப் பார்வை கெட்டது (45°, 90°, 180°). எமது பார்வைக்கொள்கை வித்தியாசப்பட்டது. பார்வை இராசிக்கு இராசியாகும். பார்வை நல்லதோ கெட்டதோ வென்பது கிரகங்களின் இயற்கையையும் ஆதிபத்தியங்களையும் பொறுத்ததாகும். சதுரப் பார்வை எப்பொழுதுங் கெட்டதன்று. நல்லாதிபத்தியம் பெற்ற இயற்கையாகச் சுபக் கிரகங்களின் சதுரப் பார்வைகளை நல்லவையாக எடுத்துக்கொள்ளுகிறோம். உதாரணமாக, வியாழன் சந்திர கேந்திரத்தில் நிற்பது கஜகேசரி யோகமாகும். இராசியதிபர்களைக் கவனியாது இராசிகளை எடுத்தால் 1, 5, 9, 3, 11, 4. 7, 10 பொருத்தமுடையவை. 2, 6, 8, 12 பொருத்தமற்றவை.

சமீபத்திற் பரத்துவாச் எனும் வட இந்திய சோதிடர் கல்யாணப் பொருத்தங்கள் பற்றி ஒரு சிறு கட்டுரை எழுதியிருக்கிறார். இவர் சோதிட அனுபவமும் அறிவும் உடையவர், ஆராய்ச்சியாளர். எனினும் இவருடைய கட்டுரையில் ஒரு குறைபாடுண்டு. மேனாட்டுச் சோதிடத்தில் அதிபர்க் கொள்கையில்லை. இவரும் இராதியதிபர்களைக் கவனியாது இராசியை மட்டுமே எடுத்துத் தமது கருத்தை வெளியிடுகிறார். இவருடைய கருத்தின்படி 1, 3, 5, 9, 11 உத்தமம். 4, 7, 10 - மத்திமம். 2, 6, 8, 12 பொருந்தா.

பரத்துவாஜின் பொருத்தமான இராசி அட்டவணை பின்வருவதாகும்.

| இராசி | பொருத்தமான இராசிகள் |
|---|---|
| மேடம் | — மிதுனம் (3), கடகம் (4), சிங்கம் (5), தனு (9), மகரம் (10), கும்பம் (11), துலாம் (7). |
| இடபம் | — கடகம் (3), சிங்கம் (4), கன்னி (5), விருட்சிகம் (7), மகரம் (9), கும்பம் (10), மீனம் (11). |
| மிதுனம் | — சிங்கம் (3), கன்னி (4), துலாம் (5), தனு (7), கும்பம் (9), மீனம் (10), மேடம் (11). |
| கடகம் | — கன்னி (3), துலாம் (4), விருட்சிகம் (5), மகரம் (7), மீனம் (9), மேடம் (10), இடபம் (11). |
| சிங்கம் | — துலாம் (3), விருட்சிகம் (4), தனு (5), கும்பம் (7), மேடம் (9), இடபம் (10), மிதுனம் (11). |
| கன்னி | — விருட்சிகம் (3), தனு (4), மகரம் (5), மீனம் (7), இடபம் (9), மிதுனம் (10), கடகம் (11). |
| துலாம் | — தனு (3), மகரம் (4), கும்பம் (5), மேடம் (7), மிதுனம் (9), கடகம் (10), சிங்கம் (11). |
| விருட்சிகம் | — மகரம் (3), கும்பம் (4), மீனம் (5). இடபம் (7), கடகம் (9), சிங்கம் (10), கன்னி (11), |
| தனு | — கும்பம் (3), மீனம் (4), மேடம் (5), மிதுனம் (7), சிங்கம் (9), கன்னி (10), துலாம் (11). |
| மகரம் | — மீனம் (3), மேடம் (4), இடபம் (5), கடகம் (7), கன்னி (9), துலாம் (10), விருட்சிகம் (11). |
| கும்பம் | — மேடம் (3), இடபம் (4), மிதுனம் (5) சிங்கம் )7), துலாம் (9), விருட்சிகம் (10), தனு (11). |
| மீனம் | — இடபம் (3), மிதுனம் (4), கடகம் (5), கன்னி (7), விருட்சிகம் (9), தனு (10), மகரம் (11): |



## கருத்து வேற்றுமைகளும் விதிவிலக்குகளும்

பஞ்சாங்கங்களிலும் நூல்களிலுங் கட்டுரைகளிலும் பல கருத்து வேற்றுமைகளையும் விதிவிலக்குகளையுங் காண்கிறோம். விதிவிலக்குகளுக்கு ஏதோ அடிப்படை இருக்கவேண்டும். அந்த அடிப்படையை அறிந்தால் முரண்பாடுகளைத் தவிர்க்கலாம். உத்தம இராசி அதிபர்ப் பொருத்தம் இருந்தால், இராசிப்பொருத்தம் பார்க்க வேண்டியதில்லை. இராசியதிபர் ஒருவராயினும், ஒருவருக்கொருவர் மித்துருக்களாயினும் மித்துரு சமனாயினும் உத்தம இராசியதிபர்ப் பொருத்தம் ஆகும். இராசியதிபர்ப் பொருத்தம் இருக்க, இராசிப்பொருத்தம் இல்லாவிட்டால் இராசிப் பொருத்தத்தை மத்திமம் என எழுதுகிறார்கள் போலத் தோன்றுகிறது. இந்த அடிப்படையில் ஒவ்வொரு இராசியையும் பார்ப்போம். சிலர் இராசி, இராசியதிபர்ப் பொருத்தங்களில் ஒன்றிருந்தாற் போதும் என்கின்றனர். இது தவ

ருகும். கல்யாணப் பொருத்தம் பார்க்கும்போது இவ்வதிகாரத்திற் கூறப்பட்ட இராசியதிபர், இராசி, வசியம் எனும் மூன்றையும் ஒருங்கு நோக்கி முடிவு கூறவேண்டும்.

1ம் இராசி — ஏகராசி சிறந்த பொருத்தம் எனப்படும். ஆனால் ஆண் நட்சேத்திரம் பெண் நட்சேத்திரத்திற்குப் பிந்தியதாகின் பொருந்தாது என்கின்றனர். பெண் ஆணுக்குக் கீழ்ப்பட்டவள் என்ற வைதிகம் இதற்குக் காரணமாக இருக்கலாம். இவ்வைதிகம் திருக்கணிதத்திலும் பல நூல்களிலுங் கூறப்படவில்லை. இதற்கும் விதிவிலக்குக் கூறுகிறார்கள். அச்சுவினி, கார்த்திகை, மிருகசிரிடம், ஆயிலியம், மகம், அத்தம், சுவாதி, பூராடம் முதலிய நட்சேத்திரங்களில் ஒன்றிற் பிறந்த ஆண்கள் அதற்கு முந்திய நட்சேத்திரங்களிற் பிறந்த பெண்களை மணஞ்செய்யலாம்.

2ம் இராசி — பொருந்தாது. இரட்டை இராசிகளிற் பிறந்த பெண்ணுக்கு 2ம் இராசி புருஷனிராசியாகின் மத்திமமென வாக்கியங் கூறுகிறது. ஏனென்றால், உத்தம இராசியதிபர்ப் பொருத்தம் இருக்கும். ஒற்றை இராசிகளிற் பிறந்த பெண்கள் 2ம் இராசி புருஷனிராசியாகிற் செய்யலாமெனக் கிருஷ்ணமூர்த்தி கூறுகிறார். இது தவறாக இருக்கலாம். ஏனென்றால், உத்தம இராசியதிபர்ப் பொருத்தம் இருக்காது. ஆனால் சிங்கத்திற் பிறந்த பெண்ணுக்குப் புருஷனிராசி கன்னியாகின் உத்தமம். இராசியதிபர்ப் பொருத்தம் இருக்கும்.

3ம் இராசி — பொருந்தாதென வாக்கியங் கூறுகிறது. மத்திமம் எனத் திருக்கணிதங் கூறுகிறது. பார்வைக்கொள்கையின்படி உத்தமம். சிங்கம் தவிர்ந்த மூன்றும் இராசிகளுக்கு உத்தம இராசியதிபர்ப் பொருத்தம் இருக்காது. தனு - கும்பமாயினும் மகரம் - மீனமாயினும் மத்திம இராசியதிபர்ப் பொருத்தம் இருக்கும். இடபம், சிங்கம், கும்பம் இராசிகளிற் பிறந்த பெண்களுக்கு புருஷனிராசி மூன்றாவதானால் வசியப் பொருத்தம் இருக்கும்.

4ம் இராசி — வாக்கிய பஞ்சாங்கம் - தரித்திரம். செல்வத்துக்ும் இராசிக்கும் தொடர்பென்ன? இதற்கு விளக்கமென்ன? அடிப்படையான சோதிடம் யாது? திருக்கணிதம் - மத்திமம். பார்வைக்கொள்கையின்படியும் மத்திமம். உத்தம இராசியதிபர் பொருத்தமிருந்தாற் சிறந்த பொருத்தமாகும். ஒற்றை இராசிகளிற் பிறந்த பெண்களுக்குப் புருஷனிராசி நான்காவதாக வரின், உத்தம இராசியதிபர்ப் பொருத்தம் இருக்கும்.



5ம் இராசி — வாக்கியத்தின்படி வைதவ்வியம். விளக்கமென்ன? அனுபவச் சான்றுண்டா? கணவனின் ஆயுளை இப்பொருத்தம் நிச்சயிக்குமா? திருக்கணிதத்தின்படியும் பொருந்தாது. பார்வைக்கொள்கையின்படி திருவோண இராசி சிறந்த பொருத்தமாகும். மேனாட்டவர் சோதிடப்படியும் எண்சோதிடப்படியும் சிறந்த பொருத்தமாகும். உத்தம இராசியதிபர் பொருத்தமும் இருக்கும், உத்தமோத்தமமாகும்.

6ம் இராசி — பொருந்தாது. சந்திரர்களின் 6/8 நிலை விரும்பத்தக்கதன்று. சஷ்ட - அஷ்டம தோஷம் என்கின்றனர். வாக்கியம் புத்திர நாசம் என்கிறது. மேடம் முதலான ஒற்றை இராசிகளிற் பிறந்த பெண்கள் 6ம் இராசியிற் கல்யாணஞ் செய்யலாம் எனக் கூறுகிறது. திருக்கணிதம் இவ்விதிவிலக்கைக் குறிப்பிடவில்லை. சோதித்துப் பாருங்கள். ஒற்றை இராசியிற் பிறந்த பெண்கள் 6ம் இராசியிற் கல்யாணஞ் செய்தால் இராசியதிபர்ப் பொருத்தம் இருக்காது. இராசியதிபர்ப் பொருத்தம் இருந்தால் மட்டுமே இராசிப்பொருத்தம் பார்க்கவேண்டியதில்லை. இரட்டை இராசியிற் பிறந்த பெண்கள் 6ம் இராசியில் மணம் செய்தால் உத்தம இராசியதிபர்ப் பொருத்தம் இருக்கும். எனவே, இவர்கள் 6ம் இராசியில் மணஞ் செய்யலாம். எவரும் செய்யலாம் என்ற விபரீத முடிவுக்கு வரவேண்டும். சஷ்ட அஷ்டம தோஷமில்லையா? ஏதோ பிழை ஏற்பட்டுவிட்டது போலத் தோன்றுகிறது. இரட்டை என்பது ஒற்றையாகியிருக்கலாம் அல்லது 8 என்பது 6 ஆகியிருக்கலாம். இராசியதிபர் ஒருவர் அல்லது மித்துருக்களாயின் அல்லது வசியப் பொருத்தம் இருந்தால் மட்டுமே சஷ்ட அஷ்டம தோஷம் பார்க்கவேண்டியதில்லை.

7ம் இராசி:— சமசப்தமம், சிறந்த பொருத்தம் என்பர். கடகம்-மகரம், சிங்கம்-கும்பந் தவிர்ந்த சமசப்பதமங்களாயின் கணம் இரச, வேதை, நாடி, இராசியதிபர் பொருத்தங்கள் பார்க்க வேண்டியதில்லை என்கின்றனர். சனியுஞ் சூரிய சந்திரர்களும் பெரும் பகைவரானயடியினாற் சிலர் கடகம்-மகரம், சிங்கம்-கும்பம் முதலிய இரு சமசப்தமங்களையும் விரும்புவதில்லை. வேறு சிலர் இவற்றையும் ஏற்றுக்கொள்கின்றனர்.

8ம் இராசி:— பொருந்துமெனவும் பிள்ளைப் பாக்கியம் சுபீட்சம் உண்டாகுமெனவும் வாக்கியங் கூறுகிறது "எட்டாம் இராசியாகிற் கூடாது. அதிபதி ஒன்றாகிற் கூடுமெனத்" திருக்கணிதங் கூறுகிறது. எட்டாம் இராசியிலுள்ள எந் நட்சேத்திரமும் பொருந்தாதென விதான மாலை கூறுகிறது. 6/8 என்றாலென்ன, 8/6 என்றால்

என்ன சஷ்ட-அஷ்டம தோஷந் தான். ஆனால் ஒற்றை இராசிகளிற் பிறந்த பெண்கள் 8ம் இராசியிற் கல்யாணஞ் செய்யலாம். ஏனென்றால் உத்தம் இராசியதிபர்ப் பொருத்தம் இருக்கும்.

9ம் இராசி:— எல்லாவகையிலும் உத்தமோத்தமம்.

10ம் இராசி:— பஞ்சாங்கங்கள் உத்தமம், பார்வைக், கொள்கையின்படிமத்திமம், இரட்டை இராசிகளிற் பிறந்த பெண்களுக்கே புருஷன் இராசி பத்தாகில் உத்தம இராசியதிபர்ப் பொருத்தம் இருக்கும். ஒற்றை இராசிகளிற் பிறந்த பெண்களுக்கு இப்பொருத்தம் இருக்காது. எனினும் எமது சோதிடத்தின்படி, கிரகங்கள் ஒன்றுக்கொன்று பத்திலோ பதினொன்றிலோ நிற்பது சிறப்புடைத்தாகும். நற்பலன்கள் உண்டாகும்.

11ம் இராசி:— உத்தமம்.

12ம் இராசி:— பஞ்சாங்கங்கள் 12ம் இராசி பொருத்தமுடையது என்கின்றன. ஆனால் சந்திரர்களின் 2/12 நிலை பொருந்தாது. 2 பொருந்தாதென்றால் 12ம் பொருந்தாது. ஒற்றை இராசிகளிற் பிறந்த பெண்கள் புருஷனிராசி 12 ஆகில் மணஞ் செய்யலாம். ஏனென்றால், உத்தம இராசியதிபர்ப் பொருத்தம் இருக்கும்.

இவற்றையெல்லாம் தொகுத்துக் கூறின:-

(அ) 1, 5, 9, (சிங்கம்-கும்பம் கடகம்-மகரம்) தவிர்ந்த சம சப்தமம்—உத்த மோத்தமம்.

(ஆ) 10, 11—உத்தமம் (ஈ) 2, 6, 8, 12—பொருந்தா

(இ) 3, 4—மத்திமம்.

இராசி பொருந்தா விட்டாலும் உத்தம இராசியதிபர்ப் பொருத்தம் இருந்தால் மணஞ் செய்யலாம்.

இலக்கினத்துக்கும் இப்பொருத்தம் பார்க்கலாம்.

1, 5, 7, 9, 10, 11 — உத்தமம்.

3, 4 — மத்திமம்.

2, 6, 8, 12 — பொருந்தா.



## 16. வசியம்

| 1 | | 2 | இராசி |
|---|---|---|---|
| மேடத்துக்கு வசியம் | — | சிங்கம், விருட்சிகம் | (5,8) |
| இடபத்துக்கு வசியம் | — | கர்கடகம், துலாபம் | (3,6) |
| மிதுனத்துக்கு வசியம் | — | கன்னி | (4) |
| கர்க்கடகத்துக்கு வசியம் | — | விருச்சிகம், தனு | (5,6) |
| சிங்கத்துக்கு வசியம் | — | துலாம் | (3) |
| கன்னிக்கு வசியம் | — | மீனம், மிதுனம் | (7,10) |
| துலாத்துக்கு வசியம் | — | மகரம் | (4) |
| விருட்சிகத்துக்கு வசியம் | — | கர்க்கடகம், கன்னி | (9,11) |
| தனுவுக்கு வசியம் | — | மீனம் | |
| மகரத்துக்கு வசியம் | — | கும்பம், மேடம் | (2,4) |
| கும்பத்துக்கு வசியம் | — | மேடம் | (3) |
| மீனத்துக்கு வசியம் | — | மகரம் | (11) |

இந்த அட்டவணையை ஏறக்குறைய எல்லாப் பஞ்சாங்கங்களிலுஞ் சோதிட நூல்களிலுங் காணலாம். சில வட இந்திய நூல்களில் விருட்சிகத்துக்கு வசியமாகக் கன்னி கொடுக்கப்படவில்லை.

''பெண் இராசியும் புருஷன் இராசியும் ஒன்றாயினும், பெண் இராசிக்குப் புருஷன் இராசி வசியமாக இருப்பதுடன் புருஷன் இராசிக்குப் பெண் இராசி வசியமாயினும், பெண் இராசிக்குப் புருஷன் இராசி வசியமாகப் புருஷன் இராசிக்குப் பெண் இராசி வசியமில்லாதிருப்பினும் உத்தமம். புருஷன் இராசிக்குப் பெண் இராசி வசியமாகப் பெண் இராசிக்குப் புருஷன் இராசி வசியமில்லாதிருப்பின் மத்திமம். இருவர் இராசிகளும் ஒன்றுக்கொன்று வசியமில்லாதிருப்பின் பொருந்தாது.'' — பஞ்சாங்கம்.

வசியம் என்ற சொல்லின் பொருள் கவர்ச்சி என்பதாகும். இப்பொருத்தம் இருந்தாற் பரஸ்பர அன்புங் காதலுமுண்டாகும் எனவும் வாழ்க்கையில் ஆணும் பெண்ணும் இன்பமும் திருப்தியும் அடைவர் எனவுங் கூறுகின்றனர். இஃது உண்மையாயின், இப்பொருத்தம் மிக முக்கியமானதாக இருக்கவேண்டும். ஆனால், இதை எவராவது முக்கிய பொருத்தமாகக் குறிப்பிடவில்லை. வட இந்தியர் இப்பொருத்தத்துக்கு இரண்டு புள்ளிகள் மட்டுமே கொடுக்கின்றனர். குறித்த இராசிகளிடையில் எக்காரணம் பற்றியோ கவர்ச்சியிருக்கலாம். இக்கவர்ச்சியை எம் முன்னோர் அனுபவ வாயிலாகக் கண்டிருக்கலாம். சந்திரன் மனோகாரகன். ஆணினதும் பெண்ணினதும் சந்திரர்கள் வசியமான இராசிகளில் நின்றால் மனக்கவர்ச்சி உண்டாகும் என விளக்கங் கூறலாம். மண வாழ்க்கையில் மனக்கவர்ச்சியேயன்றி உயிர்க்கவர்ச்சியும் உடற் கவர்ச்சியும் வேண்டும். ஆகவே, ஆண் - பெண் இலக்கினங்களுக்கும் இவ்வசியம் பார்க்கலாம்.

இவ்வசியம் வகுக்கப்பட்டிருக்கும் அடிப்படையைக் காண எத்தனிப்போம்.

(அ) இராசியொன்றாயின் இராசியதிபர் ஒருவராக இருப்பர். இராசியதிபர் ஒருவராக இருப்பது வசியத்துக்குக் காரணமாகும். அவ்வாறாயின் இராசி வித்தியாசப்படினும் இராசியதிபர் ஒருவராயின் வசியப்பொருத்தம் இருக்கவேண்டும். மேடத்துக்கு விருட்சிகம், இடபத்துக்குத் துலாம், மிதுனத்துக்குக் கன்னி, கன்னிக்கு மிதுனம், தனுவுக்கு மீனம், மகரத்துக்குக் கும்பம் என்பவை இக்காரணம் பற்றியவையாக இருக்கலாம். அவ்வாறாயின், துலாமுக்கு இடபமும், விருட்சிகத்துக்கு மேடமும், கும்பத்துக்கு மகரமும், மீனத்துக்குத் தனுவும் ஏன் வசியமாகவில்லை?

(ஆ) பின்வருவனவற்றில் இராசியதிபதி உச்சமாகும் இராசிக்கு அவ்விராசி வசியமாகிறது. இடபத்துக்குக் கர்க்கடகம், கர்க்கடகத்துக்குத் தனு, துலாத்துக்கு மகரம், மேடத்துக்குச் சிங்கம்.

(இ) பின்வருவனவற்றில் இராசிக்கு இராசியதிபதி நீசமாகும் இராசி வசியமாகிறது. கர்க்கடகத்துக்கு விருச்சிகம், சிங்கத்துக்கு துலாம், கன்னிக்கு மீனம், விருட்சிகத்துக்குக் கர்க்கடகம், மகரங் கும்பங்களுக்கு மேடம், மீனத்துக்கு மகரம், கன்னிக்கு மீனம்.

எனவே, வசியத்துக்குக் காரணம் இராசியதிபர் ஒருவராயிருத்தல், உச்சம் நீசம் என்பவைகளாகும்.

இவ்வதிகாரத்திற் குறிப்பிட்ட பொருத்தங்களைச் சுருக்கமாகக் கூறுவோம்.

(1) இராசியதிபர்ப் பொருத்தம் — கிரகங்களின் நட்புச் சமன் பகைக்குத் திருக்கணித அட்டவணையைப் பயன்படுத்த வேண்டும்.

(2) இலக்கினாதிபர்ப் பொருத்தம்.

(3) இராசிப் பொருத்தம் - 6/8, 2/12 பொருந்தா,

(4) வசியம் — இராசிக்கும் இலக்கினத்துக்கும் (இரண்டுக்கும்) பார்க்கலாம்.

நான்காம் அதிகாரம்

# 1. கிரக தோஷம்

இவ்வதிகாரம் முழுவதும் சோதிடமாகும். ஒவ்வொரு வீடுஞ் சிறப்பாகச் சிற்சில காரியங்களைக் குறிக்கிறது எனக் கூறினோம். எமது வாழ்க்கையுடன் எல்லா வீடுகளுஞ் சம்பந்தப்பட்டவையாயினும், குடும்ப வாழ்க்கைக்கு முக்கியமானவை பின்வருவனவாகும்,

1ம் வீடு:- ஆயுள் ஆரோக்கியம், சுகம். கணவனுக்கு அல்லது மனைவிக்கு மாரக ஸ்தானம்.

2ம் வீடு:- தனம், குடும்பம், கணவனுக்கு அல்லது மனைவிக்கு அபாயஞ் சங்கடங் குறிக்கும் வீடு.

4ம் வீடு:- சுகம், சந்தோஷம், வீடு, வாகனம்.

7ம் வீடு:- களத்திரம், திருமணம்.

8ம் வீடு:- ஆயுள், அபாயம், சங்கடம். பெண்களுக்கு மாங்கல்ய ஸ்தானம், கணவனுக்கு அல்லது மனைவிக்கு மாரக ஸ்தானம்.

12ம் வீடு:- செலவு, போகம், சயனசுகம்

இவ்வீடுகளிற், கெட்ட கிரகங்கள் இருந்தால் அல்லது கெட்ட கிரகங்கள் இவற்றைப் பார்த்தால், இவ்வீட்டுக் காரியங்கள் கேடுறும், இயற்கையாகக் கெட்ட கிரகங்கள் செவ்வாய், சனி, ராகு, கேது, சூரியன் என்பவைகளாகும். மேனாட்டவர் சூரியனை நற்கிரகமாக எடுத்துக்கொள்ளுகின்றனர். நாம் சூரியனைக் கெட்ட கிரகமாக எடுப்பினும், அதனாலுண்டாகும் தோஷம் சனி, ராகு, கேதுக்களினால் உண்டாகுந் தோஷத்தைப் பார்க்கினுங் குறைந்தது என்பதை ஒப்புக்கொள்ளுகிறோம். 1ம், 7ம், 8ம், வீடுகள் 2ம், 4ம், 12ம் வீடுகளைப் பார்க்கினும் முக்கியமானவையானபடியினால், இவ்வீட்டுத் தோஷங்கள் 2ம், 4ம், 12ம் வீட்டுத் தோஷங்களைப் பார்க்கினுங் கூடுதலாகக் கணிக்கப்படுகின்றன.

பார்வைகளின் அடிப்படையிலும் இதை விளக்கலாம்:-

(அ) இலக்கினச் செவ்வாய் 4ம், 7ம், 8ம் வீடுகளையும், 2 இற் செவ்வாய் 8ம் வீட்டையும், 4 இற் செவ்வாய் 7ம் வீட்டையும், 7 இற் செவ்வாய் இலக்கினத்தையும் 2ம் வீட்டையும், 8 இற் செவ்வாய் 2ம் வீட்டையும், 12 இற் செவ்வாய் 7ம் வீட்டையும் பார்க்கின்றன.

(ஆ) இலக்கினத்திற் சனி 7ம் வீட்டையும் 2 இற் சனி 4ம், 8ம் வீடுகளையும் 4 இற் சனி இலக்கினத்தையும் 7 இற் சனி இலக்கினத்தையும் 4ம் வீட்டையும் 8 இற் சனி 2ம் வீட்டையும் 12 இற் சனி இரண்டாம் வீட்டையும் பார்க்கின்றன.

சிலர் 5 இற் செவ்வாய் சனி தோஷ மென்கின்றனர். ஐந்தாம் வீடு புத்திரஸ்தானம். 5இற் செவ்வாய் 8ம், 12ம் வீடுகளையும் 5இற்சனி 7ம், 2ம், வீடுகளையும் பார்க்கின்றன. 9 இற் செவ்வாய் 12ம் 4ம் வீடுகளைப் பார்க்கிறது. எக்காரணம் பற்றியோ திரிகோண விராசிகளான 5,9இற் சனி செவ்வாய் தோஷங்கள் கணிக்கப்படுவதில்லை, கெட்ட கிரகங்கள் உபசயங்களான 3, 6, 10, 11, இல் இருந்தால் தோஷமில்லை.

கிரக தோஷ பலன்களை அனுபவத்திற் சோதித்துப் பார்க்க வேண்டும். பல வேளைகளில் இக்கிரகங்கள் மேலே குறித்த வீடுகளில் இருப்பினுந் தோஷஞ் செய்யாதிருப்பதைக் காண்கிறோம். ஒருவருக்கு அதிக தோஷமும் மற்றவருக்குக் குறைந்த தோஷமும் இருப்பினும் வாழ்க்கை தொல்லை துன்பங்களில்லாது சிறப்பாகச் சகல பாக்கியங்களுடன் நடப்பதையும் இருவருக்கும் அற்ப அல்லது சம தோஷமிருப்பினும் குடும்பத்திலே தொல்லைகள், துன்பங்கள், பகைகள், மரணங்கள் நடப்பதையுங் காண்கிறோம். கெட்ட கிரகங்கள் தோஷஞ் செய்வதில்லையா? சோதிடம் மூட நம்பிக்கையா? அல்லது எமது கிரக தோஷ கணிதந் தவறானதாக இருக்கலாமா? சோதிடம் மூட நம்பிக்கையன்று. எமது கணிதமே தவறானது. மேலுங் கிரகதோஷம் பல காரணிகளில் ஒன்று. அதன் அடிப்படையில் மட்டுமே முடிவு கூற முடியாது. சாதகங்களிலுள்ள யோகங்கள் தோஷங்கள் எல்லாவற்றையும் ஒருங்கு சேர்த்து முடிவுகூறவேண்டும்.

ஒரே கிரகதோஷ அட்டவணையைக் கண்மூடித்தனமாக யாவருக்கும் பயன்படுத்த முடியாது. ஒவ்வொரு கிரகமும தோஷஞ் செய்யுமா; தோஷஞ் செய்யின் எவ்வளவு தோஷஞ் செய்யும் என்பவை பல காரணங்களைப் பொறுத்தனவாகும். கெட்ட கிரகமாயினும் நல்ல ஆதிபத்தியம் பெறின் தோஷம் அற்றுப்போகும் அல்லது மிகக் குறையும். நல்ல கிரகமாயினும் கெட்ட ஆதிபத்தியம் பெறின் தோஷமுடையதாகும். உதாரணமாகக் கிரகம் எதுவாயினும் 7இல் ஆறாதிபன் எட்டாதிபன் இருப்பதும் ஏழாதிபன் ஆறு, எட்டில் இருப்பதும் தோஷமாகும். ஏழாம் வீட்டில் எக்கிரகமும் இல்லாதிருப்பதும் ஏழாம் வீடு பாபகார்த்திரியில்லாதிருப்பதும், அவ்வீட்டிற்கு நற்கிரகங்களின் பார்வை இருப்பதும் ஏழாதிபன் பகை நீசம், அஸ்தமனம் இல்லாதும் பாவக்கிரகங்களின் சேர்க்கை பார்வையில்லாதும் கேந்திர கோணங்களில் இருப்பதும் களத்திர யோகமாகும். கிரகம் இருக்கும் இராசி, சேர்க்கை, அதைப் பார்க்குங் கிரகங்கள் முதலியனவற்றையும் சேர்த்தே தோஷங் கணிக்கவேண்டும். இதை மதிப்பிடலாமன்றிச் செப்பமாகக் கணிக்கவியலாது. மதிப்பிடுவதற்குச் சோதிட அறிவுவேண்டும். பாபி எனும்போது ஆதிபத்தியத்தின்படி பாபி (6, 8, 12ம் வீட்டதிபர்கள்) எனச் சில பிரபல சோதிடர் விளக்கங் கூறுகின்றனர்.



இச்சிறு கட்டுரையிற் சில சோதிட விதிகளை மட்டுமே குறிப்பிடலாம்.

(1) இலக்கினாதிபன் எவ்வீட்டில் இருக்கிறானோ, எவ்விட்டைப் பார்க்கிறானோ அவ்வீட்டுக் காரியங்கள் சிறப்படையும். இலக்கினாதிபன் பார்த்த கிரகமும் அதனுடன் சேர்ந்த கிரகமும் யோகம் அளிக்கும். எனவே, மகர, கும்ப இலக்கினகாரருக்குச் சனியும் மேட விருட்சிக இலக்கினக்காரருக்குச் செவ்வாயும் சிங்க இலக்கினகாரருக்குச் சூரியனுந் தோஷஞ் செய்யா.

(2) ஒவ்வோர் இலக்கினத்திற்கும் ஐந்தாதிபனும் ஒன்பதாதிபனும் யோக காரகராவர். (விசேடமாக ஒன்பதாதிபன்). இவர்கள் இருக்கும் வீடும் பார்க்கும் வீடுகளும் சிறப்படையும். இடபம், துலாம் இலக்கினகாரருக்குச் சனி தோஷஞ் செய்யாது. கர்க்கடகஞ் சிங்சம், தனு, மீனம் இலக்கினகாரருக்குச் செவ்வாய் தோஷஞ் செய்யாது அல்லது தோஷங் குறைவாக இருக்கும்.

(3) எந்தக் கிரகமும் ஆட்சி உச்சத்திற் பலமுடையதாகவிருக்கும். பலமுடைய கிரகம் நற்பலன் அளிக்கும். பலவேளைகளில் இது யோகமாகவிருக்கும். செவ்வாய் பற்றிய மட்டில் இது பின்பு விளக்கப்படும். சனிக்கும் சூரியனுக்கும் இவ்விதி சமமாகப் பொருந்தும்.

(4) கெட்ட கிரகமாயினும் தன் வீட்டில் இருப்பின் அல்லது தன் வீட்டைப் பார்க்கின் அவ்வீடு சிறப்படையும். எக்கிரகமாயினும், தன் வீட்டைப் பார்த்தால், அவ்வீட்டிலுள்ள கிரகங்கள் நன்மை பயக்கும்.

(5) நல்ல கிரகத்தின் பார்வையினுற் கெட்ட கிரகத்தின் தோஷம் அற்றுப் போய்விடும், அல்லது குறையும். நல்லாதிபத்தியம் பெற்ற பலமுடைய வியாழனின் பார்வையினுற் செவ்வாய் தோஷம் அற்றுப்போகும் என்பதை ஒப்புக்கொள்ளுகிருேம். சனி, சூரியன், ராகு கேதுக்களுக்கும் இவ்விதி பொருந்தும். மேலும் சுக்கிரன், சுப புதன், கலைநிறைந்த சந்திரன் பார்வைகளும் தோஷத்தைக் குறைக்கும்.

(6) ஆதிபத்தியம்,சேர்க்கை, பார்வைகளைக் கவனியாது தோஷத்தைக் கணிக்க முடியாது. மிதுனம், கன்னி, மகரம், கும்பம் முதலிய இலக்கினங்களிற் பிறந்தவர்களுக்கே செவ்வாய் அதிக தோஷமுடையது. பத்தாதிபன் ஒரு பெண்ணின் ஏழாம் வீட்டில் இருப்பின், அவள் பாக்கியவதியாவாள் எனவும், செல்வம் பதவி உயர்ந்த கணவனை மணஞ்செய்வாள் எனவுஞ் சோதிடங் கூறுகிறது. இப்பத்தாதிபன் சனியோ செவ்வாயோவானுல், இச்சோதிடந் தவருகுமா?

இப்படிப்பட்ட பல சோதிட விதிகளுள. இவற்றையெல்லாம் புறக்கணித்துக் குருட்டுத்தனமாகத் தோஷங் கணிப்பது தவருகும்.

**கிரக தோஷ அட்டவணைகள்**

| கிரகங்கள் சனி, சூரியன் ராகு, கேது | | | செவ்வாய் | |
|---|---|---|---|---|
| இடம் | 1, 7, 8 | 2, 4, 12 | 1, 7, 8 | 2, 4, 12 |
| நட்பு | 4 | 1 | 8 | 2 |
| ஆட்சி | 8 | 2 | 16 | 4 |
| உச்சம் | 12 | 3 | 24 | 6 |
| பகை நீசம் | 16 | 4 | 32 | 8 |

''இங்கனங் கணக்கிட்டுக் கூட்டி வந்த தொகையைப் பதினுறுற் பிரித்த பேறு கிரக பாப சங்கியையாம். இருவருக்குங் கிரக பாபம் இல்லையாயினும் இருவர் பாபச் சங்கியைகளுஞ் சமனுயினும் உத்தமம். ஒருவர் பாபத்தினும் மற்றவர் பாபம் ஒன்றுவரை குறையின் மத்திமம். ஒன்றுக்கு மேற்குறையின் பொருந்தாது. செவ்வாயினுல் ஏற்படும் பாபம் மற்றைய கிரகங்களின் பாபங்களினுற் சாந்தியடையாது. இருவர் சாதகங்களிலுஞ் செவ்வாய் தோஷம் ஏறக்குறையச் சமமாயிருப்பின் நன்று'' — (வாக்கிய பஞ்சாங்கம்)



**கிரகப் பொருத்தம் — (பாப சங்கியை) இலக்கினத்துக்கு.**

| | விபரம் | நீசம் | அதி சத்துரு | பகை | உச்சம் | மூல திரிகோணம் | ஆட்சி சமம் | நட்பு | அதி நட்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1,7,8 | சனி, ராகு கேது | 128 | 120 | 112 | 96 | 72 | 64 | 32 | 24 |
| | செய்வாய் | 192 | 180 | 168 | 144 | 108 | 96 | 48 | 36 |
| | சூரியன் | 64 | 60 | 56 | 48 | 36 | 32 | 16 | 12 |
| 2,4,12 | சனி, ராகு கேது | 32 | 30 | 28 | 24 | 18 | 16 | 08 | 06 |
| | செவ்வாய் | 48 | 45 | 42 | 36 | 27 | 24 | 12 | 09 |
| | சூரியன் | 16 | 15 | 14 | 12 | 9 | 08 | 04 | 03 |

''இதனுற் கிரகங்களுக்குக் கண்ட பாபசங்கியைகளை ஒன்ருகக்கூட்டி 128ஆற் பிரித்த தொகை முழுப் பாபங்களும் 8ஆற் பிரித்த தொகை வீசங்களுமாம் பெண் சாதக பாபமும் புருஷன் சாதக பாபமும், சமமாக இருந்தாலும் புருஷன் பாபத்துக்குப் பெண் பாபங் கால் மடங்கு குறைந்தாலும் கிரகப் பொருத்தம் உண்டாம். அரை மடங்கு வரையிற் குறைந்தால் மத்திமம். முக்கால மடங்கு வரையிற் குறைந்தாலும் புருஷபாபத்துக்குப் பெண் பாபம் அதிகப் பட்டாலும் கிரக பாபம் பொருந்தாது — (திருக்கணித பஞ்சாங்கம்).

இரண்டு அட்டவணைகளிடையிலுமுள்ள ஒற்றுமை வேற்றுமைகளைப் பார்க்கவும். திருக்கணிதம் சூரியனுக்குச் சனி, ராகு, கேதுக்களின் தோஷத்தில் அரைவாசியே கொடுக்கிறது. இது மேலே குறிப்பட்ட சோதிட விதியுடன் இணக்கமுடையது. செவ்வாய்க்குத் திருக்கணிதம் 1½மடங்கு தோஷமும் வாக்கியம் 2 மடங்கு தோஷமுங் கொடுக்கின்றன. செவ்வாய் தோஷத்தைத் தனியாகக் கணித்துப் பார்க்க வேண்டுமென வாக்கியங் கூறுகிறது. திருக்கணிதத்தின்படி எல்லாத் தோஷங்களையும் ஒருங்கு சேர்த்துப் பார்க்கலாம். வாக்கியத்தின்படி பெண் பாபம் அதிகமாயினும் வித்தியாசம் ஒரு சங்கியைக்குக்கு மேற்படாவிடின் மணஞ் செய்யலாம். திருக்கணிதத்தின்படி பெண் பாபம் அதிகமானுற் பொருந்தாது. இவற்றில் எது சரி, எது பிழை என்பதைக் காண்பது எனது நோக்கமன்று இணக்கங்காண்பது பஞ்சாங்கங்களை வெளியிடுவோரின் கடமையாகும். சூரியனுக்கு அரைவாசித் தோஷங் கணிப்பதும், செவ்வாய் தோஷத்தைத் தனி

யாகக் கணித்து ஒப்பிடலும்: ஆணாகினும் பெண்ணாயினும் பாபங்கள் அதிகம் வித்தியாசப்படாவிடின் செய்யலாம் என்பதும் சரியானவை போலத் தோன்றுகின்றன.

எந்த அட்டவணையையும் ஏற்றுக் கொள்ளலாம். திருக்கணித அட்டவணை நுணுக்கமானது. கொள்கையளவிற் சரியாக இருக்கலாம். அதிநட்பு, அதிபகைப் பிரிவுகளுக்கு விளக்க மென்ன? தற்காலிக மித்துரு பகையையுஞ் சேர்த்தாற்றான், அதிநட்பு, அதிபகை காணலாம். தற்காலிக நட்புப்பகையைச் சேர்ப்பது வழக்கமன்று. இரு அட்டவணைகளுக்கும் பொதுவான குறைபாடுகளைப் பார்ப்போம்.

(அ) உச்சம், ஆட்சியில் தோஷம் நட்புச் சமனிலும் பார்க்கக் குறைவாக இருக்கும். பகை நீசத்திற் கூடுதலாகவிருக்கும். இத்திருத்தத்துடன் திருக்கணித அட்டவணையை எழுதினால்:-

| | விபரம் | நீசம் | பகை | சமன் | நட்பு | ஆட்சி | உச்சம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1,7,8 | சனி ராகு-கேது | 128 | 112 | 72 | 64 | 32 | 24 |
| | செய்வாய் | 192 | 168 | 108 | 96 | 48 | 36 |
| | சூரியன் | 64 | 56 | 36 | 32 | 16 | 12 |
| 2,4,12 | சனி ராகு - கேது | 32 | 28 | 18 | 16 | 8 | 6 |
| | செல்வாய் | 48 | 42 | 27 | 24 | 12 | 9 |
| | சூரியன் | 16 | 14 | 9 | 8 | 4 | 3 |

(ஆ) சனி, சூரியன் செவ்வாய் இலக்கினாதிபனானால் அல்லது ஒன்பதாதிபனானால் தோஷமில்லை. ஐந்தாதிபனானாலும் தோஷங் குறைவாகும்.

(1) பகைநட்பு வீடுகள் — இரண்டு பஞ்சாங்கங்களிலும் நட்பு வீட்டிலும் பார்க்கப் பகை வீட்டிற் பாபம் நான்கு மடங்காகக் கொடுக்கப்படுகிறது. நட்புப்பகை வீடுகளைத் திடமாக அறிய முடியாவிட்டால் எமது கிரக தோஷக் கணிதந் தவறானதாக விருக்கும். நாலுக்கு நாற் பஞ்சாங்கத்துக்குப் பஞ்சாங்கம் பகைநட்பு வீடுகள் வித்தியாசப்படுகின்றன. உச்சம் நீசம் ஆட்சி வீடுகள் பற்றிக் கருத்து வேற்றுமையில்லை.



சூரியன்—நட்பு:- தனு, மீனம், பகை - இடபம் மிதுனம், கர்க்கடகம், கன்னி, விருட்சிகம், மகரம், கும்பம் (வாக்கியம்).

நட்பு:- கர்க்கடகம், விருட்சிகம், தனு, மீனம்.

சமம்:- மிதுனம், கன்னி, பகை:- இடபம், மகரம் கும்பம் (திருக்கணிதம்)

செவ்வாய்:—நட்பு:- இடபம் மிதுனம், கன்னி துலாம், பகை;- சிங்கம், தனு, மீனம் கும்பம் (வாக்கியம்)

நட்பு:- சிங்கம், தனு, மீனம், சமம்:- இடபம், கும்பம், துலாம், பகை:- மிதுனம், கன்னி (திருக்கணிதம்)

சனி: — நட்பு:- இடபம், மிதுனம், கன்னி, தனு. மீனம். பகை:- கடகம், சிங்கம், விருட்சிகம் (வாக்கியம்)

நட்பு:- இடபம், மிதுனம், கன்னி, சமம்:- தனு, மீனம். பகை:- கடகம், சிங்கம், விருட்சிகம், (திருக்கணிதம்)

இராகு கேதுக்கள்:-

உச்சம்-விருட்சிகம், நீசம் - இடபம், நட்பு-மிதுனம், கன்னி, துலாம், தனு மீனம், மகரம் பகை:- மேடம், கடகம், சிங்கம், கும்பம் (வாக்கியம்). உச்சம் - விருட்சிகம், நீசம் - இடபம், நட்பு:- மிதுனம் கன்னி, துலாம், தனு, மகரம், மீனம். பகை:- மேடம், கடகம், சிங்கம், கும்பம். (திருக்கணிதம்) இராகு கேதுக்களுக்கு இரு பஞ்சாங்கங்களிலும் ஒரே அட்டவணையைக் காண்கிறோம். ஆனால் இராகு கேதுக்களின் உச்சம். நீசம். ஆட்சி. மூலதிரிகோணம், நட்பு, பகை வீடுகளைப் பற்றிப் பல கட்டுரைகளிற் பல கருத்துக்களைக் காண்கிறோம். இராகுவுக்கு இடபம் உச்சம் எனவும், விருட்சிகம் நீசமெனவும் பெரும்பாலானோர் கூறுகின்றனர்.

இவ்வித்தியாசங்களுக்குக் காரணம் கிரகமித்துரு சத்துரு பற்றிய கருத்து வேற்றுமையாகும். யவனாச்சாரியரின் மித்துரு சத்துருக் கொள்கையை ஏற்றால், வாக்கியஞ் சரியாகும். பராசரர் கொள்கையை ஏற்றால், திருக்கணிதஞ் சரியாகும். இக்கட்டுரையிற் பராசரர் கொள்கை ஏற்றுக்கொள்ளப்படுகின்றபடியினாற் பகை நட்பு வீடுகளுக்குத் திருக்கணிதத்தைப் பின்பற்ற வேண்டும்.

(2) எமது நாட்டிற் சிலர் இலக்கினத்துக்கு மட்டுமே கிரக பாபங் கணிக்கின்றனர். சிலர் இலக்கினத்துக்குஞ் சந்திர இலக்கினத்துக்கும் சுக்கிர இலக்கினத்துக்கும் பாபங் கணிக்கின்றனர். மாமேதை கிருஷ்ணமூர்த்தி போன்ற சிலர் இலக்கினத்துக்குப் பாபத்தைப் பார்க்கினுஞ் சந்திர இலக்கினத்துக்குப் பாபம் அதிகமானது எனவும் சந்திர இலக்கினத்துக்குப் பாபத்தைப் பார்க்கினுஞ் சுக்கிர இலக்கினத்துக்குப் பாபம் அதிகமானது எனவும் கூறுகின்றனர். திருக்கணித பஞ்சாங்கத்தின்படி இலக்கினத்துக்கு முழுப் பாபம்; சந்திர இலக்கினத்துக்கு ½ பாபம், சுக்கிரன் இலக்கினத்துக்கு ¼ பாபம். பலர் இலக்கினத்துக்கு முழுப் பாபமும் சந்திரன் இலக்கினத்துக்கு ¾ பாபமும் சுக்கிரன் இலக்கினத்துக்கு ½ பாபமுங் கணிக்கின்றனர் இதைப் பின் பற்றலாம்

(3) இராசி அடிப்படையிலா பாவச்சக்கர அடிப்படையிலா பாபங் கணிக்க வேண்டும் என்பது மூன்றாவது பிரச்சினையாகும். "இந்தக் கிரகப் பொருத்தம் துவாதசபாவ (ஸ்புட கணிதப்) பிரகாரம், ஜென்மலக்கின பாவ சக்கர ரீதியாகவும் தற்கால சந்திரோதய லக்கின பாவ சக்கர ரீதியாகவும் தற்கால சுக்கிரோதயலக்கின பாவ சக்கரரீதியாகவும் அமைந்த மூன்று வித கிரகபாவ நிலைகளைக் கொண்டே பார்க்கப்படுதல் சாஸ்திரீயமாம்" — திருக்கணிதம். பழைய நூல்களை ஆராய்ந்தால் பாவத்திற்கே தோஷங் கணிக்க வேண்டுமென்பது தென்படை. மேலுஞ் சோதிடத்தில் வீட்டிற்கே பயன்கள் கூறுகின்றனர். வீடும் இராசியும் வித்தியாசப் பட்டனவா? இது பற்றி மூன்று கொள்கைகளைக் குறிப்பிடலாம்.

(அ) ஓரிராசியில் உதயம் எப்பாகையிலாயினும் அந்த இராசி முழுவதும் முதலாவது வீடாகும். இரண்டாவது இராசி முழுவதும் இரண்டாவது வீடு. இவ்வாறு மேலும். இதுவே மிகப்பழைய கொள்கையாகும். இன்றும் எமது நாட்டிற் பெரும் பாலான சோதிடர் இக் கொள்கைப்படி பலன் கூறுகின்றனர்.

(ஆ) ஒவ்வொரு வீட்டுப் ஸ்புடத்தையுங் குறித்து மேலுங் கீழும் அளந்து வீடு கட்டுகிறோம். இஃது இந்து சோதிட வீடமைப்பு முறையெனப்படும்.

(இ) ஸ்புடத்தை வீட்டின் தொடக்கமாக எடுக்கிறோம். அடுத்த ஸ்புடம் வரையும் அவ்வீடாகும். உதாரணமாக இலக்கின ஸ்புடத்திலிருந்து இரண்டாம் ஸ்புடம் வரையும் முதலாம் வீடாகும். எமது சோதிடரிற் பலர் இம்மேனாட்டுக் கொள்கையை இன்று பின்பற்றுகின்றனர். எமது பழைய நூல்களிலிருந்தும் இதற்கு ஆதாரங் காட்டுகின்றனர்.



## செவ்வாய் தோஷம்

செவ்வாய் தோஷம் என்றவுடன் மக்கள் மரணமென நினைக்கின்றனர்; நடு நடுங்குகின்றனர். முருங்கையடிச் சோதிடர் சுலோகங்களினால் மக்கள் பயத்தை அதிகரிக்கச் செய்து விட்டனர். பல வேளைகளிற் செவ்வாய் எவ்வித தோஷமுஞ் செய்யாதிருப்பதைக் காண்கிறோம். செவ்வாயைப்பற்றிய பொது அபிப்பிராயமுந் தவறானது. ஒரு சாதகத்திற் செவ்வாய் நல்லாதிபத்தியம் பெற்றுப் பலமுடையவனாக இருப்பின், அச்சாதகன் விடாமுயற்சி, துணிவு, ஆற்றல் தன்னம்பிக்கை உடையவனாக இருப்பான். வாழ்க்கையில் முன்னேறுவான், விசேடமாகப் பெண்களுக்குச் செவ்வாய் நல்லாதிபத்தியமும் பலமும் பெற்றிருக்க வேண்டும் என்கின்றனர். மேலுஞ், செவ்வாய் தோஷமிருப்பினும் கணவனுக்கோ மனைவிக்கோ மரணம் ஏற்படுவதில்லை. இஃது அவர்களுடைய ஆயுட்பலத்தைப் பொறுத்ததாகும். செவ்வாய் தோஷமிருந்தால், விசேடமாகச் செவ்வாய் தசாபுத்திகளிற், குடும்பத்திற் சச்சரவுகளும் தொல்லைகளும் நோய்களும் உண்டாகலாம்.

செவ்வாய் தோஷத்தைப் பற்றி நூலுக்கு நூல் கட்டுரைக்குக் கட்டுரை பல கருத்து வேற்றுமைகளைக் காண்கிறோம்.

(1) நரதீயம்:- ஆண்களுக்குச் செவ்வாய் இலக்கினத்திலிருந்து 4ம் 8ம் வீடுகளிலும் பெண்களுக்கு 2ம் 7ம் வீடுகளிலும் தோஷமில்லை. விருட்சிக மேட இலக்கினங்களுக்கு 4இற் செவ்வாயும் இடபம் துலாம் இலக்கினங்களுக்கு 8இற் செவ்வாயும் தோஷமுடையவை. தனு மீன இலக்கினங்களுக்கு 2இற் செவ்வாயும் மகரங் கும்பம் இலக்கினங்களுக்கு 7இற் செவ்வாயும் தோஷமுடையவை (ஆனால் மகர இலக்கினத்திற்கு 7இற் செவ்வாயுஞ் சனியும் யோக மெனப் பலதீபிகை கூறுகிறது).

(2) ஜாதக சந்திரிகா:- 1ம் வீட்டுச் செவ்வாய் தோஷமாகக் குறிப்பிடப்படவில்லை. மேடம், கடகம், விருட்சிகம் மகர இராசிகளிற் செவ்வாய் இருப்பின் தோஷமில்லை. சரராசிகளிற் செவ்வாய் இருப்பின் தோஷமில்லை. வியாழன் அல்லது சுபபுதன் பார்வை பெற்ற செவ்வாய் தோஷமற்றது.

(3) திருக்கணித பஞ்சாங்கம்:- பெண்களுக்கு ஏழாமிடத்திற் செவ்வாய் இருந்தால் தோஷபரிகாரமேயில்லை. இதற்கு விளக்கமும் ஆதாரமுமில்லை. இக்கருத்து நரதீயத்துடன் முரண்பட்டது.

(4) தேவ கேரளம்:- சிங்கங் கும்பத்திற் செவ்வாய் இருப்பின் தோஷமில்லை.

வேறு சில கருத்துக்களையும் பார்ப்போம்.

(5) 4ம் அல்லது 7ம் வீட்டுச் செவ்வாய் மேடத்திலோ கடகத்திலோ இருப்பின் தோஷமில்லை.

(6) செவ்வாய் நல்லாதிபத்தியம் பெற்ற குருவோடிருப்பின் அல்லது அக்குருவினாற் பார்க்கப்பட்டாற் தோஷமில்லை.

(7) சுபபுதன் சேர்க்கை அல்லது பார்வையினாற் தோஷம் நீங்கும் என்கின்றனர் சிலர். பலர் இதை ஏற்றுக் கொள்வதில்லை.

(8) சனி, ராகு, கேது சேர்க்கை அல்லது பார்வையினாற் செவ்வாய் தோஷம் நீங்கும் என்கின்றனர் சிலர். பலர் இதையும் ஏற்றுக் கொள்வதில்லை.

(9) இரண்டுச் செவ்வாய் மேடம், விருட்சிகம், இடபம் துலாமில் இருந்தால் தோஷமில்லை.

(10) எட்டுச் செவ்வாய் கடகம், தனு, மீனமாகில் தோஷமில்லை.

(11) பன்னிரண்டுச் செவ்வாய் புதன் சுக்கிரன் வீடுகளில் தோஷமில்லை.

(12) செவ்வாய் சந்திரனுடன் ஒரே இராசியில் இருப்பின் தோஷமில்லை.

இக்கருத்துக்கள் முரண்பட்டவையாக இருக்கின்றன. எனினும் இவற்றைச் சோதிட விதிப்படி விளக்குவது கடினமன்று. கிரக தோஷம் பார்க்க வேண்டியதில்லையென நான் கூறவில்லை. பாருங்கள். ஆனாற் சரியாகப் பாருங்கள். 1, 2, 4, 7, 8, 12ம் இராசிகளிற் செவ்வாயைக் கண்டவுடன் பயப்பட வேண்டாம்.

## 2. புத்திரர் பொருத்தம்.

"ஐந்தாமிடம், ஐந்துக்கதிபன், குரு இவர்கள் பாபர்வர்க்கமடைந்து, பாபர் சேர்தல் பெற்றிருப்பினும் 6, 8, 12ம் அதிபர்களுடன் கூடியிருப்பினும், ஐந்துக் கதிபருங் குருவும் பெலவீனராய் 6, 8, 12ம் இடங்களிலிருப்பினும் புத்திர தோஷமுண்டாம். சுபர் சேர்தல், நோக்குதல் உண்டாயின் மேற்கண்ட தோஷங்கள் சாந்தியாகும். பெண்ணுக்கும் புருஷனுக்கும் புத்திர தோஷமின்றாயின் உத்தமம். "பெண்ணுக்கு மாத்திரம் புத்திர தோஷமின்றாயின் மத்தமம். பெண்ணுக்குப் புத்திர தோஷமிருப்பினும் இருவருக்கும் புத்திர தோஷமிருப்பினும் பொருந்தாது" — வாக்கிய பஞ்சாங்கம்.



இது மிகவும் மேலீடான விதியாகும் இவ்வளவு சுலபமாகப் புத்திர பாக்கியத்தையோ தோஷத்தையோ கண்டு விடமுடியாது. பலர் பெலவீனராய் என்ற சொல்லைத்தானுங் கவனிப்பதில்லை. ஐந்தாதிபன் குரு 6, 8, 12ம் வீடுகளில் இருப்பதைக் கண்டவுடன் புத்திர தோஷம் என்று விடுகின்றனர். மகாரிஷி இராமானுசரின் இரு விதிகளை இங்கு குறிப்பிட வேண்டும்.

(அ) காரகன் 12இல் இருந்தாற் காரியஞ் சித்தியாகும். குரு புத்திரகாரகன். எனவே, குரு 12இல் இருப்பது புத்திர பாக்கியத்துக்குக் காலாகும்.

(ஆ) குருவினதும் ஐந்தாதிபனினதுஞ் சேர்க்கை புத்திர பாக்கியத்துக்குக் காலாகும்.

புத்திர பாக்கியத்தைப் பற்றிச் சந்தான பீடிகை, பல தீபிகை முதலிய விரிவான சோதிட நூல்களுள. மேலும், புத்திர பாக்கியம் குருவினதும் ஐந்தாதிபனினதும் பலத்தையும் நல் யோகங்களையும் பொறுத்ததாகும்.

### தசா சந்தி

இதைக் கேரள சோதிடர் மிகவும் வற்புறுத்துகின்றனர். இதற்கு விளக்கமுண்டு. ஒவ்வோர் இலக்கினத்திற்குஞ் சில கிரகங்கள் யோககாரகர். சில ஆதிபத்தியத்தின்படி சுபர்கள், சில ஆதிபத்தியத்தின் படி பாபர்கள். இருவருக்கும் யோககாரர் அல்லது சுபர் தசாக்கள் ஒருங்கு நடந்தால் மிக நன்றாகும். ஒருவருக்கு யோககாரர் அல்லது சுபர் தசாவும் மற்றவருக்குப் பாபர் தசாவும் ஒருங்காயின் மத்திமம். இருவருக்கும் பாபர் தசாக்கள் ஒருங்காயின், துன்பங்களுந் தொல்லைகளும் கஷ்டங்களும் உண்டாகும் மணஞ்செய்து 15 அல்லது 20 வருடங்களுக்கு இவ்வாறு இருக்கப்படாது

### கிரகநிலைப் பொருத்தம்

"நட்சேத்திரங்களைக் கொண்டறியும் பொருத்தங்களிலும் கிரக நிலையைக் கொண்டறியும் பொருத்தமே முக்கியமானது" —வாக்கிய பஞ்சாங்கம். இதன் பொருளென்ன? இரு விளக்கங்கள் கொடுக்கலாம் :—

(அ) இரு சாதகங்களையுந் தனிப்படப் பார்த்தல். யோக சாதகங்களாயின் நன்றாகும். இந்த அடிப்படையிற் பல கட்டுரைகளைக் காண்கிறோம். ஆனால், இதனைப் பொருத்தம் பார்த்தல் எனல் முடியாது. யோக சாதகங்கள் இல்லாவிடின் கல்யாணஞ் செய்யப்படாதா?

(ஆ) அடுத்த அதிகாரத்திற் கிரக நிலைகளின் அடிப்படையில் மேனாட்டவர் பொருத்தம் பார்க்கும் முறை விளக்கப் படும். இப்படிப்பட்ட கிரகநிலைப் பொருத்தம் பார்த்தல் எமது சமுதாயத்திலும் இருந்திருக்கலாமா? சிக்கலான படியினால் மறைந்துவிட்டதா? அவ்வாறாயின் எப்படிப் பட்டதாக இருந்திருக்கக்கூடும்?

இன்று நாம் ஒரு கிரகத்தின் நிலையை - அதாவது இருவரினதும் சந்திரர்களின் நிலையை - மட்டுமே எடுத்து இராசிப் பொருத்தம் பார்க்கிறோம். குடும்ப வாழ்க்கைச் சுட்டிகள் - சந்திரன், சூரியன், இலக்கினாதிபன், இராசியதிபன், ஏழாதிபன், சுக்கிரன் - எல்லாவற்றுக்கும் இப்பொருத்தம் பார்க்க வேண்டுமா? இதனையே கிரகநிலைப் பொருத்தம் என எம் முன்னோர் குறிப்பிட்டிருக்கலாமா? இவை 6/8, 12/2 ஆகவிருப்பின் பொருத்தமில்லையெனக் கூறலாமா? இஃது ஆராய்ச்சிக்குரியதாகும்.

மேலும், கலாநிதி ராமன் முதலிய சில சோதிட மாமேதைகள் சில கிரகநிலைப் பொருந்தங்களைச் சுட்டுகின்றனர். வியாழன், சுக்கிரன், செவ்வாய், சூரியன், சந்திரன் முதலியவை ஒன்றுக்கொன்று 1, 3, 5, 9, 11இல் இருப்பது உத்தமம். 4, 7, 10 இல் இருப்பது மத்திமம். 2, 6, 8, 12இல் இருப்பின், பொருந்தா. பண்டிதர் கோபேஷ் ஓஜா என்பவர் எழுதிய நட்சேத்திரங்களும் காதலும் எனும் நூலில் 14 அதிகாரத்திற் கிரகநிலைப் பொருத்தங்களை விரிவாகக் கூறுகிறார்.

ஐந்தாம் அதிகாரம்.

## மேனாட்டுச் சோதிடப் பொருத்தங்களிற் சில.

இவை கொள்கையளவில் விளக்கமானவை. ஆனால் அனுபவத்தில் எவ்வளவுக்கு உண்மையானவை என்பதை அறியேன்.

(1) சூரியன் நிற்கும் இராசிப் பொருத்தம்

பொருத்தமான இராசிகள்

| | | |
|---|---|---|
| மேடம் | — | சிங்கம், தனு. |
| இடபம் | — | கர்க்கடகம், கன்னி, மகரம். |
| மிதுனம் | — | துலாம், கும்பம். |
| கடகம் | — | இடபம், விருட்சிகம், மீனம். |
| சிங்கம் | — | மேடம், தனு. |
| கன்னி | — | மகரம், இடபம். |
| துலாம் | — | கும்பம், மிதுனம். |
| விருட்சிகம் | — | மீனம், கடகம். |
| தனு | — | மேடம், சிங்கம். |
| மகரம் | — | இடபம், கன்னி, துலாம். |
| கும்பம் | — | மிதுனம், மேடம், துலாம். |
| மீனம் | — | கர்க்கடகம், கன்னி, விருட்சிகம். |

இவை பெரும்பாலும் திரிகோண இராசிகளாகும்.

(2) இலக்கினம் .- இராசிகள் அக்கினி இராசிகள், பூ இராசிகள், வாயு இராசிகள், ஜல ராசிகள் எனப் பிரிக்கப்படும்.

(1) அக்கினி இராசிகள்:- மேடம், சிங்கம், தனு.
(2) பூ இராசிகள்:- இடபம், கன்னி, மகரம்.
(3) வாயு இராசிகள்:- மிதுனம், துலாம், கும்பம்.
(4) ஜல ராசிகள்:- கர்க்கடகம், விருட்சிகம், மீனம்.

அக்கினி — அக்கினி — உத்தமம்; அக்கினி — வாயு — மத்திமம்; பூ — பூ — உத்தமம்; பூ — ஜலம் — மத்திமம்; வாயு — வாயு — உத்தமம்; வாயு — அக்கினி — மத்திமம் ; ஜலம் — ஜலம் — உத்தமம் ; ஜலம் — பூ — மத்திமம்; 1, 5, 9 உத்தமம். 3, 11 மத்திமம்.

(3) ஆண் பெண் தன்மை:- சூரியன், செவ்வாய், சனி, யுரேனஸ் பலமுடையனவாக இருப்பின் ஆண் தன்மையும், சுக்கிரன் - சந்திரன் நெப்டியூன் பலமுடையனவாக இருப்பின் பெண் தன்மையும் அதிகமாக இருக்கும். மேலும் பெரும்பாலான கிரகங்கள் ஒற்றை (ஆண்) இராசிகளிலிருப்பது ஆண் தன்மைக்கும், இரட்டை (பெண்) இராசிகளிலிருப்பது பெண் தன்மைக்குங் காலாகும். இரண்டும் ஆண் சாதகங்கள் - பொருந்தா. இரண்டும் பெண் சாதகங்கள் — ஒத்துப்போகினும் விருப்பத்தக்கதன்று. வாழ்க்கை முன்னேறுது ஆண் ஆண் சாதகம், பெண் பெண் சாதகம் — உத்தமம். ஆண் பெண் சாதகம், பெண் ஆண் சாதகம் — மத்திமம்.

இப்பொருத்தங்களைப் பார்க்க விரும்புவோர் நிராயண சாதகங்களை அயனும்சத்தைக் கூட்டி சயன சாதகங்களாக்கிப் பார்க்கலாம். எமது பொருத்தங்களுக்கும் இப்பொருத்தங்களுக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகளைக் கவனிக்கலாம்.

(4) கிரக பார்வைகள் (நிலைகள்):- இவையே மேனாட்டவர் பார்க்கும் முக்கிய பொருத்தங்களாகும். சயன சாதகமாயினும் நிராயண சாதகமாயினும் இப்பொருத்தங்கள் பார்க்கலாம். கிரகங்களிடையிலுள்ள பாகைகள் வித்தியாசப்படா. முதலில் மேனாட்டவர் பார்வைக் கொள்கையையும் எமது சோதிடப் பார்வைக் கொள்கையையும் விளக்கவேண்டும். மேனாட்டவர் சதுரப் பார்வையை கெட்டதெனவும் கோணப் பார்வையை நல்லதெனவும் எடுத்துக்கொள்ளுகின்றனர்.

| பாகை | வீச்சு | நல்லது கெட்டது |
|---|---|---|
| 180° | 172½° — 188° | மிகக்கெட்டது |
| 150° | 148° — 153° | கெட்டது |
| 144° | 141° — 147° | நல்லது |
| 135° | 132° — 138° | கெட்டது |
| 120° | 114° — 126° | மிகவும் நல்லது |
| 108° | 106° — 110° | நல்லது |
| 90° | 84° — 96° | கெட்டது |
| 60° | 54° — 66° | நல்லது |
| 45° | 43° — 47° | கெட்டது |
| 30° | 28° — 32° | நல்லது |
| 18° | 16° — 20° | நல்லது |



இவ் வீச்சுக்களுக்குட் பாகை, இருக்காவிடின் பார்வையில்லை. கிரகங்கள் ஒன்றுக்கொன்று 7° இற்குள் இருந்தாற் சேர்க்கையாகும். சேர்க்கை நல்லதோ கெட்டதோ வென்பது கிரகங்களின் மித்திரு சத்துரு தன்மையைப் பொறுத்ததாகும் எமது கொள்கைப்படி பார்வை இராசிக்கு இராசியாகும். சூரியன், செவ்வாய், சனி முதலிய இயற்கையாகக் கெட்ட கிரகங்களின் பார்வை கெட்டதெனவும் சந்திரன், வியாழன், புதன், சுக்கிரன் முதலிய இயற்கையாக நல்ல கிரகங்களின் பார்வை நல்லதெனவும் எடுத்துக்கொள்ளுகிறோம். எமது சோதிடத்தில் ஆதிபத்தியக் கொள்கை முக்கியமானது. கிரகம் எதுவாயினும் யோககாரகர் அல்லது சுபர்களின் பார்வைகள் நல்லவை. எல்லாக் கிரகங்களுக்கும் ஏழாவது இராசியும் அவ்விராசியிலுள்ள கிரகங்களும் முழுப் பார்வையாகும். செவ்வாய்க்கு 4ம் 8ம் இராசிகளும் வியாழனுக்கு 5ம் 9ம் இராசிகளும் சனிக்கு 3ம் 10ம் இராசிகளும் முழுப்பார்வைகளாகும். கபிலநாடி சுக்கிரனுக்கும் எட்டாம் பார்வை முழுப்பார்வை என்கிறது. செவ்வாய் தவிர்ந்த ஏனைய கிரகங்களுக்கு 4, 8ம் இராசிகள் முக்காற் பார்வையாகும். வியாழன் தவிர்ந்த ஏனைய கிரகங்களுக்கு 5, 9ம் இராசிகள் அரைப் பார்வையாகும். சனி தவிர்ந்த ஏனைய கிரகங்களுக்கு 3, 10ம் இராசிகள் காற்பார்வையாகும். சதுரப்பார்வை எப்பொழுதுங் கெட்டதன்று. நல்லாதிபத்தியம் பெற்ற நற்கிரகங்களின் சதுரப்பார்வைகள் நல்லவைகளும் யோகங்களுமாக இருக்கலாம்.

இப்பொழுது மேனாட்டவரின் பொருத்தங்களைப் பார்ப்போம். முக்கியமானவை மட்டுமே இங்கு கொடுக்கப்படுகின்றன. ஒரு சாதகத்தை—உதாரணமாக ஆணின் சாதகத்தை எடுப்போம். பெண்ணின் சாதகத்திலிருந்து ஒரு கிரகத்தை எடுத்து ஆணின் சாதகத்தில் அக்கிரகத்தின் பாகையைக் குறித்து அக்கிரகத்துக்கும் ஆணின் சாதகத்திலுள்ள கிரகங்களுக்குமிடையிலுள்ள பாகைகளைக் கணித்து நல்லபார்வையா கெட்டபார்வையா பார்வையில்லையா என எழுத வேண்டும். இவ்வாறு பெண்ணின் சாதகத்திலிருந்து ஒவ்வொரு கிரகத்தையும் எடுத்து ஆணின் சாதகத்திற் குறித்துப் பாகைகளை அளந்து பார்வைகள் நல்லவையா கெட்டவையா என்பதைக் காண வேண்டும்.

முக்கியமான பார்வைகள் நல்லவையாயின் உத்தமப் பொருத்தம். பார்வைகள் இல்லாதிருப்பின் மத்திமம். கெட்டவைகளாயின் பொருந்தாது. முக்கியமான பார்வைகளாவன ;-

(1) சூரியன்—சந்திரன் :— இப்பார்வை மிகவும் முக்கியமானது. நல்ல பார்வை குடும்ப வாழ்க்கையில் ஒற்றுமைக்கும் இணக்கத்துக்

குங்காலாகும். விசேடமாகப் பெண்ணின் சூரியனுக்கும் ஆணின் சந்திரனுக்கும் இடையிற் பார்வை நல்லதாக இருக்கவேண்டும். சேர்க்கை மிகச் சிறந்ததாகும். பார்வை கெட்டதாயின் குடும்ப வாழ்க்கையில் ஒற்றுமையும் இணக்கமும் சந்தோஷமும் இருக்கா.

(2) சூரியன்—சுக்கிரன் :— இதுவும் முக்கியமான பார்வையாகும். விசேடமாகப் பெண்ணின் சூரியனுக்கும் ஆணின் சுக்கிரனுக்கும் இடையிற் பார்வை நல்லதாக இருக்கவேண்டும். நல்ல பார்வையிருப்பின் காதல் அன்பு ஒற்றுமை செல்வம் உண்டாகும். பார்வை கெட்டதாயின் ஒற்றுமையின்மை அதிக செலவு உண்டாகும். எனினும் ஓரளவு அன்பிருக்கும்.

(3) சூரியன்—செவ்வாய் :— விசேடமாகப் பெண்ணின் சூரியனுக்கும் ஆணின் செவ்வாய்க்கும் இடையில் நல்ல பார்வைவேண்டும். நல்லபார்வையிருந்தாற் கவர்ச்சியும் காதலும் அதிகரிக்கும். பெண்ணின் செவ்வாய்க்கும் ஆணின் சூரியனுக்குமிடையில் நல்ல பார்வையிருப்பின், சித்தியும் சுகமும் உண்டாகும். கெட்டபார்வை அல்லது சேர்க்கை சண்டை சச்சரவுகளுக்குக்காலாகும்.

(4) சூரியன்—வியாழன் :— முக்கியமானதன்று நல்ல பார்வை அதிட்டத்துக்கும் சௌபாக்கியத்துக்குங் கெட்டபார்வை துரதிட்டத்துக்கும் அதிக செலவுக்குங்காலாகும்.

(5) சந்திரன்—புதன் :— நல்ல பார்வை பொது நோக்கங்களையும் பிரயாணங்களையுங்காட்டும். கெட்ட பார்வையினாற் சிறு பிணக்குகளும் மனக்கசப்புகளும் உண்டாகும்.

(6) சந்திரன்—சுக்கிரன் :— முக்கியமானது. நல்ல பார்வையினால் ஒற்றுமையும் அன்பும் உண்டாகும். தனஞ்சேரும். குடும்ப வாழ்க்கை சௌக்கியமாக இருக்கும். கெட்ட பார்வையாகில், வீண் செலவு, ஆடம்பர வாழ்க்கை, வேண்டாவெறுப்பு, சுய இன்பங்களை நாடல் உண்டாகும்.

(7) சந்திரன்—செவ்வாய் :— எப்பார்வையும் காம உணர்ச்சிகளை அதிகரிக்கச்செய்யும். நல்ல பார்வையாயின் காம மிருக உணர்ச்சிகள் கட்டுப்பாட்டிற்குள்ளிருக்கும். கெட்ட பார்வையானால் இவை கட்டுக்குமீறிய பிணக்குகள் உண்டாகலாம்.

(8) சந்திரன்—சனி :— பார்வை கெட்டதாயின் அன்பு குறையும். இடர்ப்பாடுகள் தோன்றும். நல்ல பார்வையும் நன்றன்று. பார்வையில்லாதிருப்பது நன்று.



(9) சுக்கிரன்—செவ்வாய் :— முக்கியமானது. நல்ல பார்வை அன்புக்குங் காதலுக்குங் காலாகும். கவர்ச்சி உண்டாகும். பார்வை கெட்டதானால் அதிக பாலுணர்ச்சியினால் கெட்ட நடத்தைக்கும் ஒற்றுமையின்மைக்குங் காலாகும்.

(10) சுக்கிரன்—வியாழன் ;— பார்வை நல்லதாயின் குடும்பத்தில் ஒற்றுமையும், பணவசதிகளும் நன்மைகளும் உண்டாகும். பார்வை கெட்டதாயின் சுயநல நோக்கம், வீண்செலவு, பிரிவு உண்டாகலாம்.

(11) சுக்கிரன்—சனி ;— நல்ல பார்வையானால் அமைதியான அன்புடைய வாழ்க்கை உண்டாகும். பிற்காலத்தில் மணஞ் செய்வோருக்கு இது முக்கியமானதாகும். கெட்டபார்வை பிரிவு அன்பின்மை முதலியனவற்றுக்குக் காலாகும்.

(12) செவ்வாய்—சனி<br>
செவ்வாய்—யுறேனஸ்<br>
செவ்வாய்—நெப்ருயூன் } இவை பார்வையில்லாதிருப்பது நன்று.

சேர்க்கையோ கெட்ட பார்வையோ வெறுப்புக்குக் காலாகும். குடும்பம் அழிந்துவிடும்.

சாதகங்களிற் கிரகபாகைகள் குறிக்கப்படாவிடின் பார்வையை இராசிக்கு இராசியாக எடுத்துக்கொள்ளலாம். இராசிகள் 1, 5, 9 உத்தமம். 3, 11 மத்திமம். ஏனையவை பொருந்தா.

## ஆறும் அதிகாரம்

# முடிபுரை

நட்சேத்திரங்களின் அடிப்படையிலான 12 பொருத்தங்களை யும், இராசிகளின் அடிப்படையிலான 4 பொருத்தங்களையும் கிரக நிலைகளின் அடிப்படையிலான 2 பொருத்தங்களையும் பார்த்தோம். ஒவ்வொரு பொருத்தமும் இருந்தால் ஏற்படக்கூடிய நன்மைகளைத் தொகுத்துப் பார்ப்போம்:-

(1) ஆயுள், ஆரோக்கியம்-நட்சேத்திரம், இரச்சு, வேதை. ஆயுள், கிரக தோஷம்—5

(2) மனப்பொருத்தம், உடலுறவு:- கணம் யோனி வசியம் நாடி இராசியதிபர் (5)

(3) புத்திர பாக்கியம் - மகேந்திரம், இராசி, விருட்சம்.' புத்தி ரர் (4)

(4) செல்வம்-ஸ்திரீ தீர்க்கம். இப்பலா பலன்களைப் பற்றியும் கருத்து வேற்றுமைகளைக் காண்கிறோம். இவை பெரும்பாலும் மிகைப் படுத்தல்களும் பயமுறுத்தல்களுமாகும். ஆயுள் ஆரோக்கியம் பணம், பதவி, புத்திரர் முதலியனவற்றுக்கும் இவற்றுக்கும் தொடர்பில்லை. சோதிடத்தில் நம்பிக்கையிருந்தால் இவற்றைச் சாதகங்களிற் பாருங்கள். சொல்லுவோர் சொன்னாலும் கேட்போருக்கு மதியில் லையா? கல்யாணப் பொருத்தங்களை மன இணக்கம், அன்பு, ஒற் றுமை முதலியனவற்றைக் காட்டுஞ் சுட்டிகளாக மட்டுமே எடுத்துக் கொள்ளலாம். பொருத்தம் என்ற சொல்லின் கருத்து இதுவாகும். சோதிட மாமேதை ராமன் இவற்றை மன இணக்கச் சுட்டிகள் என்கிறார்.

எல்லாப் பொருத்தங்களும் மன இணக்கத்தைக் காட்டுஞ் சுட்டி களாகுமா என்பது அடுத்த கேள்வியாகும். சோதிடத்துடன் சோட ஹைகளும் மணிகளுடன் பதர்களும் சேர்ந்து விட்டன. இவற்றில் எவை முக்கியமானவை என்பது பற்றியுங் கருத்து வேற்று மைகளைக் காண்கிறோம். ஐந்து பொருத்தங்கள் இருந்தாற் செய் யலாம் என்கின்றனர். அவ்வாறாயின் எப்பொருத்தமாவது முக்கிய மானதன்று. வாக்கியத்தின்படி கிரக தோஷம், நட்சேத்திரம், கணம் ஸ்திரீ தீர்க்கம், யோனி, இராசி, இராசியதிபர், இரச்சு ஆகியவை



மிக முக்கியமாம். தக்கிண தேசச் சூத்திரராகிய எமக்கு யோனியும் இராசியதிபதியும் முக்கியமாம். பிரஸ்நமார்க்காவின்படி இராசி, அதிபதி, வசியம், மகேந்திரம் யோனி எனும் ஐந்தும் முக்கிய மானவை. வழக்கமாகப் பொருத்தம் பார்ப்போர் பலர் கணம். சஷ்ட அஷ்டமனம், வேதை, இரச்சு எனும் நான்கையும் வற்புறுத்துகின்ற னர். சிலர் நட்சேத்திரம் இரச்சு, வேதை எனும் மூன்றையும் முக்கிய மானவையாகக் கருதுகின்றனர். சுந்தரராஜன் என்பவர் நட்சேத்தி ரம், இராசி. இராசியதிபதி, இரச்சு எனும் நாலும் போதுமென வாதிக்கின்றார்.

இச்சிறு கட்டுரையின்படி இராசியதிபர் பொருத்தமே முக்கிய மானது.

வட இந்திய சோதிடர் முக்கியத்துவத்தைக் காட்ட ஒவ்வொரு பொருத்தத்துக்கும் புள்ளிகள் கொடுக்கின்றனர்.

| | | | |
|---|---|---|---|
| வருணம்—1 | | இராசியதிபர் | —5 |
| வசியம் | — 2 | கணம் | —6 |
| நட்சேத்திரம்—3 | | இராசி | — 7 |
| யோனி—4 | | நாடி | —8 |
| | | மொத்தம் | —36 |

மொத்தப் புள்ளிகள் 18 இற்குக் குறைந்தாற் பொருந்தாது. 18 இற்கும் 27 இற்கும் இடையிலாயின் மத்திமம். 27க்கு மேலாயின் உத்தமம். நாம் அஞ்சும் இரச்சும் வேதையும் இங்கு குறிப்பிடப்படா ததையும் தென்னிந்திய சோதிடர் பாராத நாடிக்கு அதிக முக்கியத் துவங் கொடுக்கப்பட்டிருப்பதையும் கவனிக்கலாம்.

இக்கட்டுரையிற் கூறப்பட்டனவற்றின் அடிப்படையில் இப்போது எனது அபிப்பிராயத்தைக் கூறுகிறேன். இஃது அபிப்பிராயமேயன்றி முடிந்த முடிவன்று. மேலும், ஆராய்ச்சிக்குரியதாகும். இங்கு மறுக் கப்படும் பொருத்தங்களுக்கு அறிவும் அனுபவமுமுடைய சோதிடர் திருப்தியான சோதிட விளக்கமோ அனுபவச் சான்றோ கொடுக்கின், அவற்றை ஏற்றுக்கொள்ள நாம் தயாராக இருக்க வேண்டும். இதுவே விஞ்ஞான மனப்பான்மையாகும்.

(1) நட்சேத்திரப் பொருத்தங்களின் அடிப்படையில் மட்டுமே செய்யலாம் செய்யப்படாது என்ற திடமான முடிவு கூற முடியாது. இப்பொருத்தங்களுக்கு நாம் கொடுக்கும் முக்கியத்துவம் தவறானது. கண் மூடித்தனமான மூட நம்பிக்கையாகும்.

(2) கூடியளவிற் பார்க்கினும் இப்பொருத்தங்களை மன இணக்கம், அன்பு, ஒற்றுமையைக் காட்டுஞ் சுட்டிகளாகவே எடுத்துக் கொள்ளலாம் இப்பொருத்தங்கள் இருந்தால், ஆயுள் ஆரோக்கியம், பணம், பதவி, புத்திரர் முதலியன கிடைக்குமென நினைப்பது பேதமையாகும் இவற்றுக்குச் சாதகங்களைப் பார்க்க வேண்டும்.

(3) சில பொருத்தங்களுக்கு அடிப்படையான சோதிட விளக்கமும் அனுபவச் சான்றும் இருக்கலாம். பல புராணச் சோடனைகளும் மிகைப்படுத்தல்களுமாகும்.

(4) குடும்ப வாழ்க்கை சீராக நடைபெறுவதற்குக் கணவன் மனைவிக்கு இடையில் அன்பு, ஒற்றுமை, காதல் கவர்ச்சி வேண்டும். முற்காலத்தில் போன்று இக்காலத்திற் சிறு வயதுக் கல்யாணங்கள் இல்லை. கல்வியும் பரவி விட்டது. ஆடு, மாடு காய் கறி கொள்வது விற்பது போன்று கல்யாணஞ் செய்ய வேண்டியதில்லை. ஆண் பெண் விருப்பத்துக்கு இடமளிக்க வேண்டும். பரஸ்பர விருப்பம் பொருத்தங்கள் எல்லாவற்றிலும் பார்க்கச் சிறந்ததெனப் பிரஸ்நமார்க்க கூறுகிறது. ஆனால், இன்று பணவாசை மேலோங்கி விட்டது.

(5) நட்சேத்திரங்களின் அடிப்படையிலான பல பொருத்தங்கள் மிகைப்படுத்தப்பட்ட சோடனைகளாகும். விளக்கமும் அர்த்தமுமற்றவை. சோதிடத்துக்குள் ஒரு சிட்டுக்குருவிச் சோதிடம். அனுபவச்சான்றுமில்லை. இவற்றைப் புறக்கணிக்கலாம். சுமை குறையட்டும். 27 பொருத்தங்கள் பத்துப் பொருத்தங்களாகவில்லையா?

(6) இவ்வாறு செய்வதிலுள்ள கஷ்டத்தையும் நன்கறிவேன். வேரூன்றிய பழைய கருத்துக்களை இலகுவிற் களைய முடியாது. ஊறிப் போன பழக்க வழக்கங்களை ஒரு நாளில் மாற்ற முடியாது. அறிவின்மை, அவா, பயம் முதலியவைகளே மூடநம்பிக்கைகளுக்குக் காரணங்களாகும். படித்தவர் பகுத்தறிவுடையவராயினும் அவாவுக்கும் பயத்துக்கும் அடிமைகளாக இருப்பதைக் காண்கிறோம். பல பொருத்தங்களைப் பார்ப்பதினால் மக்கள் திருப்தியடைகின்றனர். திருப்தியே இன்பம். பயம் முற்றாக நீங்காவிட்டால் திருப்திக்காக வேண்டுமானால், பின்வருவனவற்றையும் பார்க்கலாம். சுமையை முற்றாகத் தீர்க்க முடியாது விட்டாலுங் குறைத்தல் நன்று.

(அ) நட்சேத்திரம் — 3, 5, 7, 10, 12 (1ங் கால்) 14 (4ங் கால்), 16 (3ங் கால்), 19, வைநாசிகம் — இவற்றைத் தவிர்த்தாற் போதும்.

(ஆ) யோனி — பகை யோனியைத் தவிர்த்தாற் போதும்.



(இ) இரச்சு — 10, 19ம் நட்சேத்திரங்களைத் தவிர்த்தாற் போதும்.

(ஈ) வேதை — இதைத் தவிர்ப்பது சுலபம்.

(7) என்ன சொன்னாலும், பலர் தொடர்ந்தும் எல்லாப் பொருத்தங்களையும் பார்க்க விரும்பலாம். இவர்களுடைய நன்மைக்காகவே நட்சேத்திரங்களின் அடிப்படையிலான இப்பொருத்தங்களுக்கு விரிவான விதி விலக்குகளைக் கூறியிருக்கிறேன். இவற்றையாவது பார்த்துப் பயனடையலாம். எனினும் நாம் என்ன கூறினாலும் பலருக்கு இப்பொருத்தங்களில் நம்பிக்கையிருக்கலாம். அவ்வாறாயினும், குருடு குருடுக்கு வழிகாட்ட வேண்டியதில்லை. செய்யலாம் செய்யப்படாது என முருங்கையடிச் சோதிடம் வேண்டியதில்லை. சற்று பகுத்தறிவுடன் பாருங்கள். ராமன் முதலிய பிரபல சோதிடர் நட்சேத்திரங்களிடையில் இணக்க அட்டவணைகள் வெளியிட்டிருக்கின்றனர். முருங்கையடிச் சோதிடங் கேளாது இவ்வட்டவணைகளை ஏற்றுக்கொள்வது நன்றாகும். இதற்கும் தடையுண்டு. எமது சமுதாயத்தில் நான் எனக்குத் தெரியும் என்ற அகங்காரம் தலைவிரித்தாடுகிறது. தலைவர்களையே நாம் மதிப்பதில்லை. அவருக்கு என்ன தெரியும் எனக் கேட்கிறோம். எவ்வாறு சமூகம் முன்னேறும்?

(8) இராசியதிபர்ப் பொருத்தமே மிகவும் முக்கியமானது. சோதிட அடிப்படையின் விளக்கமுடையது. இப்பொருத்தம் இருந்தால் ஏனைய பொருத்தங்கள் பல பார்க்க வேண்டியதில்லையெனப் பல நூல்கள் கூறுகின்றன. இப்பொருத்தம் பார்க்கும் போது பராசரர் மித்துரு சத்துருக் கொள்கையைப் பின்பற்ற வேண்டும் இது திருக்கணிதத்திற் கொடுக்கப்பட்டிருக்கிறது, விரும்பினால் இலக்கினாதிபர்களுக்கும் சந்திர நவம்சாதிபர்களுக்கும் இப்பொருத்தம் பார்க்கலாம்.

(9) இராசிப் பொருத்தம் இரண்டாவது முக்கியமானது. விரும்பினால் இலக்கினத்துக்கும் இப்பொருத்தம் பார்க்கலாம்.

(10) கிரக தோஷம் சோதிடமாகும். எமது பஞ்சாங்க கணிதம் பெரும்பாலுந் தவறானது. சோதிட விதிகளின் படி இதை மதிப்பிட வேண்டும். இதைப்பற்றி ஐயமிருந்தால். முடிபு கூறமுன் சாதகங்களைப் பார்க்கலாம்.

(11) சில பொருத்தங்களை மிகை நிரப்பிகளாகப் பார்க்கலாம். இவற்றுடன் சாதகங்களையும் பார்க்கலாம். இலக்கினம், 7, 8ம் வீடுகள் முக்கியமானவை இவ்வீடுகளில் இருக்குங் கிரகங்கள்

இவற்றுக்குப் பார்வைகள் வீட்டதிபர்கள் அவர்களுடைய சேர்க்கைகள் பலம் அவர்களுக்குப் பார்வைகள் பாப கார்த்தரி சுப கார்த்தரிகள் யோகங்கள் களத்திரகாரகள் இவற்றைச் சோதிட விதிகளின்படி பாருங்கள்.

(12) பார்க்க வேண்டியவை:- (1) இராசியதிபர் இலக்கினதிபர் பொருத்தம் (2) இராசி இலக்கினப் பொருத்தம் (3) கிரக தோஷம், கிரக நிலைகள் (4) புத்திரர். புத்திரருக்குச் சாதகங்களைச் சோதிட விதிகளின்படி பார்க்க வேண்டும். பலர் இன்று இதைக் கவனிப்பதில்லை. இளமையிற் புறக்கணிப்பினும் பிற்காலத்தில் உணர்வர். புத்திரபாக்கியமே பெருஞ் செல்வம்.

"பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்லபிற" — திருக்குறள்

"மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லைத்தாம் வாழும் நாளே" (புறம்)

(13) "நெஞ்சு பொறுக்கு திலையே — இந்த
நிலை கெட்ட மனிதரை நினைத்து விட்டால்.
அஞ்சி அஞ்சிச் சாவர் — இவர்
அஞ்சாத பொருளில்லை அவனியிலே
வஞ்சப் பேய்கள் என்பார் — இந்த
மரத்தில் என்பார் அந்தக் குளத்தில் என்பார்
துஞ்சுது முகட்டில் என்பார் — மிகத்
துயரப்படுவார் எண்ணிப் பயப்படுவார்" (பாரதியார்)



அட்டவணை I

| நட்சேத்திரம் | | கணம் | யோனி | விருட்சம் |
|---|---|---|---|---|
| 1. | அச்சுவினி | தேவ | ஆண் குதிரை | காஞ்சிரை |
| 2. | பரணி | மனுட | ஆண் யானை | நெல்லி |
| 3. | கார்த்திகை ... | ராட்சத | பெண் ஆடு | அத்தி* |
| 4. | ரோகிணி ... | மனுட | ஆண் பாம்பு | நாவல்* |
| 5. | மிருகசீரிடம் .. | தேவ | பெண் பாம்பு | கருங்காலி |
| 6. | திருவாதிரை ... | மனுட | பெண் நாய் | செங்காலி |
| 7. | புநர்பூசம் ... | தேவ | பெண் பூனை | மூங்கில் |
| 8. | பூசம் | தேவ | ஆண் ஆடு | அரசு* |
| 9. | ஆயிலியம் .. | ராட்சத | ஆண் பூனை | புன்னை* |
| 10. | மகம் ... | ராட்சத | ஆண் எலி | ஆல்* |
| 11. | பூரம் ... | மனுட | பெண் எலி | பலாசு* |
| 12. | உத்திரம் ... | மனுட | ஆண் மாடு | அலரி* |
| 13. | அத்தம் .. | தேவ | பெண் எருமை | அத்தி* |
| 14. | சித்திரை ... | ராட்சத | பெண் புலி | வில்வம் |
| 15. | சுவாதி .. | தேவ | ஆண் எருமை | மருது |
| 16. | விசாகம் ... | ராட்சத | ஆண் புலி | விளா |
| 17. | அனுஷம் | தேவ | பெண் மான் | மகிழ் |
| 18. | கேட்டை .. | ராட்சத | ஆண் மான் | பராய்* |
| 19. | மூலம் ... | ராட்சத | ஆண் நாய் | மரா* |
| 20. | பூராடம் ... | மனுட | ஆண் குரங்கு | வஞ்சி* |
| 21. | உத்திராடம் ... | மனுஷ | ஆண் கீரி | பலா* |
| 22. | திருவோணம் ... | தேவ | பெண் குரங்கு | எருக்கு* |
| 23. | அவிட்டம் ... | ராட்சத | பெண் சிங்கம் | வன்னி |
| 24. | சதயம் ... | ராட்சத | பெண் குதிரை | கடம்பு |
| 25. | பூரட்டாதி ... | மனுஷ | ஆண் சிங்கம் | தேமா* |
| 26. | உத்திரட்டாதி ... | மனுஷ | பெண் மாடு | வேம்பு* |
| 27. | ரேவதி ... | தேவ | பெண் யானை | இருப்பை* |

* பால் மரம்

## அட்டவணை II

### பார்க்கவேண்டியவை

I. இராசியதிபர் பொருத்தம் ;—

இராசியதிபர்கள் ஒருவராயினும் ஒருவருக்கொருவர் நட்பாயினும் சமன்—நட்பாயினும்—உத்தமம். ஒருவருக்கொருவர் சமன்களாயினும், நட்பு பகைகளாயினும் மத்திமம்.

ஒருவருக்கொருவர் பகைவராயினும், சமன்—பகையாயினும் பொருந்தா.

**கிரகப்பகை, சமன், நட்பு அட்டவணை**

1. சூரியன் ;— நட்பு — சந்திரன், செவ்வாய், வியாழன்; சமன் — புதன்; பகை—சனி, சுக்கிரன்.
2. சந்திரன்; - நட்பு—சூரியன், புதன்; சமன்—செவ்வாய், வியாழன், சுக்கிரன், சனி.
3. செவ்வாய் :— நட்பு—சூரியன், சந்திரன், வியாழன்; சமன்—சுக்கிரன், சனி; பகை—புதன்.
4. புதன் ;— நட்பு—சூரியன், சுக்கிரன்; சமன்—செவ்வாய், சனி, வியாழன்; பகை—சந்திரன்.
5. வியாழன்;— நட்பு—சூரியன், சந்திரன், செவ்வாய், சமன்—சனி; பகை—புதன், சுக்கிரன்
6. சுக்கிரன்;— நட்பு—சனி, புதன், சமன்—வியாழன், செவ்வாய்; பகை—சூரியன், சந்திரன்.
7. சனி :— நட்பு—சுக்கிரன், புதன்; சமன்—வியாழன்; பகை—சூரியன், சந்திரன் செவ்வாய்.

இலக்கினதிபர்களுக்கும் சந்திரநவாம்சாதிபர்களுக்கும் இப்பொருத்தம் பார்க்கலாம்.

II. இராசிப் பொருத்தம் ;—

உத்தமம்—1, 5. 9, 7, 10, 11
மத்திமம்—3, 4
பொருந்தா—6' 8, 2. 12

உத்தம இராசியதிபர் பொருத்தம் இருந்தால் இராசிப் பொருத்தம் பார்க்க வேண்டியதில்லை. இலக்கினத்துக்கும் இப்பொருத்தம் பார்க்கலாம். உத்தம இலக்கினதிபர் பொருத்தம் இருந்தால் இது பார்க்கவேண்டியதில்லை,



III. பலர் இவற்றுடன் திருப்தியடையாதிருக்கலாம். மேலும் சாவதானமாக இருக்க விரும்பலாம், இவர்களும் பின்வருவனவற்றைத் தவிர்த்தாற் போதும்.

(அ) நட்சேத்திரங்கள்—3, 5, 7, 10, 12 (1 ங்கால்) 14 (4 ங்கால்), 16 (3 ங்கால்), 19, வைநாசிகம்.
(ஆ) பகை யோனி
(இ) இரச்சு :— 10, 19ம் நட்சேத்திரங்கள்
(ஈ) வேதை

IV. கிரகதோஷம் முக்கியமானது. எந்த அட்டவணையின்படியுங் கிரகதோஷங் கணிக்கலாம். ஆனுற் சோதிட விதிகளின்படி சரியாகக் கணிக்கவேண்டும். ஆதிபத்தியத்தைப் புறக்கணிக்கமுடியாது. மேலும், கிரகங்களின் ஆட்சி, உச்சம், பகை, நீசம், அஸ்தமனம், வக்கிரம், வர்க்கோத்தமம், அவற்றுக்குப் பார்வைகள் முதலியனவற்றைக் கவனிக்க வேண்டும். பகை நட்பு வீடுகளை அறிவதற்குத் திருக்கணித அட்டவணையைப் பின்பற்றவேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| சூரியன்-நட்பு<br>செவ்வா-நட்பு<br>சனி-சமன்<br>ராகுகேது-நட்பு | சூரியன்-உச்சம்<br>செவ்வா- ஆட்சி<br>சனி-நீசம்<br>ராகுகேது-பகை | சூரியன்-பகை<br>செவ்வா-சமன்<br>சனி-நட்பு<br>ராகு-உச்சம்<br>கேது-நீசம் | சூரியன்-சமன்<br>செவ்வா-பகை<br>சனி-நட்பு<br>ராகுகேது-நட்பு |
| சூரியன்-பகை<br>செவ்வா-சமன்<br>சனி- ஆட்சி<br>ராகுகேது-பகை | | | சூரியன்-நட்பு<br>செவ்வா-நீசம்<br>சனி-பகை<br>ராகுகேது-பகை |
| சூரியன்-பகை<br>செவ்-உச்சம்<br>சனி-ஆட்சி<br>ராகுகேது-நட்பு | | | சூரியன் ஆட்சி<br>செவ்வா-நட்பு<br>சனி-பகை<br>ராகுகேது-பகை |
| சூரியன்-நட்பு<br>செவ்வா-நட்பு<br>சனி-சமன்<br>ராகுகேது-நட்பு | சூரியன்-நட்பு<br>செவ்வா-ஆட்சி<br>சனி-பகை<br>ராகு-நீசம்<br>கேது-உச்சம் | சூரியன்-நீசம்<br>செவ்வா-சமன்<br>சனி-உச்சம்<br>ராகுகேது-நட்பு | சூரியன்-சமன்<br>செவ்வா-பகை<br>சனி-நட்பு<br>ராகுகேது-நட்பு |

V. சாதகங்கள் பார்த்தல் - குறைந்தபட்சம் 1, 7, 8 ஆம் வீடுகளுக்குப் பலன் பார்க்கவேண்டும். (அ) வீடு, வீட்டில் இருக்குங் கிரகங்கள், வீட்டைப் பார்க்குங் கிரமங்கள் பாவகார்த்திரி. (ஆ) அதிபன் - அதிபன் இருக்கும் வீடு, சேர்ந்த கிரகங்கள் பார்க்குங்கிரகங்கள், பலம், பாவகார்த்திரி.

களத்திரகாரகன் சுக்கிரன் - இருக்கும் வீடு, சேர்ந்த கிரகங்கள், பலம், பாவகார்த்திரி.

VI. புத்திரபாக்கியம் —

பஞ்சாங்கத்தை நம்பாது இப்பொருத்தத்தைச் சோதிட விதிகளின்படி பார்க்கவேண்டும்.

---

## குறிப்பு நூல்கள்


1. திருக்கணித பஞ்சாங்கம்.
2. வாக்கிய பஞ்சாங்கம்
3. பலதீபிகை — மந்தரேசர்
4. உத்தர காலாமிர்தம் — காளிதாசர்.
5. ஜாதக பரிஜாதம் — வைத்தியநாதர்.
6. ஜாதக சந்திரிகா — வேதாந்த தேசிகர்.
7. சோதிடப் பிரகாசிகை
8. விதானமாலை — நாராயண சுவாமிகள்.
9. பெண்கள் ஜனன ஜாதக பலபோதினி.
10. சந்தான தீபிகை — இராமலிங்க முனிவர்.
11. கல்யாணப் பொருத்தங்கள் — பால ஜோதிடம்.
12. காதலித்தாலென்ன? — பாலஜோதிடம்.
13. Articles in Astrological Magazine.
14. Stri Jataka — B. Suryanarain Rao.
15. How to Judge a Horoscope Vol. I & II — B. V, Raman
16. Muhurtha — B. V. Raman.
17. Stellar Astrology Reader IV K. S. Krishnamurthi.
18. Astrology and Human Sex Life — By Vivian E, Robson.
19. Astro - Analysis of Matrimonial Concord—B.M.Bharadwaj.
20. Astrology & Marriage —Sandipani Chauduri.
21. The Stars and Your Love Life — Pandit Gopesh Ojha.
22. Astrology & Marriage — Sephariae

கல்யாண பொருத்தங்கள்

*Distributors :*

**VIJAYALUCKSHMI BOOK DEPOT,**
248, GALLE ROAD,
WELLAWATTE,
COLOMBO-6.

T'pho e : 88930 Price : **Rs. 8-00**

22.

...d at The Kumaran Press, 201, Dam St., Colombo-12- Dial : 21388